[1974 டிசம்பர் 18

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தான் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (இரண்டாவ துதிருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள், சட்டங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த விவாதத்திலே பங்கு கொண்டு எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையிலே ஒருசில கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன். இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் தேவையற்றது, இதிலே ஒரு வாதமும் இல்லையென்று குற்றச்சாட்டுகள் எல்லாம் ஆளுங்கட்சித் தரப்பிலே யிருந்து கூறப்பட்டிருந்தது. நான் மறுபடியும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே வலுவிருக்கிறது, எனென்றால், இந்நாட்டு மக்கள் இந்த

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அமைச்சரவை மீது நம்பிக்கையில்லையென்று இப்பொழுது தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒலியைத் தான், அந்த உணர்ச்சியைத்தான் நாங்கள் இந்த மன்றத்திலே வெளிப் படுத்துகிறோமேயொழிய, தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியோ, குறைவு மனப்பான்மையோ அல்ல. சாதாரணமாக இந்த மன்றத்திலே ஆளுங்கட்சியினருக்குப் பெரும்பான்மையிருக்கலாம். ஆனால் நிலைமை என்ன என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும்.

இந்தச் சமயத்திலே பாராளுமன்றத்திலே, அதுவும் இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே சர்ச்சில் பிரைம் மினிஸ்டராக இருந்து கொண்டிருந்தார்கள். அங்கே அந்த யுத்தத்தைப் பற்றிப் பலவிதமான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்பொழுது எதிர்த் தரப்பிலேயிருந்து ஓர்பெலிஷா என்ன கூறினர்கள்?

" Mr. Churchill was winning debates, after debates but he was losing battle after battle "

என்ற கருத்தினைக் கூறினர்கள். அதேமாதிரி, ஒருவேளை இந்த மன்றத்திலே தங்களுக்கு அதிகமான, மிகப் பெரும்பான்மை இருக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு தங்களிடம் வலுவிருக்கலாம். ஆனால், மக்கள் உங்களைச் சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலிலே கூறிக் கொண்டு அடுத்த கருத்துக்குச் செல்கிறேன்.

இந்த பைல் விவகாரம் பற்றி என்னுடைய கட்சியின் சார்பிலே நான் ஒரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்ன இந்த பைல் விவகாரம் என்று பலரும் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக, எஸ்டிமேட்ஸ் கமிட்டியால் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையின் அடிப்படையிலே இந்த அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டும், ராஜினாமா செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதிலே ஒரு பகுதியினை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

உதாரணமாக, இந்த அறிக்கையின் 22 ஆவது பாராகிராஃபிலே கூறியிருக்கிற கருத்து மிகப் பெரிய ஊழல் எப்படி நடந்திருக்கிறது, அது எப்படி தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரங்களையெல்லாம் தெரிவிக்கிறது. அந்தப் பகுதியைத் தங்களுடைய அனுமதியின் பேரிலே நான் படிக்க விரும்புகிறேன்.

'On the 2nd July 1970, a group of 19 persons mostly influential businessmen joined together and organised a firm called "A. M. Associated Traders". . . . '

சார், இந்த நிர்வாகமானது மிகச் செல்வாக்குப் படைத்தவர்கள் 19 நபர்களால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் யார் யார் என்ற விவரங்கள் எல்லாம் அந்தக் குறிப்பிலே கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதிலே, நமது மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சரவர்களுடைய உறவினர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள் என்ற விவரத்தையும் இந்த மன்றத்திலே எனக்கு முன்பு எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து பேசியவர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் மீண்டும் மறுக்கிறேன். எனக்கு உறவினர்கள் யாரும் இல்லை—பதிவேட்டில் பதிய வேண்டுமென்பதற்காக, உண்மையைத் தெரிவிப்பதற்காகச் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இங்கு எங்களுக்குத் தந்திருக்கிற தகவல்கள் (12) டி. ஆர். மணி அவர்களும் அதேமாதிரி (19) எஸ். இராஜாமணி முதலியார் என்று சொல்கின்றவர்கள் மந்திரிக்கு உறவினர்கள் என்று சொல்கின்றார்கள். அதிலும், குறிப்பாக இது உண்மையில்லையென்று அவர்கள் மறுத்தால் அதற்கு மேலே சொல்வது சரியல்லவென்பதுதான் என்னுடைய வாதமாக இருக்கிறது. ஆனால், இந்த மாதிரி நிகழ்ச்சி நடப்பதற்குத் தாங்களும் அதற்கு உடந்தையாக இருந்திர்களே என்பதற்காக நான் மெத்த வேதனைப்படுகிறேன், வருந்துகிறேன். ஏனென்றால், இந்தமாதிரியான நிகழ்ச்சி உங்கள் காலத்தில் நடந்திருக்கிறதே, இந்தத் தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டும். நீங்கள்தானே இந்த இலாகாவிற்குப் பொறுப்பேற்றிருந்தீர்கள்.

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

25—1—1971, 9—3—1971, 9—4—1971 ஆகிய 3 தேதிகளில், 3 தடவை டெண்டர் விடப்பட்டிருக்கிறது. ஆனால், டெண்டர் விடாமல், 'நெகோஷியேட்டட் டெண்டர்' என்ற முறையிலே தாண்டவராயன் என்பவருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அது சட்டத்திற்குப் புறம்பானதாகும். நெகோஷியேஷன் எப்பொழுது ஏற்படும் என்பதை நாம் சற்று ஆழ்ந்து கவனத்தில் இருத்தியாக வேண்டும். அவர், ஏதாவது டெண்டர் கொடுத்திருந்தால் நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால், அவர் டெப்பாசிட் கட்டவில்லை. எஞ்சியிருக்கிற அவ்வளவு பொருள்களையும் நான் எடுத்துக் கொள்கிறேன் என்று கூறின அடிப்படையிலே, பணத்தையும் கொடுத்து விடுகிறேன் என்று அவர் கூறிய முறையிலே, அதைப்பற்றி நியாயமான முறையிலே, தெளிவான முறையிலே, திட்டவட்டமான முறையிலே விசாரணை நடத்தாமல் உத்தேசமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதான் என்னுடைய குற்றச்சாட்டு. அந்த பைலிலே 8—4—1971-லே முதல் தடவையாக நமது உணவு அமைச்சரவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, 24—5—1974 அதன் அடிப்படையிலே ஒரு உத்தரவும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு விவசாய அமைச்சர் உயர்திரு சி. பா. ஆதித்தனர் அவர்கள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள், அதேமாதிரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். இவ்வளவு மிகவும் தவறான காரியம் நடந்திருக்கிற நேரத்திலே, இலாகாவிலே என் அதைப்பற்றித் துருவி ஆராயவில்லை, பரிசீலிக்கவில்லையென்று நான் கேட்க விரும்புகிறேன். வேண்டுமென்றே செய்யப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டினை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

இந்த அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதையும் நாம் எல்லோரும் உணர்ந்தவர்களாக இருக்கிறோம். அதேமாதிரி சர்க்குலேஷன் உத்திரவிற்காக ஒரு நோட் வந்திருக்கிறது. அதிலே வேறு சில காரியங்களும் நடந்திருக்கின்றன. நாங்கள் அந்த சர்க்குலேஷன் நோட்டைப் பார்த்து அதைப்பற்றி நோட் எடுக்கிறபோது 7 ஆம் பக்கமும் 8 ஆம் பக்கமும் ஒன்றாக ஒட்டி வைக்கப்பட்டிருக்கிறது, திருமதி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

அனத்தநாயகி அவர்களும் நாங்களும் அதைப் பார்த்து ஓட்டி வைத்திருக்கிறோமே உள்ளே என்ன இருக்கிறது என்று தெரியாத அளவிலே ஓட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு பெரிய ஊழல், மோசடி நடைபெற்றிருக்கிறது. சரியான முறையிலே இந்த அமைச்சரவை நடக்காமல் இருப்பது நியாயம்தானே, தர்மம்தானே, சாமான்யர்கள் நாங்கள் என்று சொல்லக்கூடியவர்கள், சாமான்யர்களின் ஆட்சி நடக்கிறது என்று சொல்கிற நேரத்திலே இவ்வளவு பெரிய தவறு நடந்திருக்கிறது. யார் இந்த காண்டவராயன் என்பதைப் பற்றிப் பார்க்கிற நேரத்திலே பக்கம் 7-ல் கூறப்பட்டிருக்கிறது, தங்கள் அனுமதியுடன் படிக்க விரும்புகிறேன்.

'Another in the name of Thiru R. Thandavarayan, a false name assumed by Thiru S. Arunagam of Messrs. Asoka Traders.

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆறுமுகம் என்பவர் தன்னுடைய பெயரை தாண்டவராயன் என்ற பெயரிலே கொடுத்திருக்கிறார் என்று ரிப்போர்ட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆள்மாறாட்டம் நடைபெற்றிருக்கிறபோதுகூட இந்த இலாகாவிலே புரிந்துகொள்ளவில்லையே என்பது வேதனைப்படக் கூடியதாக இருக்கிறது. இது நியாயந்தானே; நல்லாட்சி ஜனநாயக ஆட்சி கடமை, கண்ணியம், கட்டுப்பாடுக்கு உறைவிடமாக இருக்கிற ஆட்சி என்று சொல்லக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியா என்று அறிய விரும்புகிறேன். என் இந்தமாதிரி நெகோஷியேஷனுக்கு விடவேண்டும்? இந்த டெண்டரை எப்படி அக்சப்ட் பண்ணினார்கள் என்று அந்த பைலே பார்க்கும்போது

package offer is accepted' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எதற்காக பேக்கேஜ் ஆபரை ஒத்துக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி நாங்கள் தெரியாதவர்களாக இருக்கிறோம், அதற்கு விளக்கம் தேவை. சுவையான சூடான விவாதம் என்று நினைக்கத் தேவையில்லை. இதற்கு அரசாங்கம்தான் முழுப் பொறுப்பாக இருக்கிறது. தஞ்சாவூர் மார்க்கெட்டிங் பெடரேஷனிலிருந்து 20—3—71 இல் ஒரு கடிதம் வந்திருக்கிறது என்ற அடிப்படையிலே இந்த விவகாரம் நடந்திருக்கிறது. வி. எஸ். தியாகராஜ முதலியார் பற்றி இங்கே என்ன என்ன பேசியிருக்கிறார்கள் என்பதை எங்களைப் போன்றவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்களைப் பற்றி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

குற்றச்சாட்டு, அவர்களுடைய நிறுவனத்தைப் பற்றி குற்றச் சாட்டுகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. சர்சார்ஜ் புரஸ்டிங்ஸ் சொஸைடியின் பேரிலே நடந்துகொண்டிருக்கிறது என்று உணவு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கோணிப் பைகள காணவில்லே என்றெல்லாம் விவாதங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அத்தகைய நபர் சொல்வதை ஏற்றுக்கொண்டு இந்தமாதிரியான ஒரு பேக்கேஜ் டீல் நடந்திருக்கிறது என்றால் இதிலே தப்பு இல்லேயா தவறு இல்லேயா, நிச்சயமாக உண்டு, ஊழல் நிறைந்ததாக இருக்கிறது. நாங்கள் மட்டுமல்ல, பொது மக்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள். ஆகவே இந்த அமைச்சரவை ராஜினமா செய்ய வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் அரசியலுக்காக இதைச் சொல்லவில்லே. இது நியாயமல்ல, தர்மம் அல்ல, அறமல்ல, நீங்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய மிகப் பெரிய சேவை இந்தச் சட்டமன்றத்தைக் கலேத்துவிட்டு மறு தேர்தலுக்கு நிற்க வேண்டும், மக்கள் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். யாரையும் தாக்க வேண்டுமென்று, வேண்டுமென்றே இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லவில்லே. இது அபாண்டமான குற்றச் சாட்டு அல்ல, நியாயமான குற்றச்சாட்டு, எல்லாத் தரப்பினராலும் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு. எவ்வளவு பணம் வரவேண்டியிருக்கிறது என்பதைப் பார்த்தால் அப்பண்டிக்ஸை பார்த்தால் 13 ஆவது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். யார் யார் எல்லாம் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறபோது சில பெயர்களேயெல்லாம் அதிலே கொடுத்திருக் கிறார்கள்.

1. திரு. ஓ. எஸ். ஷண்முகவேலு என்பவரிடமிருந்து ரூ. 5,46,705 வரவேண்டியிருக்கிறது.

2. திரு. ஜெகன் மோகன் ராவ் என்பவரிடமிருந்து ரூ. 2,02,012 வரவேண்டியிருக்கிறது.

3. திரு. டி. கிருஷ்ணம நாயுடு என்பவரிடமிருந்து ரூ. 1,12,494 வரவேண்டியிருக்கிறது.

4. திரு. கே. முருகேச முதலியார் என்பவரிடமிருந்து ரூ. 5,18,135 வரவேண்டியிருக்கிறது.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

5. திரு. அப்துல் வகாப் என்பவரிடமிருந்து ரூ. 7,95,955 வரவேண்டியிருக்கிறது.

6. திரு. டி. ஆர். ஜெகதீசன் என்பவரிடமிருந்து ரூ. 3,94,161 வரவேண்டியிருக்கிறது.

7. திரு. அப்துல் சலாம் என்பவரிடமிருந்து ரூ. 4,34, 053 வரவேண்டியிருக்கிறது.

8. திரு. ஷேக் ராவுத்தர் என்பவரிடமிருந்து ரூ. 7,25,939 வரவேண்டியிருக்கிறது.

9. திருமதி கற்பக அம்மாள் என்பவரிடமிருந்து ரூ. 3,80,305 வரவேண்டியிருக்கிறது.

10. திரு. கோபால் செட்டியார் என்பவரிடமிருந்து ரூ. 2,37,573 வரவேண்டியிருக்கிறது.

இப்படிப் பார்க்கிற நேரத்திலே நடத்திருக்கிற ஊழல் எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்பது நமக்கே தெளிவாகத் தெரியும். இதிலே பல பரிந்துரைகளைக் கூறியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட வழக்குகளை பைசல் செய்வதற்கு உதவியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதிலே வழக்கறிஞர்களை நியமனம் செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். கடைசியாக சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் எப்படி நடக்கவேண்டுமென்ற ஒரு பரிந்துரையையும் இதிலே சொல்லி இருக்கிறார்கள்.

'The Committee further recommends that in all such cases where the settlement of account has not yet been determined, speedy action should be taken by the Civil Supplies Department to determine those accounts and to proceed for the recovery of the arrears from the defaulters.'

என்று இருக்கிறது. இருக்கின்ற நிலுவைகள் அத்தனையையும் வசூல் செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதோ தவிடு வைத்திருக்கிறார்கள், உமி வைத்திருக்கிறார்கள் என்று கூறி....

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏதோ நடவடிக்கையே எடுக்கவில்லை என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். ஹைகோர்டிலே இருக்கிறது. நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நாற்பத்திமூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் ஆர். ஆர். ஆக்டின்கீழ் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. சண்முகவேலு என்று சொன்னார்கள். அவர் சொத்தை ஈடுகொடுத்து மாதாமாதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இல்லை, நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மாதிரி விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள். இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையைப் படித்த நேரத்திலே நாங்கள் எல்லாம் நினைத்தோம். இது சம்பந்தமாக நல்ல சுமுகமான நிலைமை உருவாகும் என்று எதிர் பார்த்தோம். சாதாரணமாக இப்படிப்பட்ட குற்றச்சாட்டு இருக்கிற நேரத்திலே இந்த இலாகாவின் பொறுப்பையேற்றிருக்கிற அமைச்சர் நிச்சயமாக ராஜினமா செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக மத்திய நிதியமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் முந்திரா டீல் என்பது சம்பந்தமாக எல்.ஐ.சி.-யில் ஒரு கோடி ரூபாய் ஊழல் வந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டு வந்த நேரத்திலே அவர்கள் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார்கள். அதிலே நடந்த விசாரணைகளின் முடிவு என்ன ஆயிற்று என்பதையெல்லாம் நான் இங்கே எடுத்துக் கூறத் தேவையில்லை. அது சம்பந்தமாக திரு. கிருஷ்ணமாச்சாரி ராஜினமா கடிதம் எழுதியபோது பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் என்ன கருத்தைக் கூறியிருக்கிறார்கள் என்பதை தங்கள் அனுமதியேடு படிக்க விரும்புகிறேன்.

'Despite the clear finding of the Commission, so far as you are cencerned, I am most convinced that your part in this matter was the smallest and that you did not know what was done'.

என்று கூறியிருக்கிறார்கள். அந்தமாதிரியான ஒரு நிகழ்ச்சியிலே திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களுடைய பங்கு மிகச் சொற்ப மாக இருந்திருக்கிறது அவர்களுக்கு உண்மை தெரிந்து இருக்க வில்லை என்று தெரிந்து திரு. நேரு அவர்கள் இப்படி எழுதியிருக் கிறார்கள். ஆனால் நேர்மாறாக இங்கே. . .

[1974 டிசம்பர் 18

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் காங்கிரஸ் கட்சித் தலைவரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். குற்றம் நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் உணவு இலாக்காப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இந்தக் குற்றங்கள் நடந்தன, நான் உணவு இலாக்கா பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த நேரத்தில்தான் இந்தக் குற்றங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது, இந்த உணவு இலாக்கா என்னிடம் இருக்கும்பொழுதுதான் போலீசார் தாண்டவராயனைக் கைது செய்தார்கள், மற்றவர்களும் கைது செய்யப்பட்டு வழக்கு வந்தது. இந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு உடந்தையாக இருந்தோம், போலீசார் நடவடிக்கை எடுப்பதற்கு உதவி செய்தோம் என்பதற்காக ராஜினமா செய்ய வேண்டு மென்று சொல்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நீங்கள் அதற்குச் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. அதிலும் குறிப்பாக இந்த இலாக்காவின் பொறுப்பை ஏற்றிருக்கின்ற காரணத்தால் அதற்கான முக்கிய பொறுப்பும், உத்தரவாதமும் தங்களுடையது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் விளக்கத்திற்காகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்கும் மனச்சாட்சி இருக்கிறது. எங்கேயாவது, எந்த இடத்திலேயாவது இந்த வழக்கு மேற்கொண்டு நடக்கக்கூடாது, தாண்டவராயன் மீதும், மற்றவர்கள் மீதும் வழக்கு நடக்கக்கூடாது என்று நான் தடுத்திருக்கிறேனா? அதற்கு எங்கேயாவது ஆதாரத்தை யாராவது சொல்ல முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த அமைச்சரவர்களுடைய மனச்சாட்சியைச் சோதனை செய்யும் கருவி எங்களைப் போன்றவர்களின் கைகளில் இல்லை. பொதுவாக பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள், இந்த மாமன்றம் என்ன நினைக்கிறது என்பதைப்பற்றி நான் கூறத் தேவையில்லை. அமைச்சரவை உங்கள் விவகாரம், அது உங்கள் பிரச்னை என்ற இந்த அளவோடு நான் இந்தப் பிரச்னையை விட்டுவிடுகிறேன்.

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்தபடியாக, இந்தமாதிரியான புகார்கள் எற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஒருசில வழி முறைகளைக் கூறுகிறது. 1951 ஆம் ஆண்டு பிளானிங் கமிஷனி லிருந்து என்ன செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு ஆலோசனையை ஏ. டி.கோர்வாலா என்ற பெரியாரிடம் கேட்டார்கள். அவர்கள் இந்த பிளானிங் கமிஷனின் வேண்டுகோளுக்கிணங்கி என்னென்ன செய்ய வேண்டுமென்று ஒருசில கருத்துக்களை மத்திய அரசாங்கத் திற்குக் கூறியிருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியை இங்கே படிப்பதற்கு நான் விரும்புகிறேன்.

That arrangements must be made that no one, however highly placed, immune from inquiry, if allegations against him are made by responsible parties and prima facie case exists.

இதிலே பிரைமா ஃபேஸி கேஸ் இருக்கிறது என்ற காரணத்திற்காக அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. உண்மையாக யார் யார் எல்லாம் இதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள் என்பதைப்பற்றி விசாரணை செய்து அதற்கான முடிவு செய்ய இந்த மன்றத்தில் ஒரு கமிட்டிதான் திறந்த ஒரு அமைப்பாக இருக்கும் என்று தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனெனில் நம்முடைய அரசியலமைப்பின்படி நாம் பல காரியங்களைப்பற்றிப் பார்க்கிறோம், பல என்கொயரிகளைப் பார்க்கிறோம், பல கமிஷன்களில் அமைச்சர்களின்மீது பல விதமான நீதி விசாரணைக் கமிஷன் போடப்பட்டு நடந்திருக்கிறது. அதுமட்டும் போதாது என்பதற்கு A. G. Noorani என்பவர் "On Ministers' Misconduct" என்ற புத்தகத்திலே தன்னுடைய கருத்துக்களையெல்லாம் கூறி யிருக்கிறார்கள். அதிலே 222-வது பக்கத்திலே அவர்கள் ஒரு சில கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். அதை இந்த மன்றத்திலே கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

After a spate of judicial inquiries, the country seemed to be fast reverting to the pre-Kairon era, described in Chapter I, in which judicial enquiries were studiously avoided although, as in Jeep scandal, they were called for by reports of legislative Committees or other material which made out a prima facie case for a probe. Foremost among them, beyond a doubt, was the Harchand Singh Committee's report on the grabbing of evacuee lands in Punjab by politicians and government officials and their setting up large farms on them.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

அதாவது பஞ்சாபிலே நடந்தது, இப்படிக் கொடுக்கப்பட்ட ஒரு திலத்தை கையடக்கி எடுத்துவிட்டார்கள், அது சம்பந்தமாக விசாரணை வேண்டாம், பார்லிமெண்ட்டரி கமிட்டி அதாவது சட்டசபைக் கமிட்டிதான் விசாரிக்க வேண்டுமென்று ஹர்சிங் என்பவரின் தலைமையில் கமிட்டி இயங்கி நல்ல ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதுமாதிரி இந்த அறிக்கையின் அடிப்படையிலே இந்த மன்றத்தின் ஒரு கமிட்டியை நிறுவுவது தான் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். இந்தமாதிரியான பெரிய தவறுகள் நடந்திருக்கின்றன. இந்தப் புகார்களையெல்லாம் விசாரித்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், வேறு சில காரியங்களையும் நாம் எல்லோரும் புரிந்தவர்களாக இருக்க வேண்டும். அதிலும் சிவில் சப்ளைஸ் இலாக்காவில் இருப்பவர்கள் எல்லோரும் ஒழுக்க சீலர்களாக இருக்கிறார்கள் என்று கூறவில்லை. சிவில் சப்ளைஸ் இலாக்காவில் நடக்கும் அக்கிரமங்களும், அநீதிகளும் கொஞ்ச நஞ்சமல்ல. அதைக் கட்டுப்படுத்தித் திறமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் கீழ் மட்டத்தில் யார் யார் இந்தச் சாக்குகளைச் சோதனை செய்திருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர்களை சஸ்பென்ட் செய்வது மட்டும் போதாது, வேறுவிதமான கிரிமினல் லா (அமெண்ட் மெண்டின்)-கீழ் வழக்குத் தொடர்ந்து அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் பெரிய அளவிலே தவறுகள், ஊழல்கள் நடப்பதை, கையாடல் நடப்பதைக் கண்காணிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, நான் இந்தப் பிரச்னையிலே வேறு அதிகமான காரியங்களைக் கூற வேண்டுமென்று நினைக்கவில்லை. பொதுவாக பொதுவாழ்விலே இம்மாதிரி ஊழல் மலிந்ததாக இருக்கிறது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. உதாரணமாக கிப்பன் என்ற அறிஞர் Decline and Fall of Roman Empire. என்ற புத்தகத்திலே முதலிலே கூறியிருக்கிறார்கள். Corruption, the most infallible, symptoms of constitutional liberty என்று சொல்லியிருக்கிறார்கள். ஊழல் எந்த அளவிலே இருக்கிறது

என்பதைப் பற்றி அவருடைய புத்தகத்திலே தெளிவாகத் திட்டவட்டமாக பல கருத்துக்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள். இந்தமாதிரியான ஊழல்களை அப்புறப்படுத்துவதற்கு நாம் எல்லாம் முன் மாதிரியாக இருக்க வேண்டும். சாதாரணமாகச் சொல்வார்கள், ஆங்கிலத்தில் As the King, so the people என்று சொல்வார்கள். அதாவது மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழியே என்று சொல்லும் அளவில் இருக்கிறார்கள். ஆட்சி எப்படியிருக்கிறது என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்தமாதிரியான அறிக்கை ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையிலே நிச்சயமாக இந்த மந்திரிசபை நீடித்திருப்பதற்கு அருகதை இல்லை, அவர்கள் நிச்சயமாக ராஜினாமா செய்து முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேறு சில விஷயங்களைப் பற்றிப் பேசுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைய உணவு நிலைமையைப்பற்றி மேலவையிலே உணவு அமைச்சரவர்கள் பல விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள். நேற்று மேலவையிலே பேசும் நேரத்தில் நமக்கு 20 இலட்சம் டன் தான் துண்டு விழுகிறது, 55 இலட்சம் டன் உற்பத்தியாகிறது என்று சொல்வது சரியல்ல, 35 இலட்சம் டன் உற்பத்தியாகிறது என்ற கணக்கைக் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே மிகப் பெரிய பிரச்னையாக உணவுப் பிரச்னை இருக்கிறது. படியரிசி 6 ரூபாய், 7 ரூபாய் ஏன் அதைவிடக் கூடுதலாகப் பல பகுதிகளில் விற்கிறது. இன்றைக்கு நாட்டிலே உள்ள எல்லா ஏடுகளும் அதற்காகத் தலையங்கங்கள் எழுதுகின்றன. இந்த பத்திரிகையிலே வந்த ஒரு தலையங்கத்தைப் பற்றி உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினர்கள். நானும் சொல்கிறேன், இங்கே கொடுக்கப் பட்டிருக்கின்ற புள்ளி விவரங்கள் சரியானவை அல்ல, இவைகள் உண்மையானவையாக, சரியானவையாக இருந்தால் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையிலேயோ, என் நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த பட்ஜெட் உரையிலேயோ தந்திருக்கின்ற விவரங்கள் தவறு என்று கேட்பதற்கு ஆசைப்படுகிறேன். அப்படித் தவறு என்றால் என் தவறான விவரங்களைக் கொடுக்க வேண்டும். முன்பு அப்படி ஏன் சொல்ல வேண்டும், இப்பொழுது 35 இலட்சம் டன் என்று சொல்லும் கணக்கைக் கேட்டு வருத்தப்படுகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர்களே, பத்திரிகையிலே எப்படி வந்தது, திரு. பொன்னப்ப நாடார் எப்படிப் படித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நேற்று நடந்த விவாதத்தின்போது உணவு அமைச்சர் அவர்கள் சொன்னபொழுது மேலவையில் நானும் இருந்தேன். இருபது லட்சம் டன் குறையும் என்று சொன்னார்களே தவிர, இதற்குமுன் சொல்லப்பட்ட புள்ளி விவரம் சரியல்ல என்று பத்திரிகையில் வந்திருந்தால் அது தவறு. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசுவது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இன்னொரு தகவலும் வந்தது. குறுவையில் 4 இலட்சம் டன். 5 இலட்சம் டன் என்று வந்தது, பிறகு அடுத்தபடியாக வேறு மாதிரியாக வந்திருக்கிறது. எவையே, தகவல்களை, படிப்பவர்களுக்கு கன்ஃப்யூஸன் இல்லாமல் கொடுத்தால் நல்லது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உணவுப் பிரச்னையைப் பற்றி நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களெல்லாம் இந்த உணவுப் பிரச்னையிலே இன்னும் மிகவும் பயங்கரமான நிலை உருவாகுமோ என்று அஞ்சுகிறோம். இந்த நிலைமை பஞ்சத்தால் ஏற்பட்டது மட்டுமல்ல, அரசாங்கத்தின் கொள்கை சரியாக இல்லாமல், திட்டவட்டமாகச் செய்யாததால்தான் இவ்வளவு பெரிய உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் அவதிப் படுகிறார்கள். ஒருவகையான கிழங்கு, புல் அரிசி போன்றவைகளைச் சாப்பிடுவதைப்பற்றி சட்டமன்றத்தில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு நாட்டிலே உள்ள பஞ்சம் புதிதாகத் தோன்றியது அல்ல.

வங்காளத்திலே பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில் நமது தலைவர்கள் என்ன கூறினார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த நேரத்திலே 1945-ஆம் ஆண்டிலே ஜெயிலிலேயிருந்து விடுபட்டு வந்த மனிதருள் மாணிக்கம் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். அவர்கள் 1945-ஆம் ஆண்டு ஜெயிலிலே யிருந்து வந்த நேரத்திலே என்ன கூறினார்கள் என்றால், பிளாக் மார்க்கெட்டைப் பொறுத்தவரையில்,

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

That he would hang the blackmarketeer on the nearest tree he could find.

என்று கூறியிருக்கிறார்கள். அதுமாதிரியான நிலைமைகள்தான் இன்றைக்கு நடமாடிக்கொண்டிருக்கின்றன. வர்த்தக சூதாடிகளும், வர்த்தகத்திலே பதுக்கலும் புகுந்திருக்கின்றது. இதையெல்லாம் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் ஒரு செயலற்ற திறமையற்ற ஆட்சி முறையிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை கூற நான் விரும்புகிறேன்.

இப்போது உணவுப் பொருள் வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் உணவுப் பொருளைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்று நாங்கள் எல்லோரும் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து வலியுறுத்திக் கூறுகிறோம். தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு பல பகுதிகளில் இருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் மாத்திரமல்ல; கோவை ஜில்லாவில் இருக்கிறது; திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளாக சங்கரன்கோயில் போன்ற பகுதிகளில் இருக்கிறது. மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இத்த நிலைமையில் உணவுக் கொள்கையில் என்ன மாற்றம் செய்யப் போகிறார்கள்? கட்டாயப் பங்கீட்டு முறையை ஏற்படுத்தப் போகிறார்களா என்று கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறிவிட்டார்கள். கொடுக்கின்ற உணவுப் பொருள்களாவது ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. நியாயவிலைக் கடைகளில் மக்கள் க்யூவில் நீண்ட நேரம் நிற்கமுடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விற்பட்டு முறையில் இந்தக் கடைகள் வேலை செய்கின்றன. ஒரு வீட்டில் இரு குழந்தைகள் இருந்தால் காலையில் ஒரு பையன் போய் இருந்து, மத்தியானம் இன்னொருவன் போய் நின்று இரவோடு இரவாகத்தான் உணவுப் பண்டங்களை வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த உணவுப் பண்டங்களின் விலையும் அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. தரமான நல்ல உணவுப் பண்டங்கள் கொடுக்கப்படவில்லை.

எங்கள் பகுதியில் முன்பெல்லாம் வாரத்திற்கு ஒரு முறை உணவுப் பண்டங்களைக் கொடுப்பார்கள். இப்போது இரு வாரத்திற்கு ஒருமுறை என்று மாற்றிவிட்டார்கள். இதுபற்றி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

உணவு அமைச்சர் அவர்களிடம் எங்கள் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னோம். இதுவரை மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. ஒரு வாரத்திற்கு ஒருமுறை கொடுத்தால் என்ன தஷ்டம். ஏதோ கணக்கு வழக்கு என்று அதிகாரிகள் கூறுகின்ற கூற்றை வைத்துக்கொண்டு இந்த மாதிரிக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரிக் காரியங்களால் மக்கள் இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையிழந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வாங்கிச் சாப்பிடும் மக்களுக்குத் துன்பங்களையும், துயரங்களையும் கொடுக்க வேண்டாம். உணவு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் பரிவோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும். இதற்கு முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, இன்று மாணவர்கள் எப்படி நடத்தப் படுகிறார்கள்? அத்தனை கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு யார் காரணம்? யார் பொறுப்பு? ஏதாவது கிளர்ச்சி நடந்துவிட்டால் உடனடியாக கல்லூரியை மூடிவிடுவதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கையா? என்னைப் போன்ற பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் நியாயமாக கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். சட்டக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது 'அத்தனை கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன' என்று பேசி வருகிறார்கள். ஆகவே, நான் ஒரு விளக்கத்தைத் தந்து விடுவது நல்லது என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் 189 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. ப்ரொபஷனல் கல்லூரிகள் 44 இருக்கின்றன. ஐ.ஐ.டி. போன்ற மற்றக் கல்லூரிகள் 20 இருக்கின்றன. எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கவில்லை. நாற்பத்திமூன்று கல்லூரிகள்தான் மூடப் பட்டிருக்கின்றன. சென்னையில் விவேகானந்தா கல்லூரி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது; நந்தனம் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நியூ காலேஜ் நடந்து கொண்டிருக்கிறது; ஜெயின் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது; டாக்டர் அம்பேத்கார் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, சென்னையிலுள்ள பல பெண்கள் கல்லூரிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ப்ரொபஷனல் கல்லூரிகள் நடைபெற்றுக்

1974 டிசம்பர் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கொண்டிருக்கின்றன. பாலிடெக்னிக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆண்கள் கல்லூரிகள் சில மூடப்பட்டிருப் பதற்கும் ஒவ்வொன்றுக்கும் காரணம் இருக்கிறது. அந்த விளக்கத்தை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால் அதற்கே நெடு நேரமாகிவிடும். ஆகவே 'அனேகத்தும்' என்று சொல்லாமல் 'சில' என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பர்சன்டேஜ் கணக்குப் பார்த்தால் கூட 24 பர்சன்ட்தான் மூடப்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சீக்கிரம் முடித்துக் கொண்டால் நல்லது. இப்போதே மணி 11 ஆகிறது. தாங்கள் பேசி, திரு. எட்மண்ட் அவர்கள் பேசி பிறகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் பேசி பிறகு தீர்மானத்தை முன்மொழிந்தவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்கள் கட்சிக்குக் கொடுத்திருக்கக்கூடிய நேரத்தைக் கணக்குப் பார்த்தால் நாங்கள் அதிகமாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக நேரம் இல்லை என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எவ்வளவு துரிதமாக முடிக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக முடித்துக் கொள்கிறேன்.

சட்டக் கல்லூரி இந்த வருஷம் இதுவரை 14 நாட்கள்தான் இயங்கியிருக்கிறது. யூனியன் தேர்தல் நடந்து கலவரம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரிக் கலவரம் தேவைதானா என்பதைப் பற்றி அரசியல் கட்சித் தலைவர்கள் அவ்வளவு பேரும் கவனிக்கவேண்டும். செர்ச்சன்டேட்டிவ் கவுன்சில், தமிழ் மன்றம், சோஷல் சர்வீஸ் லீக் ஆகியவற்றுக்குத் தேர்தல் நடந்திருக்கிறது. ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த அபேட்சகர்களுக்குப் பெரும்பான்மை வந்திருக்கிறது. ஓட்டு எண்ணிக்கை நடந்து கொண்டிருந்த நேரத்தில் ஏ.டி.எம்.கே., டி.எம்.கே.-யைச் சேர்ந்த மாணவர்கள் கலாட்டா செய்தார்கள். எட்டு மணி அளவில் விளக்குகளை அணைத்து பேலட் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய் கூச்சல் குழப்பங்களை உண்டாக்கி அடிதடியை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

ஏற்படுத்தினர்கள். ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுக்கு அதிகமான பெரும்பான்மை வாக்குகள் கிடைத்த காரணத்தால் அவர்களே டிக்ளேர் செய்ய வேண்டுமென்ற முறையில் ஒரு அறிக்கையை பிரின்சிபால் கையில் கொடுத்தார்கள். ஆனால் நிலைமை என்னவென்றால் அவர்கள் பிரின்ஸ்பாலை கெரோ செய்தார்கள் என்று சொல்லி இன்று வழக்குப் போட்டிருக்கிறார்கள். இந்த வழக்கு நியாயமா இல்லையா என்று நீதிமன்றத்தார் தீர்ப்பு செய்யப்பட வேண்டும். வேண்டுமென்றே ஒரு சாராரைத் தூண்புணர்த்த இந்த வழக்கு போடப்பட்டிருக்கிறது.

அடுத்த நாள் என்ன நடந்தது. காமராஜர் அவர்கள் படம் ரூபாய் இரண்டாயிரம் செலவில் அங்கே அமைக்கப் பெற்றிருந்தது. வேண்டுமென்றே ஒருசிலர் உள்ளே நுழைந்து அதை உடைத்து தொலுக்கியிருக்கிறார்கள். காந்தியார் படத்தையும் நொறுக்கி விட்டார்கள். வாச்மேன் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார். இதற்குப் பிறகு தந்தை பெரியார் ஈ.வே.ரா. படத்தையும், முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் படத்தையும் அங்கிருந்து கழற்றி வேறு ஒரு அறையில் ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. காமராஜர் படத்தைத் திரும்ப வைக்க வேண்டுமென்று மாணவர்கள் கேட்கிறார்கள். அதற்கு ஏதோ ஏற்பாடு நடக்கிறது. படத்தை உடைத்தவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. பிரின்சிபாலை கெரோ செய்துவிட்டதாக ஸ்தாபன காங்கிரஸ் மாணவர்கள் மீது ஒருதலைப் பட்சமாக கேஸ் போட்டிருக்கிறார்கள். இது நியாயமா என்று தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். ஸ்தாபன காங்கிரசில் இருப்பவர்களைப் பழி வாங்க வேண்டுமென்பதற்காகவே திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள்.

கன்னியாகுமரி ஜில்லாவில் லட்சுமிபுரம் கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. அங்குள்ள ஆசிரியர்கள் அத்தனைபேரும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு 12 மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை. மாணவர்கள் பட்டப்படிப்பு நுழைவு அங்கீகரிக்கப் படவில்லை. பத்தாண்டுகளாகச் செயல்படுகிற ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லை. இப்படி பல்வேறு பிரச்னைகளுக்காகப் போராடி வருகிறார்கள். இதையெல்லாம் கண்டு நாட்டிலே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னைப்ப நாடார்]

(முற்பகல் 11-00)

மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கல்லூரி பேராசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக தனியார் கல்லூரிகளில் திட்டவட்டமான சட்டதிட்டங்கள் இல்லாததால் அவர்களுக்கு யூனிவர்ஸிட்டி கிரான்ட்ஸ் கமிஷனிலிருந்து கிடைக்க வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு நியாயமான பணிப் பாதுகாப்பு இல்லை. இலட்சுமிபுரம் கல்லூரியில் இரண்டு போட்டி நிர்வாகங்கள் இருக்கின்றன. என் இதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளக்கூடாது? அல்லது இலாகாவின் ஒரு ஸ்பெஷல் அதிகாரியின் பொறுப்பில் அதை வைத்து விட்டு—அங்கு ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு 12 மாதங்கள் சம்பளம் கிடைக்கவில்லை என்றால் எவ்வளவு பரிதாபத்திற்கு உரியவர்கள் அவர்கள் என்பதை இந்த அரசு பரிவோடு கவனிக்கவேண்டும். இல்லை என்றால் அவர்கள் அழுகைக் குரலினால் இந்த அரசாங்கத்தின் மீது ஒரு பழி சுமரும். இம்மாதிரி பல பிரச்னைகள் இருக்கின்றன. இவைபற்றி அரசாங்கம் திட்ட வட்டமான தெளிவான முடிவுகள் எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, உரவிநியோகம் பற்றி ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். உரம் கிடைக்கவில்லை என்றால் ஒரு துண்டு கடிதாசில் உரம் இல்லை என்று எழுதிக் கொடுங்கள், உடனே தான் கொடுத்துவிடுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் ஒரு உறுதி மொழி கூறினார்கள். எங்களுக்கு பல புகார்கள் வந்துள்ளன. உதாரணமாக, ஸ்ரீராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து, ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து ஒரு புகார் வந்திருக்கிறது. பெருமாள்சாமி, பிரசிடென்ட் என்று அனுப்பியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும் ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். மல்லி, கூட்டுறவு க்ரெடிட் சொஸைட்டி. அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால் கோதுமை தவிடு, கோதுமை உமி எல்லாம் கலக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் ஸாம்பிளையும் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுமாதிரி என் கட்சிக் காரியாலயத்திற்கும் அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஸாம்பிளை நான் தங்கள் அறையில் கொண்டு வந்து காட்டினேன். இந்த அவையில் காட்ட வேண்டுமென்று நான் விரும்பவில்லை, அது ஒருவேளை நல்ல மரபாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

இருக்காது என்ற காரணத்தால், அதன் பேரில் என்ன தடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை தங்கள் மூலம் நான் கேட்க விரும்புகிறேன்.

அதேமாதிரி ஒரு தந்தியை நான் இங்கே காட்டியநேரத்தில் யாரோ தந்தி அனுப்பியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். எங்களுக்கு வருகிற தந்திகளை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துக் கூற நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். யாரோ அனுப்பியிருக்கிறார்கள் என்று அந்தத் தந்திகளை உதாசீனம் செய்யக்கூடாது. அதில் நியாயம் இருந்தால் அதைப் பற்றி விசாரித்து கொடுக்கக்கூடிய தன்மை இருந்தால் கொடுங்கள். எங்களுக்கு ஒன்றும் ஒரு சலுகையும் தேவையில்லை. விவசாயிகள் தங்களுக்கு உரம் கிடைக்கவில்லை என்று குரல் எழுப்புகிறார்கள். ஆகவே, அரசாங்கம் அதற்கு பொறுப்பு என்ற காரணத்தால் அது சம்பந்தமாக விசாரித்து நல்ல உரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காதி இலாகா. இன்று 300 பேர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்திருக்கிறார்கள். மதரஸில் கொடுத்திருக்கிறார்கள். கடனில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் நிலை என்னவாயிற்று என்று தெரியவில்லை. அவர்களில் பட்டதாரிகள், மேல் பட்டப்படிப்பு பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பயிற்சி முடிந்தவுடன் வேலை கிடைக்கும், நிச்சயமாக அவர்களை வேலைக்கு அமர்த்தலாம் என்ற உத்தரவாதம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்களது பிரச்னை இன்னும் முடியவில்லை. அது சம்பந்தமாக அரசாங்கம் உதாசீனமாக இருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இளைஞர் அணி. இந்த இளைஞர் அணியில் பல பேர்கள், பல வாலிபர்கள், பட்டப் படிப்பு உடையவர்கள் தங்களுக்கு வேலை கிடைக்கும் என்று, இப்போது கிடைக்கும் 175 ரூபாயை வைத்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையை மலரச் செய்யலாம் என்று எதிர்பார்த்து இந்த இளைஞர் அணியில் சேர்ந்தார்கள். ஆனால் நடந்தது என்ன? இப்போது ஒரு புதிய அதிகாரி வந்திருக்கிறார். அவர்களுடைய உத்தரவின்பேரில் இன்று பலரை வேலைநீக்கம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பலருக்கு துன்பம் ஏற்பட்டிருக்கிறது.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இளைஞர் அணி பற்றி ஜேம்ஸ் அவர்கள் கூட பேசினார்கள். இளைஞர் அணியில் ரூ. 175 மாதம் கொடுக்கிறோம் என்றால் அவர்கள் தங்கள் பொறுப்பை, கடமையை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறை வேற்றாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். சிலபேர்கள் ரூ. 175 சம்பளம் வாங்குவதற்கு மாத்திரம் அலுவலகத்திற்கு வந்திருந்து கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்றவில்லையென்றால், அப்படி பணியாற்றாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்கள் தாற்காலிகமாக வேலைநீக்கம் செய்துவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எனக்கு வந்திருக்கிற தகவல் என்னவென்றால், அங்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஒரு ராணுவ அதிகாரி இப்போது அந்த இலாகாவின் தலைவராக இருக்கிறார்கள். அதையெல்லாம் இங்கே சொல்ல வேண்டாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தால் சொல்கிறேன். திடீரென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களுக்கும் யாராவது ஹெட் க்வார்ட்டேர்ஸில் இல்லை என்றால் உடனடியாக அவர்களை ஸஸ்பென்ட் செய்யவேண்டுமென்று ஒரு தாக்கீது வந்த காரணத்தினால்தான் பலரையும் இன்று சஸ்பென்ட் செய்திருக் கிறார்கள் என்ற உண்மையைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் சொன்னதைத் தான் நானும் சொல்கிறேன். இது ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதற்காகத்தான் ஒரு அதிகாரி, ஒரு ராணுவ அதிகாரி, ஒரு ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரியை, தென் மண்டலத்தில் இருந்தவர்கள், இதற்கு நியமித்திருக்கிறோம். அதை ஒழுங்கு படுத்துவதற்கு, ஹெட்க்வார்ட்டேர்ஸில் ஒழுங்காக வேலைக்கு வராவிட்டால் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஹெட்க்வார்ட்டேர்ஸில் இருக்க வேண்டும் என்ற கண்டிப்பான தாக்கீது இருந்து அதைமீறி இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் என்னைப் போன்றவர்கள் வருத்தப்படமாட்டார்கள். நிச்சயமாக அவர்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

களுக்கு எந்தவிதமான ஒரு அறிவிப்பும் இல்லை. முன்னே அவர்கள் சும்மா இங்கு இருந்தார்கள், அவர்கள் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டு அப்படியே இருந்து கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் அந்த இலாகாதான் அதற்குப் பொறுப்பு என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பலருக்கு இன்று வேலை கொடுக்கப்படவில்லை. இப்போது ஒரு சிலரை ஆசிரியர் வேலை செய்யவேண்டுமென்று அமர்த்தியிருக்கிறார்கள். ஏதாவது வேண்டுமென்று தவறு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. இவர்களுக்கு சர்வீஸ் கமிஷனில் முன் உரிமை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பலர் வாலிபர்கள். பி.ஏ., எம்.ஏ, படித்தவர்கள். அவர்களுக்கு வேலைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாமலிருந்தால் நிச்சயமாக கஷ்டமானதொரு நிலை உருவாகி விடும் என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் பிரச்னைபற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். 700-க் மேற்பட்ட, தனியார் துறையில் இயங்கிக் கொண்டு வருகிற விவிங் ஆசிரியர்கள், 1—4—1970-க்குப் பிறகு அவர்களின் சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப் படவில்லை. 700-க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு ரெகுலரைஸேஷன் வரவில்லை. அவர்கள் எல்லாம் தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 1—4—74-க்கு முன்பு நியமனமானவர்களை உடனடியாக ரெகுலரைஸ் செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் ஒரு போராட்டம் நடத்தினர்கள். அந்த நேரத்தில் இந்த வாக்குறுதியையெல்லாம் கொடுத்தார்கள். ஆனால் இதுவரையில் அந்த வாக்குறுதி நிறை வேற்றப்படவில்லை.

அடுத்தபடியாக, போலீஸ் இலாகா பற்றி ஒன்றிரண்டு தகவல்களைக் கூறுவது என் கடமை. திருச்சி ஜில்லாவில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. குறிப்பாக ராஜேந்திரன் என்ற ஒரு இளைஞரை ஒரு வழக்கிற்காக, சென்துரை போலீஸ் ஸ்டேஷனில், அரியலூர் சப்-டிவிஷனுக்கு அழைத்துச் சென்று ஒரு சில நாட்களுக்கு வைத்திருந்தார்களாம். அவரிடமிருந்து தகவல் அறிவதற்காக நான்கு நாட்கள் வைத்திருந்ததாகவும் அவர் திடீரென்று தற்கொலை செய்து கொண்டு விட்டார் என்ற கூற்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால் எங்களுக்கு வந்த தகவல்

1974 டிசம்பர் 18] *[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]*

எல்லாம் இது சம்பந்தமாக ராஜேந்திரன் என்ற வாலிபரை நையப்புடைத்து விட்டு அவர் அந்த அடி காரணமாக லாக்கப்பில் மரணம் அடைந்திருக்கிறார், அதல்லாமல், தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றெல்லாம் எங்களிடம் கூறப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரியலூர் ஆர்.டி.ஓ. விசாரணை செய்திருக்கிறார் என்ற செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. தற்கொலை செய்து கொள்ளவா போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்கிறார் என்றெல்லாம் மக்கள் ஐயப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது நல்லதல்ல. இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

வேறுசில காரியங்களைப்பற்றியும் கூற விரும்புகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குநேரி போலீஸ் ஸ்டேஷனில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி இங்கு பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அங்கு ஒரு வீட்டில் களவு போயிற்று. முத்து அம்மாள் என்ற அம்மையார் வீட்டில் ஏறக்குறைய 3,000 ரூபாய் ரொக்கநட்டுகள் திருட்டு போயிருக்கிறது. இது சம்பந்தமாக சுப்பையா என்ற ஒரு நபர் சந்தேகிக்கப்பட்டு அவரை இன்டாரோகேஷனுக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்களாம். 12-ம் தேதி அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு 16-ம் தேதி பிணமட்டை வைத்து நையப்புடைத்தார்கள். எல்லா இடங்களிலும் அவருக்கு காயங்கள் ஏற்பட்டதால் அவருக்கு திடீரென்று ஜன்னி வந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்களாம். ஆஸ்பத்திரியில் அனுமதித்து அங்கு மருந்து போட்டார்களாம். இந்நிலையில் இங்குள்ள பெரியவர்கள் எல்லாம் அவருடைய மரண வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும் என்று நாங்குநேரி சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்களைக் கேட்டார்களாம். நாங்குநேரி சப்-மாஜிஸ்ட்ரேட் வாக்குமூலம் பெற அங்கு வந்த நேரத்தில் இந்த சுப்பையா என்பவர் இறந்து விட்டாராம்.

இதில் பலர் போலீசாரோடு சேர்ந்து கொண்டு வேலு என்பவரை ஒன்றும் அறியாத அப்பாவியை அவன் அடித்து கொன்றதாக அவன் மீது அபாண்டமாக பழியை சுமத்தி இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஹரிஜன சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் ஒரு சில அதிகாரிகள் வேண்டுமென்றே பழி வாங்கி இருக்கிறார்கள். பொய் வழக்கை ஜோடனை செய்திருக்கிறார்கள். இரண்டு சர்வ கட்சி கண்டன கூட்டம் அங்கே

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

நடைபெற்று இருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு கலெக்டர் அவர்களுக்கு புகார் கொடுத்து இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக டெபுடி கலெக்டர் அவர்களுக்கு புகார் கொடுத்து இருக்கிறார்கள். இந்த மாதிரியான வழக்குகளை ஜோடனை செய்வது எல்லாம் அழகா என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் கடலூர் ஜெயிலில் பொன்னு நாடார், தூத்துக்குடி, அவரை 25—9—1974 அன்று மோகன் என்ற வார்டர்— இதைப் பற்றி வழக்கு இருக்கிற காரணத்தால் அதிகமாக நான் கூற வேண்டும் என்று நான் நினைக்கவில்லை—அந்த வார்டர், கான்விக்ட் வார்டர் 12 வருடம் சிறைச்சாலையில் இருந்தவர், வேண்டுமென்றே அங்கே அவர் அடித்துக் கொல்லப்பட்டு இருக்கிறார். 600-க்கு மேற்பட்ட கைதிகள் உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். இது போன்ற நிகழ்ச்சிகள் கடலூர் போன்ற ஜெயிலில் நடந்து இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

மணிகண்டன் என்ற வேறு ஒரு கைதி 10—8—74-ல் இரண்டு பற்கள் உடைக்கப்பட்டு என்னுடைய அறைக்கு சிறைச்சாலையிலிருந்து வந்து சந்தித்து காட்டினார். இந்த மாதிரியான கோர நிகழ்ச்சிகள் எல்லாம் சிறைச்சாலைக்குள் நடக்கிறது. இது சரியா இது இந்த அரசாங்கத்திற்கு அழகா என்பதைப் பற்றி எல்லாம் ஒரு கனம் சிந்தித்து பார்க்க வேண்டும். இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் அனுமதிக்கப்படக் கூடாது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயம். கட்டிகுளம் என்ற ஊர் மானூர் தாலுகாவில் ஒரு பகுதி. அங்கு ஒரு கொலை கேஸ் நடைபெற்றது. அதைப் பற்றி நான் எடுத்துக் கூறுவது தேவை இல்லை என்ற காரணத்தால் நான் கூற விரும்பவில்லை. அங்கே இருக்கிற பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் என்பவருக்கும் அவருக்கு எதிராக இருக்கின்ற சங்கரலிங்கம் என்பவருக்கும் இருக்கிற தகராறு பற்றி உறுப்பினர்களுக்கு தெரியும். பஞ்சாயத்து யூனியன் தேர்தல் என்றாலும் பொதுத் தேர்தல் என்றாலும் அவர்கள் இடையே மோதல். கொலைக் கேஸ் ஏற்பட்ட பிறகு அந்த சம்பந்தமாக கேஸ் ஏற்பட்டது. இப்போது அவரை என்ன செய்து இருக்கிறார்கள் என்றால் அந்த கொலை கேசில் சங்கரலிங்கம் என்பவ

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ரையும் சேர்த்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கே அராஜகம் அக்கிரமம் நடைபெற்று இருக்கிறது. சங்காலிங்கம் கைது செய்யப்பட்ட பிறகு ஒரு ரவுடி கும்பல் அங்கு சுற்றிக் கொண்டு இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் குறிப்பாக சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்க வில்லை. சங்காலிங்கம் விட்டில் ரவுடிகள் சேர்ந்து கொல்லைக்கு இருந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் இந்த ஆட்சியில் நடப்பது அழகுதானு. அவருடைய நெல் களஞ்சி யத்தை சூரையாடி இருக்கிறார்கள். வாழைத் தோட்டத்தை அழித்து இருக்கிறார்கள். அவருடைய ரைஸ் மில்லை உடைத்து இருக்கிறார்கள். இன்னும் பண்ட பாத்திரத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இது சம்பந்தமாக புகார் கொடுத்து எங்கள் கட்சித் தலைவர் பி. இராமச்சந்திரன் அந்த ஊருக்கு வந்த நேரத்தில் இதைப்பற்றி எல்லாம் நேரில் விசாரித்து இருக்கிறார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களே, போலீஸ் இலாகாவில் உள்ள உங்களுக்கு நம்பிக்கை யான ஒரு அதிகாரியை அனுப்பி விசாரித்து அந்த மாதிரியான நிகழ்ச்சிகள் நடந்திருந்தால் நீங்கள் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறீர்களோ அதை ஏற்றுக்கொள்ள நான் ஒத்துக்கொள்ளு கிறேன். புதிதாக வந்த ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்றால் அந்த மாதிரியான காரி யங்கள் இன்னும் நடக்க அனுமதிக்கக் கூடாது என்று தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக இன்று இருக்கின்ற எல்.ஜீ.ஒ. பிரச்னை பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். மத்திய அரசு 167 ரூபாய் டி.எ. ஆக கொடுக்கிறது தனது சிப்பந்திகளுக்கு. ஆனால் நம் மாதில அரசில் உள்ள அலுவலர்களுக்கு 70 ரூபாய் டி.எ. ஆக கொடுக்கப் படுகிறது. இதிலே வித்தியாசம் 97 ரூபாய். வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் டி.எ. கொடுக்கப்படவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அந்த மாதிரியான உத்தரவுப்படி முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக புதிதாக சலுகை ஏதாவது அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். நேர்மாறாக அந்தச் சலுகைகள் அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 18

தோவாளை யூனியன் தலைவர் திரு. வி. கே. ராஜா பிள்ளை ராஜினாமா செய்து விட்டார். அதற்காக ஒரு தேர்தல் நடைபெற வேண்டும் புதிய தலைவரை தேர்ந்து எடுப்பதற்காக. 39 உறுப்பினர் கள் ஆஜராக நோட்டீஸ் கொடுத்தார்கள். அந்த வகையில் 31 உறுப்பினர்கள் ஆஜராகி டி. சிவசுப்பிரமணியம் என்பவரைத் தேர்ந்து எடுத்தார்கள். அந்தத் தேர்தலை நடத்த வந்த பி.டி.ஓ என்ற அதிகாரி என்ன செய்தார் என்றால் தேர்தலை ஒத்திவைக் கிறேன் என்று அறிவித்து விட்டு தேர்ந்து எடுத்ததை உதாசீனம் செய்கின்ற முறையில் நடந்து கொண்டார்கள். தேர்தலை நடத்த இடம் காலம் எல்லாம் அறிவிக்கப்பட்ட பிறகு திடீரென்று இந்த மாதிரி ஒத்தி வைப்பதாக அறிவித்தால் என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிலே அரசியல் குறுக்கீடு தான் காரணம். திராவிட முன்னேற்றக் கழக தலைவர் இருந்த இடத்திலே காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தலைவர் வரக் கூடாது என்ற வயிற்றெறிச்சல் தான் காரணம் என்பதை ஒரு குற்றச்சாட்டாக சொல்ல விரும்பு கிறேன். முன்பு ஒரு முறை இதே சிவசுப்பிரமணியம் அவர்கள் சிறப்பு அங்காடி நாகர்கோவில் பகவதி தலைவராக இருந்தவர். காங்கிரஸ் தலைவராக இவர் இருந்ததால் அவரை நீக்கம் செய்தார் கள். இப்போது ராஜாபிள்ளையை வைத்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட பஞ்சாயத்து ஒன்றியம் போன்ற விஷயங்களில் கட்சி மாச்சரியங்கள் வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். இந்த மாதிரியான தலையீட்டுகளை தவிர்க்க வேண்டும்.

இன்றைக்கு நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. நூல் அதிக விலைக்கு விற்கப் படுகிறது. கோவாப்பரேடிவ் அடிப்படையில் கோ ஆப்டெக்சி லிருந்து நூல் அதிக விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. பருத்தி விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஐந்து கோடி ரூபாய் பெறுமான முள்ள பருத்தி தேங்கி கிடக்கிறது. கோவை, தேவி போன்ற இடங்களில் தேங்கி கிடக்கிறது. அது மட்டும் இன்றி இன்று நாட்டில் பவர் கட் ஏற்பட்டு இருக்கிறது. நாம் எல்லா இடத்தையும் ஒளி மயமாக்கிவிட்டோம் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் பவர் கட். இதனால் விவசாயம் நிச்சயமாக பாதிக்கப்படும். சட்டப்பூர்வமாக இல்லை என்றாலும் அவர்களுக்கு வேண்டிய லோட் கிடைப்பதில்லை. வரட்சி நிலை ஒரு பக்கம்,

1974 டிசம்பர் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வானம் பொய்த்து இருப்பது வேறு. இந்த நிலையில் விவசாயிகளுக்கு வேண்டியதைத் தர தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நான் கடைசியாகச் சொல்வது இந்த அரசாங்கத்தின்மீது பொதுமக்கள் வெறுப்பு கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லை. விவசாயிகளுக்கு, மாணவர்களுக்கு நம்பிக்கை இல்லை. வெறுக்கிறார்கள். அத்தனை அரசியல் எதிர் கட்சிகளும், ராஜினமா செய்யவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். மேலும் நடந்தால் தமிழகத்தில் இருக்கிற கருவூலங்கள் அத்தனையும் அழித்து விடுவார்கள் என்று நம்புகிறார்கள். விலைவாசியை குறைக்க நடவடிக்கை இல்லை. உணவு உற்பத்தி அதிகரிக்கின்ற முறையில் செயல்பட வேண்டும். மூன்றாவது பயிருக்கு பெர்டிலைசர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். நாட்டில் அராஜகம் நீடிக்கும் முறையில் அரசு செயலாற்றி வருகிறது. ஊழல், லஞ்சம் லாவண்யம் பெருகி இருக்கிறது. எனவே, இந்த அரசு உடனடியாக ராஜினமா செய்ய வேண்டும் என்று இந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தை ஆதரித்து நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று கூறி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன் மொழியப்பட்டிருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்த அரசினுடைய கொள்கையைக் கண்டித்து முன்மொழியப்பட்டிருக்கின்ற கண்டனத் தீர்மானத்தையும் நான் முழுமனதோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற முற்படுகிறேன்.

(மாண்புமிகு போவைத் தூணைத் தலைவர் தலைமை)

கண்டனத் தீர்மானத்தை முதலிலே எடுத்துக்கொள்வதாக இருந்தால். இந்த மன்றத்திலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து, வலியுறுத்தி, அதற்கு ஆதாரமாக பல்வேறு கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், ஆளும் கட்சிக்குத் தோழமை போய்க்கொண்டி

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

ருக்கிற தோழமைக் கட்சிகள் என்று சொல்லப்படுகிற மற்ற கட்சி உறுப்பினர்களும் கண்டனத் தீர்மானத்தைப்பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறபோது ஆளும் கட்சித் தரப்பிலுள்ளவர்களால் கொடுக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மீது தங்களுடைய கருத்துக்களை யாரும் சொன்னதாகத் தெரியவில்லை.

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மதிப்பீட்டுக் குழுவிற்குத் தலைவராக இருந்து, அவர் கொடுத்த அறிக்கையில் அரசாங்கத்தினுடைய கொள்கைகளைக் கண்டித்து, தன்னுடைய கருத்துக்களைச் சொல்லி இருப்பதால் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அந்த அறிக்கையைப் பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சிக்குத் துணை போய்க்கொண்டிருக்கிற தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், தமிழரசுக் கட்சித் தலைவர் இந்த மன்றத்தின் உறுப்பினர் தியாகராசன் அவர்கள், அதைப் போல ஃபார்வோர்டு பிளாக் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய பெருமாள் அவர்கள் ஆகியோர் இந்த மன்றத்திலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்கிறபோது இன்றையதினம் நாட்டிலே இருக்கிற உணவுப் பற்றாக்குறையும், விலைவாசி ஏற்றமும் ஏற்பட்டதற்கு இந்த அரசு காரணம் அல்ல என்ற கருத்தை பன்னிப் பன்னிச் சொல்லி, இயற்கையின் விளைவுதான் அதற்குக்காரணம் என்று சொன்னார்கள். அவர்களில் ஒருவர்கூட மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்திலே தாக்கல் செய்திருக்கிற அறிக்கையைப் பற்றி ஒருவரும் எந்தவிதமான கருத்தையும் சொல்லவில்லை. இதிலே இருந்து நான் என்ன புரிந்து கொள்கிறேன் என்றால், மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை எதிர்த்து சொல்லமுடியாத நிலைமையில் அந்த அறிக்கையில் தவறுகள் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள்தான். அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என்று அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைத்தான் என்னால் இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள முடிகிறது.

நம்முடைய பார்வோர்டு பிளாக் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய ஏ. ஆர். பெருமாள் அவர்கள் நேற்றையதினம் இந்த மன்றத்திலே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்

1974 டிசம்பர் 18] [திரு. க. ஒரொ. எட்மண்ட்]

தையும் வன்மையாக, கடுமையாக எதிர்த்து, கருத்துக்களைக் கூறிய நேரத்தில்கூட, இன்றையதினம் தமிழ்நாட்டில் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது; விலைவாசி ஏறி இருக்கிறது; இதற்குக் காரணம் நம்முடைய முதலமைச்சரவர்கள் அல்ல; இதற்குக் காரணம் ஆண்டவன்தான் என்று சொல்லி, ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று தன்னுடைய பெரிய ஆலோசனையை மனமுவந்து சொல்லியிருக்கிறார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள், ஆண்டுக் கொண்டிருக்கிறவர்கள்மீதுதான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியுமே தவிர, ஆண்டவன் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்த மன்றத்திலே கொண்டுவர முடியாது. அதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்கள் ஏற்கனவே ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட நாங்களும் ஆண்டவன்மீது நம்பிக்கை இல்லாமல்தான் இருக்கிறோம் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: அப்பொழுது மழை பெய்யாது (சிரிப்பு) கண்டிப்பாக பெய்யாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எட்மண்ட் அவர்கள் குறிப்பிட்டபோது, அண்ணா அவர்கள் ஆண்டவன் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அது என்றும், அதிலிருந்து வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையும் அதுதான் என்றும் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்கள் சொன்னது "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதுதான். அதை திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றி வருகிறது. ஆனால் இப்பொழுது அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆண்டவன் மீது நம்பிக்கை இல்லை என்ற கொள்கையை புரிந்துகொண்டேன்.

[1974 டிசம்பர் 18

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, அண்ணா அவர்களுக்குக் கடவுள் மீது எவ்வளவு நம்பிக்கை இருந்தது என்பது எங்களுக்குத் தெரியும். மதவாதிகள் மனதைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்களே அல்லாமல் அண்ணா அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, ஆண்டு போனவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது; ஆண்டு கொண்டிருப்பவர்கள் மீதுதான் கொண்டுவர முடியும்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவரவர்களே, அவர்களுக்குக் கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன். அந்த அடிப்படையில்தான் நான் சொன்னேன். அண்ணா அவர்களுடைய கருத்து என்ன என்பதைப் பற்றி கலைஞர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பதுதான் அண்ணா அவர்களின் கொள்கை. மதவாதிகளைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக அண்ணா அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. அண்ணா அவர்களின் கருத்துக்களையும், அவர்கள் எழுதியுள்ள நூல்களையும் நான் பார்த்ததிலிருந்து அதைத்தான் புரிந்துகொண்டேன். கடவுளை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை அவர்களுடைய பேச்சுக்களும், அவர்கள் எழுதிய புத்தகங்களும் நமக்கு விளக்குகின்றன. ஒருவேளை திரு. எட்மண்ட் அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம்; அது வேறு விஷயம். நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன். ஆகவேதான் மழை பெய்யாமல் பொய்த்ததனால் ஏற்பட்ட இன்னல்களுக்கு ஆண்டவன் மீதுதான் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கடவுள் நம்பிக்கை உள்ள திரு. பெருமாள் அவர்கள் கடவுளிடம் சொல்லி மழையை அனுப்பி வைக்கலாமே (சிரிப்பு).

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று

1974 டிசம்பர் 18] [திரு. கோவை செழியன்]

சொன்னார்கள். ஆனால் அண்ணா அவர்களும் இப்போதைய முதலமைச்சர் அவர்களும், நாங்களும் எல்லோரும் திராவிடர்க் கழகத்தில் இருந்தபோது, எல்லோரும் சேர்ந்து விஞ்ஞகர் சிலையை உடைத்தோம். ஆகவேதான் சொல்கிறோம் அண்ணா அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்று.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திராவிடர்க் கழகத்தில் இருந்தபோது விஞ்ஞகர் சிலையை உடைத்ததாகச் சொல்கிறார்கள். திரு. செழியன் அவர்கள் இடையிலே வேறு கட்சிக்குப் போயிருப்பதால் அண்ணா அவர்கள் சொன்னதை மறந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அருணா அவர்களே அங்கே மறுக்கிறார்கள். நாங்கள் எல்லாம் திராவிடர் கழகத்தில் இருந்தபோது பெரியார் அவர்கள் விஞ்ஞகர் சிலையை உடைக்க வேண்டுமென்று சொன்னதாகவும், அண்ணாவுடன் சேர்ந்து விஞ்ஞகர் சிலையை உடைத்ததாகவும் தகவல் இல்லை.

திராவிடர்க் கழகத்திலிருந்து நாங்கள் பிரிந்த பின்னால், பெரியார் அவர்கள் விஞ்ஞகர் சிலையை உடைக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்காக போராட்டம் நடைபெற்றது. அப்போது அண்ணா அவர்கள் விஞ்ஞகரை வணங்க மாட்டோம், அவருடைய சிலையை உடைக்க மாட்டோம்; விஞ்ஞகருக்குத் தேங்காய் உடைக்க மாட்டோம், விஞ்ஞகரையும் உடைக்க மாட்டோம் என்று சொன்னார்கள். திராவிடர்க் கழகத்தில் இருக்கிறபோது அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி படம் வந்தது. அதில்கூட வணக்கம் என்று சொல்வதற்குப் பதிலாக அண்ணாவின் பொன் மொழியான் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பதைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: அண்ணா அவர்கள் கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்கள் அல்ல. இறுதிவரையில் பெரியாருடைய தலைமையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பெரியாருக்குக் கடவுள் நம்பிக்கையே கிடையாது. அவருடைய தலைமையை ஏற்றுக் கொண்டுள்ள அண்ணா அவர்களுக்கும் கடவுள் நம்பிக்கை கிடையாது. ஆனால் மதவாதிகளின் மனம் புண்படக் கூடாது என்பதற்காகவே அண்ணா அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்கள். அதைத்தான் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

[1974 டிசம்பர் 18

திரு. க. உசொ. எட்மண்ட் : இந்த மன்றத்திலே ஆளும் கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சிக்குத் துணைபோகிற தோழமைக் கட்சி உறுப்பினர்களும் பேசும்போது இன்றையதினம் நாட்டிலே இருக்கிற விலைவாசி ஏற்றம், உணவுப் பற்றாக்குறை ஆகியவை களுக்கு இந்த அரசு பொறுப்பல்ல. பருவ மழை, காலத்தில் பெய்ய வேண்டிய மழை பொய்த்துவிட்டதுதான் காரணம் என்று சொன்னார்கள். அதனால்தான் விலைவாசி ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள்.

ஆனால் நேற்றையதினம் நம்முடைய சட்டமன்றத்தின் மேல வையில் பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய உணவு அமைச் சரவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லி இருப்பதெல்லாம்

' the price of rise has shot up because of the malpractices of the traders, he added '.

என்று. நாட்டிலே மழை இல்லை; மழை இல்லாததால் இந்த ஆண்டு விளைச்சல் இல்லை; இன்னும் வருகிற ஓராண்டு காலத்திற்கு விளைச்சல் இல்லாவிட்டால் கடும் பற்றாக்குறை ஏற்படும்; இப் போதே 10 லட்சம் டன் அளவுக்கு விளைச்சல் குறைந்திருக்கிறது என்ற கருத்தை மட்டும் சொல்லவில்லை.

இந்த நாட்டில் விலை ஏற்றத்திற்குக் காரணம், உணவுப் பண்டங்களை வியாபாரம் செய்கிறவர்கள் செய்கிற தவறுதான் என்று நேற்றையதினம் மேலவையில் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல காரணம் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மு.ப. 11.30)

மேலும் மேலவையில் உணவு அமைச்சர் அவர்கள் பேசும் போது விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் சென்ற ஆண்டு விளைச்சல் குறைவு என்று சொல்லவில்லை. சென்ற ஆண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்தால்தான் இந்த ஆண்டு விலைவாசி ஏறும் என்ற நியாயம் அவருக்குத் தெரியும். நாட்டின் நிலை மையைப் பொருளாதார அடிப்படையைப் புரிந்து வைத்துக் கொண்டுதான் அவர்கள் சென்ற ஆண்டு விளைச்சல் இல்லை என்று சொல்லவில்லை.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1973 ஆம் ஆண்டிலும் சம்பா விளைச்சல், தாளடி விளைச்சல் குறைவுதான். அதனால்தான் விலை ஏறியிருக்கிறது என்றும் கூறியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக மேலவையில் சொன்ன விஷயத்தை இங்கே எடுத்துக்காட்டாகச் சொல்கிற மரபு உண்டா? பாராளுமன்றத்தில் ராஜ்ய சபை நடவடிக்கைகளை இங்கே மேற்கோள் காட்டக்கூடாது என்றே சொல்லியிருக்கிறார்களே, இங்கு இருக்கக்கூடிய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. தங்கமணி சொல்வது நல்ல கருத்தாக இருந்தாலும், அதை திரு. எட்மண்ட் பேசும்போது குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

திரு. க. உசொ. எட்மண்ட்: நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டும் கூட விளைச்சல் குறைவாக இருந்தது என்று இப்போது சொல்கிறார்கள். அரசாங்கத்தின் குறிப்பில் இருந்தே மொத்த உற்பத்தி எவ்வளவு என்பதை நான் குறித்து வைத்திருக்கிறேன்.

1966-67-ல்	37,91 லட்சம் டன்கள்.
1967-68	38.46
1969–70	35.50
1969-70	40.12
1970–71	50.07
1971–72	53.00
1972–73	55.00

லட்சம் டன்கள் விளைந்திருக்கின்றன. ஆக சென்ற ஆண்டு உற்பத்திக் குறைவு என்று உணவு அமைச்சர் அவர்கள் சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய நிதிநிலை அறிக்கைக் கூட்டத்திலே நமது மாண்புமிகு மூதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டின் உணவு உற்பத்தியைப் பற்றிக் கருத்துச் சொல்கிற நேரத்தில், "தமிழ் நாடு உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றிருக்கிறது. இது உபரி மாநில

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

மீக உருப்பெற்றிருக்கிறது. வெளி மாநிலங்களுக்கு அரிசி அனுப்பிக்கொண்டிருக்கிறோம்." என்பதாக இந்த அவையிலேயே சொல்லியிருப்பதை உணவு அமைச்சர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆகவே நான் ஏதாவது பேசினால் உடனே அதை மறுக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இப்போது ஏதாவது சொல்லி உணவு அமைச்சர் அவர்கள் மாட்டிக்கொள்ளவேண்டாம், இப்படிச் சொல்லி தப்பிக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு முதலமைச்சர் அவர்களே, இந்த அவையில் தமிழ் நாடு உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றிருப்பது மட்டுமல்ல, உபரி மாநிலமாக உருப்பெற்றிருக்கிறது. பல்வேறு மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் ஆணைக்கிணங்க அரிசி அனுப்பியிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறபோது, போன ஆண்டும் விளைச்சல் குறைவு என்று உணவு அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னால் இதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயினும் இன்றையதினம் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது, படி அரிசி 7 ரூபாய்க்கு விற்கிறார்கள், இது 10 ரூபாய்க்கு வருமோ என்கிற அச்சமும் இருக்கிறது. இதற்குக் காரணம் இந்த நாட்டில் அரிசி வியாபாரம் செய்பவர்கள் தவறான முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள் என்பதை உணவு அமைச்சர் மேலவையில் சொல்லியிருப்பதை யாரும் மறுக்க முடியாது. இதைத் தான் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம் அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, உணவு அமைச்சர் அவர்கள் மேலவையில் மத்திய அரசாங்கத்தின் மீது ஒரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை மட்டும் படிக்கிறேன்.

The Minister said the present food crisis was largely due to the policies pursued by the Central Government. Because of the relaxation of the restrictions on the movement of coarse grains to favour private traders of the North ', prices of the millets shot

up and the Government did not have powers to stop traders from purchasing huge quantity of millets.

என்று மத்திய அரசாங்கத்தின் மீது பழியைப்போட்டுத் எப்படியாவது தப்பிக்கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்திருக்கிறார்கள். இப்படி சாதுர்யமாகச் சொல்லித் தப்ப முடியாது என்பதை உணவு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கேயிருந்து வெளி மாநிலங்களுக்குப் புஞ்சை தானியங்கள் செல்வதைத் தடுப்பதற்கு அதிகாரம் இல்லையென்று சொல்கிறீர்கள். இந்த மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பெற்று, மாநில அரசாங்க அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட பர்மிட்டுகளைப் பெற்று, அரிசியை இந்த மாநிலத்தில் இருந்து நெல்லைக் கடத்தியிருப்பதைத் தடுக்கக்கூட இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையா? இத்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வந்த நாளில் இருந்து தாண்டவராயன் என்ற பெயர்—அவர் யாரோ ஒருவர்—அவர்தான் இந்த மன்றத்தில் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சம்பந்தமாக ஒரு பெரிய பிரச்சினையே உருவாகியிருக்கிறது. ஒரு பர்மிட் கொடுத்து 1½ லட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல்லை வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதித்து, அறுநூறு வாகன்கள் கடத்தப்பட்டிருக்கின்றன. எங்களிடம் வெளி மாநிலங்களுக்குச் செல்கிற புஞ்சை தானியங்களைத் தடுக்க அதிகாரம் இல்லை என்கிற உணவு அமைச்சர் இப்படி கடத்தல்காரர்களுக்குப் பர்மிட் என்று மாநில அரசாங்கமே கொடுத்து அரிசி கடத்தப்பட்டிருப்பதைத் தடுக்கக்கூட அதிகாரம் இல்லையென்கிறாரா? செக்போஸ்ட் போதுமானதாக இல்லை என்கிறாரா? போலீஸ் படை கடத்தலைத் தடுக்க செயல்படவில்லை என்கிறாரா?

கடத்தலைத் தடுக்கத்தான் அதிகாரம் படைத்தவர்களாக இல்லை. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை இந்த மாநிலத்தில் உள்ள அறவைக்காரர்களிடம் கொடுத்தார்களே, அவர்களிடம் கொடுத்த நெல்லையாவது ஒழுங்காக அரைத்து வாங்கினார்களா?

மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் கடைசீப் பக்கத்தில் நெல்லைச் சேர்ந்த ஷண்முகவேலு என்பவருக்கு எட்டு லட்சத்து நாற்பத்துநாலாயிரம் ரூபாய் சொச்சம் மதிப்புடைய நெல்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரிடம் இருந்து திரும்பப் பெற்றிருப்பது மூன்று லட்சத்து 72 ஆயிரம் சொச்சம் மதிப்புடைய அரிசிதான். பாக்கி அப்படியே இருக்கிறது. ஜகன்மோகன் ராவ் என்பவருக்கு 2 லட்சத்திற்கு அதிகமான மதிப்புடைய நெல் கொடுக்கப்படுகிறது. ஒரு மணி அரிசி கூடத் திரும்பவரவில்லை. இப்படி சொல்லிக்கொண்டே போவேன். கடைசியில் கூட்டிக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். அரசாங்கம் கொள்முதல் செய்த நெல்லை தனிப்பட்ட ரைஸ் மில்காரர்களிடம் அரிசியாக அரைத்துக் கொடுக்கக் கொடுத்திருப்பது மட்டும் 43 லட்சத்து, 21 ஆயிரத்து 510 ரூபாய். ஆனால் இன்னும் அரிசியாகவோ, பணமாகவோ திரும்பப் பெறுது நிற்பது மட்டும் ஏறத்தாழ 39 லட்சத்து 95 ஆயிரத்து, 830 ரூபாய். கொடுக்கப்பட்ட நெல்லை அரைத்து அரிசியாக திரும்ப வாங்க முடியவில்லை. இந்த நிலையில் மத்திய அரசாங்கத்தின் மீது இவர்கள் பழிபோட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அமைச்சர் அவர்கள் மேலவையில் சொன்னதுபோல இன்றைக்கு நாட்டில் பற்றாக்குறை இல்லை. போதுமான நெல் விளைந்திருக்கிறது. விளைந்த நெல் வேறு மாநிலங்களுக்கு கடத்தல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள பதுக்கல்காரர்களிடமே பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் இன்றைக்கு நாட்டிலே அரிசி இல்லை, கிராமங்களுக்கும் ரேஷன் கொண்டுவந்தாகவேண்டும் என்று நாட்டு மக்கள் கூக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் குரல் அமைச்சர்கள் காதில் விழவில்லை. கேளாக் காதினராக சும்மா இருந்துகொண்டிருக்கிறார்கள்.

நாட்டு மக்களுக்கு உணவு கொடுக்கக் கூடாது என்ற மனம் இருக்கிறதா என்றால், நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. நம்முடைய அமைச்சர்கள் மனிதாபிமான உள்ளவர்கள், ஏழை, எளியவர்களுடைய வயிற்றுப் பசியைப் புரிந்தவர்கள். அந்த இரக்கம் இருக்கிறது, ஈவு இருக்கிறது, நல்லெண்ணம் இருக்கிறது. ஆனால், இத்தனையும் இருந்தாலும் அரசாங்கக் கிடங்குகள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றன. அங்கு வெறும் சாக்குகள் இருக்கின்றன. அந்த அளவுக்குக் கொள்முதலை ஒழுங்காகப் பண்ணுத காரணத்தினாலே, இந்த ஆண்டு பண்டங்கள் கிடைக்கவில்லை. கிடைக்காத காரணத்தாலேதான் இன்றைக்கு விலைவாசிகள் கூடியிருக்கின்றன. அல்லது

1974 டிசம்பர் 18] [திரு. க. உரொ. எட்மண்ட்]

அதற்கு இன்னொரு காரணம் இருக்கவேண்டும். இந்த அரசாங்கம் போன ஆண்டு கொள்முதல் செய்யவில்லே என்பது மட்டுமல்ல, இன்றையதினம் பதுக்குகிறவர்களே, கடத்துகிறவர்களே, கொள்ளேயடிப்பவர்களேப் பராமரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னுர்கள், இரண்டு நாளேக்கு முன்னுலே, இந்த மன்றத்திலே அவர்கள் ஒரு விவாதத்திற்குப் பதில் சொல்கின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னுர்கள். 57 இலட்சம் டன் இந்த நாட்டுக்குத் தேவை, ஆனுல் விளேவோ 55 இலட்சம் டன் தான், 2 இலட்சம் பற்ருக்குறை. 2 இலட்சம் பற்ருக்குறை இருக்கிற காரணத்தாலேதான் இன்றைக்கு விலேவாசி ஏறியிருக்கிறது என்ற வாதத்தினே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்னுர்கள்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இப்பொழுது மன்றத்திலே இல்லே, நம்முடைய உணவு அமைச்சரவர்கள் கவனத்திற்கு ஒன்றைக்கொண்டு வரவிரும்புகிறேன். அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1967 முதல் 1969 வரையில் இருந்த நிலேயைக் கூறுகிறேன். 1966-67-ல் விளேச்சல் 37.91 இலட்சம் டன், அவ்வளவுதான். அதற்கடுத்தாற்போல், 1967-68-ல் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் விளேச்சல் 38.46 இலட்சம் டன். அடுத்து, 1968-69-ல் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்த நாட்டினுடைய மொத்த விளேச்சல் 35.50 இலட்சம் டன். நான் இன்றைக்கு அமைச்சரைப் பார்த்துக் கேட்கவிரும்புகிறேன், பேரறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டினுடைய மொத்த அரிசி உற்பத்தி 35 இலட்சம் டன்னேத் தாண்டவில்லே. ஆனுல், அண்ணு அவர்கள் ரூ. 3-¾-ஆக இருந்த அரிசி விலேயை ரூ. 1¼ ஆகக் குறைத்துக் காட்டினுர்கள். அண்ணுவும் ஒரு அமைச்சர்தான், நீங்களும் அமைச்சர்கள்தான். இன்றைக்கு 55 இலட்சம் டன் அரிசி நாட்டிலே உற்பத்தியாகியிருக்கிறது. இந்த ஆண்டை கணக்கிலே எடுக்கவேண்டாம். 55 இலட்சம் டன் அரிசி இன்றைக்கு உற்பத்தியாகியிருக்கிறது. உங்களாலே படி அரிசி போட முடியவில்லேயென்ருல், ஏறிக் கொண்டிருக்கிற விலேயைக் கட்டுப்படுத்த முடிந்ததா என்ருல்,

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

நிச்சயமாக முடியவில்லை. ஆனால், அண்ணா அவர்கள் காலத்தில், 35 இலட்சம் டன் அரிசி உற்பத்தி. 1967 ஆரம்பத்திலே படி அரிசி ரூ. 4 ஆக இருந்ததை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 5 மாத காலத்திற்குள் ரூ. 1¼-ஆகக் குறைத்தார். இரண்டுபேருக்கும் திறமை இருக்கிறது, இரண்டுபேருக்கும் அதிகாரம் இருக்கிறது, இரண்டுபேருக்கும் வேலை செய்கின்ற அதிகாரிகள் இருக்கிறார்கள், இரண்டுபேருக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அண்ணாவுக்குப் பதுக்கலைக், கடத்தலைத் தடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தது, நல்ல மனம் இருந்தது. அது இன்றையதினம் அமைச்சரவையிலே இருக்கின்றவர்களுக்கு இல்லையென்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, காரணம் அதுவல்ல. 38 இலட்சம் டன்னை இருக்கும்போது ரூ. 1¼-க்கு விற்றது என்றால், 55 இலட்சம் டன் இருக்கும்போது, பொருளாதார ரீதியிலே கணக்குப் போட்டுப் பார்த்தால் கூட ரூ. ¾-க்கு விற்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் பேசுகின்றபொழுது அன்ய அரிசி விலையைக் குறிப்பிடுகின்றார்கள். அன்று ரூபாயினுடைய மதிப்பு 80 பைசாவாக இருந்தது, இன்று 22 பைசாவாக ஆகியிருப்பதையும், ஜனத்தொகை அன்றிலிருந்து இன்று மாறுபட்டிருப்பதையும் ஒத்துக் கொள்கிறார்களா? அதற்கு என்ன விளக்கம் கூறுகிறார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மதிப்பிற்குரிய-பார்வார்ட் பிளாக் கட்சியினுடைய—கந்தசாமி அவர்கள் வழக்கறிஞர். அவருக்கும் பொருளாதாரம் தெரியும் என்று நினைக்கிறேன். 1967-ம் ஆண்டு 37 இலட்சம் டன் அரிசி உற்பத்தியான காலத்தில் என்ன ஜனத்தொகை இருந்தது, அன்றைக்குப் பணத்தினுடைய மதிப்பு என்ன? இன்றைக்கு 55 இலட்சம் அரிசி உற்பத்தியாகியிருக்கிற இந்த ஆண்டில் ஜனத்தொகை என்ன? இன்றைக்குப் பணத்திற்கு இருக்கிற மதிப்பு என்ன என்பதை விகிதாசாரப்படி கணக்குப் பார்த்தாலும் இன்றையதினம் அரிசி ரூ. 7 க்குப் போக முடியாது. ரூ. 3½-க்கு விற்கவேண்டும். அதை திரு. கந்தசாமி அவர்கள் ஒத்துக் கொள்வார்களா?

திரு. கே. கந்தசாமி: ரூ. 7½-க்குப் போகாது என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் ரூ. 3/4-க்கு விற்க முடியாது என்பதை ஒத்துக்கொள்கிறார்களா?

1974 டிசம்பர் 18]

திரு. க. உரொ. எட்மண்ட்: ரூ. 7-க்கு விற்க முடியாது என்று திரு. கந்தசாமி அவர்கள் சொன்னதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சரியாகக் கணக்குப் போட்டுப் பார்த்தால், இன்றையதினம் உள்ள உற்பத்தி, ஜனத்தொகை, பணத் தினுடைய மதிப்பு இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால், அன்றைக்கு ரூ. 1¼-க்கு விற்றது இன்றைக்கு ரூ. 2-க்குத்தான் விற்கவேண்டும். தனிமையிலேயிருந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பொருளாதார அடிப்படையிலே கணக்குப் போட்டு பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். *(திரு. கே. கந்தசாமி எழுந்தார்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தோடு விட்டு விடுங்கள். அரசாங்கத்திலே பதில் சொல்வார்கள்.

திரு. கே. கந்தசாமி: என்னைப் பொருளாதாரம் தெரியுமா . .

திரு. க. உரொ. எட்மண்ட்: ஐ எம் நாட் யில்டிங்.

MR. DEPUTY SPEAKER: The Hon. Member is not yielding. Thiru Edmund can proceed.

திரு. க. உரொ. எட்மண்ட்: அந்த அளவிற்கு இன்றையதினம் உள்ள நிலைமையை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வளவிற்கும் காரணம், கொள்முதலிலே அரசாங்கம் கையாண்ட தவறான வழிதான். கொள்முதலுக்குண்டான பட்டியலைக்கூட இந்த மன்றத்திலே நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளிவிவரம் இது. 1965-ம் ஆண்டில் இந்த நாட்டிலே மொத்தக் கொள்முதல் 8.16 இலட்சம் டன். 1966-ல் 7.19 இலட்சம் டன். 1967-ல் 8.54 இலட்சம் டன். 1968-ல் 7.6 இலட்சம் டன். 1969-ல் 6.6 இலட்சம் டன். 1971-ல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே இந்த நாட்டிலே கொள் முதல் அளவு 97 ஆயிரத்து—அண்ணாவின் காலத்தில், 38 இலட்சம் டன் வீழ்ந்த அண்ணாவின் காலத்தில் கொள்முதல் 8.4 இலட்சம் டன் ஆனால், 50 இலட்சத்திலிருந்து ஆண்டுதோறும்கூட, 55 இலட்சம் டன் வரைக்கும் உற்பத்தியான காலத்திலே நம்முடைய முதலமைச்சருடைய காலத்திலே 1971-ல் கொள்முதல் அளவு 97,215 டன். 1972-ல் 1.09 இலட்சம் டன். 1974 நவம்பர் முடிய இதுவரைக்கும் கொள்முதல் 1.47 இலட்சம் டன். இவ்வளவுதான்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

அவர்களாலே கொள்முதல் செய்ய முடிந்தது. (குறுக்கீடு) ரேஷன் இருந்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன். அண்ணாவிற்குப் பிறகு, நீங்கள் ரேஷனை எடுத்துவிட்டீர்கள். மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல். நாட்டிலே எப்பொழுதும் மழை இருக்காது, நாட்டிலே எப்பொழுதும் விளைச்சல் பெருகாது. என்றைக்காவது ஒருநாள் வறட்சி ஏற்படும் என்று எதிர் பார்க்கவேண்டியது ஆள்கின்றவர்களுடைய கடமை. அப்படிப் பட்ட நேரத்தில் நிலைமைகளைச் சமாளிக்கவேண்டியது இந்த நாட்டை ஆளுகின்றவர்களிடம் இருக்கிறதே தவிர, விவசாயி களிடமோ, அல்லது மக்களிடமோ இல்லை. நீங்கள் ஒழுங்காகக் கொள்முதலைச் செய்திருந்தால்? ஒரு பக்கத்திலே உபரி மாநிலம், உபரி மாநிலம் என்று வெளி மாநிலத்திற்கு அனுப்பிக் கொண்டிருந் தீர்கள். இங்கே பழைய அரிசி என்று தாண்டவராயன்களுக்கும் கண்டவர்களுக்கும் அரிசியை ஏற்றுமதி செய்ய நீங்கள் பர்மிட் கொடுத்திருக்கிறீர்கள்.

இவையெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், நீங்கள் அரிசியைச் சேமிப்புக் கிடங்கிலே சேமித்து வைக்க இந்த ஆட்சி அக்கறை எடுத்ததா என்றால் இல்லை, நிச்சயமாக இல்லை. இந்த ஆண்டு சேமிப்பே இல்லை. அவர்கள் ஒழுங்காகக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்திருப்பார்களானால், இன்றைக்கு வியாபாரி ரூ. 7-க்கு அரிசி விற்கிறான் என்றால், அதை ஒடுக்குவதற்கு, மடக்கு வதற்கு, அரசாங்கமே ரேஷன் கடைகளைத் திறந்து ரூ. 2-க்கு அரிசி அளந்தால், ரூ. 7-க்கு வெளி மார்க்கெட்டிலே அரிசி விற்குமா? நிச்சயமாக விற்காது. ஆகவே, இவ்வளவுக்கும் காரணம், அரசாங்கத்தினுடைய தவறான வழிமுறைகளே தவிர, தவறான நிர் வாகமே தவிர, மழை இல்லை என்பது, யாரோ ஒருவர், எவர் மீதோ பழி போட எதையோ சொன்னதைப்போல்தான் இருக் கிறது என்று தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்த ஆண்டு சொல்லுங்கள், நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். போன ஆண்டு மழை இல்லை, போன ஆண்டு விளைச்சல் இல்லை, மழை இல்லையாதலால் விளைச்சல் இல்லையென்று நீங்கள் சொல் லுங்கள் அடுத்த ஆண்டு. நாங்கள் உண்மையிலே, மனசாட்சியின் அடிப்படையிலே ஏற்றுக்கொள்வோம். இங்கே எல்லோரும் சொன்னார்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அவர்களுக்கு உறு துணையாகப் போய்க்கொண்டிருக்கிற உறுப்பினர்களும் இங்கே சொன்னார்கள். எங்களுக்கு இதே வேலையென்று சொன்னார்கள்.

1974 டிசம்பர் 18] [திரு. க. உரொ. எட்மண்ட்]

இதே வேலைதான் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு, சட்டசபை ஆரம்பிக்கிறபோது எல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். உங்கள்மீது நம்பிக்கையில்லையென்று எதற்காக நாங்கள் அடிக்கடி தீர்மானம் கொடுக்க வேண்டும்? அதனுடைய பலன் என்ன? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு மூன்றாவது முறையாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்திற்கான காரணங்களை, ஆதாரங்களை நாங்கள் காட்டவில்லையா? சென்ற ஆகஸ்டு மாதம் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தோம், பல குற்றச்சாட்டுகளைச் சொன்னோம். ஆதாரங்களோடு சொன்னோம். நீதித் துறையில் தலையிடுகிறார்கள் என்று ஆதாரம் காட்டியிருக்கிறோம் உரு ஊழல் நடந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக அரசாங்க ஜீ.ஓ. கொண்டு வந்து காட்டியிருக்கிறோம். இன்றைக்கு எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையை நாங்கள் ஆதாரம் காட்டுகிறோம். இத்தனை ஊழல்களுக்கும் காரணம் பஞ்சத்திற்குக் காரணம் விலையேற்றத்திற்குக் காரணம், பற்றாக்குறைக்குக் காரணம் ஆளுங்கட்சியிலே உள்ள அமைச்சர் பெருமக்கள்தான் காரணமே தவிர, மழையில்லாதது காரணமல்ல, இயற்கை பொய்த்துவிட்டது காரணமல்ல, ஆண்டவன் கவனிக்கவில்லை என்பது காரணமல்ல, இந்தக் காரணங்களையெல்லாம் இன்றைக்கு நாங்கள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கை பற்றி பல உறுப்பினர்கள் இங்கே பேசிவிட்டார்கள். இந்த ரிப்போர்ட்டைப் பற்றி எனக்குக் கவலையில்லை என்று நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் சொல்கிறார்கள் என்றால் இந்த ரிப்போர்டை அவர்கள் மதிக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்பதுதான் எங்களுக்குள்ள வருத்தம். அவர் அதை மதிக்கவில்லை என்று சொல்வது நான், முதலமைச்சரை மதிக்கவில்லை என்று அவர் சொல்லவேண்டுமென்று நினைத்து மறைமுகமாக இப்படிச் சொல்கிறார்களோ என்றுதான் சந்தேகப்படுகிறேன். . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரிப்போர்டை மதிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை.

[1974 டிசம்பர் 18

திரு. பெ. சீனிவாசன்: கவலைப்படவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள், ஐ டோண்ட் கேர் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஐ டோண்ட் கேர் என்று நீங்கள் பேசலாம். நான் பேசமுடியாது, நான் எம்.ஏ.பி.எல். அல்ல, சாதாரண ஆள். . .

திரு. பெ. சீனிவாசன்: கவலையில்லை என்று சொல்லியிருக்கிறீர்களே, என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அறிக்கையிலே சில புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். அதை நான் எந்த இடத்திலே சொன்னேன், என்று சொன்னேன் என்று பார்க்கவேண்டும். அவர்கள் சொன்னார்கள் சில புள்ளிவிவரங்களை, நான் சொன்னேன், அந்தப் புள்ளிவிவரங்களைப் பற்றிக் கவலையில்லை, நான் ஆதாரத்தோடு சொல்கிறேன் என்று சொன்னேன். நான் எஸ்டிமேட்ஸ் கமிட்டியை அவமதிக்கவேண்டுமென்று எதையும் சொல்லவில்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்:

I do agree with the Hon. Minister. இரண்டு நாட்களுக்கு முன்னதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன் கவலையில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன்: எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்டைப் பற்றிக்கவலை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையிலே இருப்பது எல்லாம் தவறு என்று நான் சொல்லவில்லை. இப்போதும் அதைத்தான் சொல்கிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டியை அவமதித்து நான் எதையும் சொல்லவில்லை.

திரு. ஆலடி அருணா: தவறு என்று சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். அந்த அறிக்கையைப் பற்றிக் கவலையில்லை என்று சொன்னார்கள். . .

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் நிலைமையைத் தெளிவாக்கிவிட்டார்கள், அடுத்த பிரச்னைக்குப் போகவும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையைப்பற்றிக் கவலையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள், அதிலே தவறு இல்லை என்று சொல்கிறார்கள். தவறு இல்லை என்றால் அந்த அறிக்கை ஒழுங்கான முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் எதைக்குறிப்பிட்டுச் சொன்னேன் என்பதைப் பார்க்க வேண்டும். 700 வேகன்கள் என்பதைப்பற்றி சர்ச்சை வந்தது. நான் டன் கணக்கிலே சுவாண்டிட்டியிலே சொன்னேன். அதிலே வேகன் என்று போடப்பட்டிருக்கிறது. அதிலேயும் தவறில்லை, நான் சொல்வதிலேயும் தவறு இல்லை.

திரு. பெ. சீனிவாசன்: இங்கே திருமதி அனந்தநாயகி அவர்களோ வேறு யாரோ உறுப்பினர் எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையை வைத்துக்கொண்டு விவாதிக்கிறபோது அமைச்சர் அதைப்பற்றிக் கவலையில்லை, என்று அவர் கையிலே வைத்துக் கொண்டிருந்த ஒரு தாளை வைத்துக்கொண்டு நான் சொல்கிற புள்ளிவிவரம் இதோ இருக்கிறது என்று சொன்னார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அந்த அறிக்கையைப்பற்றிக் கவலையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 700 வேகன் என்று அதிலே இருக்கிறது, அமைச்சர் டன் கணக்கிலே சொல்கிறார். திரும்பத் திரும்ப இங்கே கேட்டார்கள், எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையிலே டன் என்று சொல்லவில்லை, வேகன் என்று சொல்லியிருக்கிறது, அதிலே சொல்லியிருப்பதைப்பற்றிக் கவலையில்லை, என்னிடம் இருக்கிற பதில் டன்னில் இருக்கிறது அதைத்தான் சொல்கிறேன் என்ற முறையிலேதான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடத்தில் கவலையில்லை என்ற வார்த்தையைச் சொன்னீர்களே தவிர அறிக்கையைப்பற்றிக் கவலையில்லை என்று அவர்கள் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 18

திருமதி சத்தியவாணிமுத்தி: 700 வேகன்கள் என்ருல் எத்தனை டன் என்று கேட்டதற்கு தெரியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள், அதுதான் எனக்கு வேலையா என்று கேட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் வேகன்களுக்கு எத்தனை டன் என்று திரும்பத் திரும்பக் கேட்டும் சொல்லவில்லே. பிறகு நான் சொன்னேன், மொத்தம் 700 வேகன்களில் 36,400 டன் போய் இருக்கும் என்று கணக்குச் சொன்னேன், அமைச்சர் அவர்கள் கணக்குப்படி 5,000 டன்தான் போயிருக்கிறது என்று சொன்னர்கள். எது உண்மை? எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையிலே சொல்லியிருப்பது உண்மையா ? அமைச்சர் சொல்வது உண்மையா ? எதை அமைச்சர் ஒத்துக்கொள்கிருர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் அந்த ரிப்போர்ட்டைப்பற்றிக் கவலையில்லே என்று நான் சொல்லவில்லே என்று சொல்லியிருக்கிறர்கள், வேறு பிரச்னைக்குப் போங்கள். அதற்குப் பிறகும் சந்தேகம் இருந்தால் வேறு தனி விவாதம் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. நா. வீராசாமி: ஒரு அமைச்சர் பதில் சொல்லிவிட்டால் அதைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். முந்தா நாள் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே ஒரு தடவை அல்ல இரண்டு தடவை அல்ல குறிப்பு கனைப் பார்த்தால் தெரியும், எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையைப் பற்றி பல சிபாரிசுகள் அதிலே வருகிறபோது கவலையில்லே கவலையில்லே என்று சொன்னர்கள். அந்த நேரத்திலே 'It will amount to breach of privilege'. என்றுகூட ஒரு உறுப்பினர் சொல்லியிருக்கிறர். நான் அதை அஸ்திவாரமாக வைத்துத்தான் நேற்றுப் பேசினேன். எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. அந்தக் குறிப்புகளையெல்லாம் நாங்கள் பார்க்கவேண்டும். ஏதாவது மாற்றப்பட்டிருக்கிறதா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி த. நா. அனந்தநாயகி: நான் பேசிக்கொண்டிருக்கிற போது I am pressing the button. But it is not working. அமைச்சர் அவர்கள் எழுந்து சொன்னர்கள். அமைச்சர் அவர்கள் 4 ஆயிரத்து சில்லரை டன் போயிருப்பதாகச் சொன்னர்கள். நான் சொன்னேன், 700 வேகன்கள் போயிருக்கின்றன என்று எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையிலே இருக்கிறதே

1974 டிசம்பர் 18] [திருமதி த. ந. அனந்தநாயகி]

என்று. எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை என்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு வேகனுக்கு எத்தனை டன் என்று கேட்டார்கள், அதற்கு அந்த வேலை எனக்கில்லை என்று சொன்னார்கள். பிறகு அம்மையார் அவர்கள் கணக்கு சொல்லி 36 ஆயிரம் டன் வரையில் போயிருக்கிறது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கிற கணக்கு சரியா? எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்டிலே சொல்லப்பட்டிருப்பது சரியா?

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஒரு வேகனுக்கு 20 டன். அது தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்:

We are not expected to learn all these arithmetics. Let the hon. Member not teach arithmetic to us.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் அன்று பேசிய பேச்சு எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்டை அவமதிப்பதற்காகச் சொல்லவில்லை, அந்த எண்ணமும் எனக்கு இல்லை. இடையிலே அம்மையார் அவர்கள் பேசியதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன், நானும் கேள்விப்பட்டேன். ஒரு வேகனுக்கு எவ்வளவு டன் என்று மிகவும் சிரமப்பட்டு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(நண்பகல் 12.00)

நான் அன்று சொன்னதை மீண்டும் சொல்கிறேன். எவ்வளவு எக்செல் அனுப்பப்பட்டது என்ற வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப அன்றைக்குச் சொன்னேன். எக்செல் என்ற வார்த்தையை விட்டு விட்டுப் பேசுவது சரியல்ல. எக்செல் எவ்வளவு போயிற்று, எப்படிப்பட்ட டன் அனுப்பப்பட்டிருந்தாலும் குற்றம் குற்றம்தான், தவறு தவறுதான் என்று நான் உணவு இலாக்காவை ஏற்றுக்கொண்டிருந்த நோக்கில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. நான் உணவு இலாக்காவில் இருந்தபொழுது தாண்டவராயன் விவகாரத்திற்கு என்று தனி ஸ்டாஃப் போடுவதற்கு சேங்க்ஷன் செய்திருக்கிறேன். தனி லீகல் அட்வைசர் போட வேண்டுமென்று சேங்க்ஷன் செய்திருக்கிறோம். குற்றம் குற்றம்தான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இலட்சக்கணக்கான டன் என்ற புள்ளி விவரத்தைத் திருத்துவதற்காகத்தான் சொன்னேன். 700 வேகன்கள் என்று சொன்னார்கள், 700 வேகன்கள் என்று

[திரு. ப. உ. சண்முகம்] [1974 டிசம்பர் 18

போலீஸ் அறிக்கை கொடுத்ததைத்தான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய ரிப்போர்ட்டில் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் போலீஸ் அறிக்கை என்று அவர்களும் நான் எக்செஸ் குவான்டிட்டி பற்றித்தான் அன்றும் சொன்னேன், சொல்லியிருக்கிறார்கள். நானும் அதை ஒத்துக்கொள்கிறேன். இன்றும் சொல்கிறேன். எந்தவிதமான தவறும் இல்லை. அதற்கு வேண்டுமென்றால் வேறு கேள்வி போட்டால்கூடப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைப் பற்றி ஆளுங்கட்சியைச் சேர்ந்த. . . (Thiru N. Veerasami rose) I am not yielding. ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் தன் கருத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துள்ள அறிக்கை பத்திரிகையிலே பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

திருமதி சத்தியவாணிமுத்து : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விவாதம் வந்ததே, கவலை இல்லை என்று சொன்னார்கள் என்பதைப்பற்றிய விஷயத்தினால்தான். வேறு பிரச்னைகளை அம்மையார் அவர்கள் பேசி விவாதத்தைக் கிளப்புவது முறையல்ல. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று வேகன் ஏற்பாட்டைப்பற்றிச் சொல்வதானால் நான் அதை அலவ் செய்கிறேன்போல் இல்லை.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வேறு விவகாரத்தைப்பற்றிச் சொல்கிறார்களே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரவர்கள் வாதம் எழுப்புகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்னையை எழுப்புவது சரியல்ல.

திரு. எம். சுரேந்திரன் : பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கே ரூலிங் கொடுக்கவில்லை, அப்படிக் கொடுக்காதபொழுது. . .

திரு. பெ. சீனிவாசன் : ஒரு கட்சியின் தலைவர் கேட்கும் பொழுது. . .

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு கட்சியின் தலைவர் பேசுகிறார் என்றால், ஒரு பிரச்னையைப்பற்றிப் பேசி முடிந்துவிட்ட பிறகு அதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது முறையல்ல. இப்படிப்பட்ட பிரச்னையாக இருந்தால் நான் அலவ் செய்யவில்லை என்பதை இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: நீங்கள் இன்னும் அந்தப் பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு ரூலிங் கொடுக்கவில்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். நான் பாயின்ட் ஆஃப் ஆர்டரையே அலவ் செய்யவில்லை என்கிறேன். அதற்குப் பிறகு ஒரு ரூலிங் வேண்டுமா?

திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள்—நான் கொடுத்தது எக்செஸாக எடுத்துக் கொண்டு போனதைத்தான் குறிப்பிட்டேன், 700 வேகன் அல்ல என்று இப்பொழுது கூடச் சொன்னார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே கொடுத்திருப்பதால்தான் நாங்கள் இப்படி வற்புறுத்துகிறோம்.

'by the partners of A.M. Associated Traders had led to the export of 700 wagon loads unauthorisedly'.

'unauthorisedly'

என்ற அந்த ஒரு வார்த்தை போடப்பட்டிருக்கிறது, இதற்கு என்ன அர்த்தம்? அன்-ஆதரைஸ்ட் என்று 700 வேகன் என்று போட்டிருக்கிறது. அனுமதி இல்லாமல் போனது 5,000 என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: பர்மிஷன் இல்லாமல் போனது குறைவு என்று சொல்கிறார்கள். பர்மிஷன் இல்லாமல் போனது 709 வேகன் என்று எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது விளக்கம்தானே தவிர, பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

[1974 டிசம்பர் 18

திரு. எம். சுரேந்திரன்: தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை ரெய்ஸ் பண்ணும்பொழுது அலவ் பண்ணவில்லை என்று சொல்கிறீர்களே.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் இருப்பதைப் பற்றி மீண்டும் கிளப்பியிருக்கிறார்கள். மறுபடியும் எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைத்தான் படிக்கிறேன், பக்கம் 8, பாரா 31, குறிப்பு 3-ல்

'In almost all the 700 railway receipts, 700 forwarding notes and connected corresponding records maintained in Railway goods sheds bear the signatures mostly forged by known and unknown persons'.

என்று இருக்கிறது. அடுத்து (குறுக்கீடு) எந்தப் பக்கம் என்று சொன்னால் சொல்கிறேன், இதை நான் படித்துவிட்டு வருகிறேன், ஆத்திரப்படுகிறீர்களே, அவசரப்படுகிறீர்களே, ஏன் பொறுமையை இழந்துவிடுவதா?

'Scrutiny of invoices relating to 700 transactions most of which contained forged signatures of known and unknown persons'.

என்று இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான விளக்கத்தை அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்டேன். கொடுத்த அதிகாரிகளைக் கூப்பிட்டு வைத்துப் பேசியபொழுது, 700 வகையிலே போர்ஜரி என்று நாங்கள் வழக்குப் போட்டிருக்கிறோம், தாண்டவராயன் என்பவரைப்பற்றி, தாண்டவராயன் என்பதற்குப் பதில் ஆறுமுகம் என்று போட்டிருக்கிறார்கள், இதைப்பற்றியெல்லாம் சொல்ல வேண்டிய தூர்ப்பாக்கியம் ஏற்பட்டு விட்டது, வேறு வழியில்லை. ஆறுமுகத்தைப் போட்டிருக்கிறார்கள், ஆறுமுகத்திற்குப் பதில் வேறு யாரையோ போட்டிருக்கிறார்கள். 700 இல்லிகிட் வகைகள் என்று சொல்லவில்லை, 700 வகைகளுக்கு ஃபோர்ஜ்ட் கையெழுத்து போடப்பட்டிருக்கிறது, அரசாங்கம் கொடுத்த பர்மிட் ஃபோர்ஜ் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த வழக்கில் இன்னொன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன், 70 பர்மிட்டுகள் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது. 17 பர்மிட்டுகள் பெயரில் அதிகப்படியாக அரிசி அனுப்பப்பட்டது என்பது உணவு இலாக்காவிலிருந்து கொடுக்கப்பட்ட தகவல். எந்த இடத்தில் அன்-ஆதரைஸ்ட் என்று குறிப்பிடுகிறார்கள் அம்மையார் என்று தெரியவில்லை.

1974 டிசம்பர் 18]

'The Committee further observes that the purchase of forged bills with railway receipt by the partners of A.M. Associated Traders and the utilisation of Bank discount facilities by the partners of A.M. Associated Traders had led to the export of 700 wagon loads unauthorisedly. The Committee stresses that thorough investigation should be made and that all the guilty persons may be brought to book without leniency.'

இது கமிட்டியால் கொடுக்கப்பட்ட ரிப்போர்ட்டாகும். நான் சொன்னது போலீசிலிருந்து அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட ரிப்போர்ட் இது. நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், தெளிவுபடுத்த விரும்புகிறேன், எதையும் மறைக்க வேண்டுமென்று அல்ல, குற்றவாளிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று அல்ல. போலீசில் ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்-ஆதரைஸ்ட் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கமிட்டியினர் அதை எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு கமிட்டிதான் விளக்கம் சொல்ல வேண்டும், நான் சொல்ல முடியாது. இதில் ஆத்திரப்படவோ, கோபப்படவோ ஒன்றுமேயில்லை. (குறுக்கீடு) என் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்? எங்கள் பக்கத்திலிருந்து ஆயுதம் கிடைக்காதா என்று பார்க்கிறீர்கள், அதை ஒத்துக் கொள்கிறேன். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அன்-ஆதரைஸ்ட் என்று கமிட்டியில் போட்டிருக்கிறார்கள், கமிட்டியினர் எப்படி அதைப்போட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை, நான் அந்தக் கமிட்டியில் உறுப்பினராக இல்லை.

THIRU G. R. EDMUND : The hon. Member Thiru V. Krishnamoorthy is coming forward to give his explanation.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : Sir, I want to make a submission with the permission of the Chair.

Paragraphs 21 to 38 relate to a brief note received from the Food Department and circulated to the Members of the Estimates Committee. Paragraph 39 only is the decision of the Committee.

As the Hon. Minister has already pointed out, in paragraph 39, sub-paragraph (3) it has been stated that in almost all the 700 railway receipts, 700 forwarding notes and connected corresponding

records maintained in Railway goods sheds bear the signatures mostly forged by known and unknown persons. This is the reason for the Committee for putting the word 'unauthorisedly'.

DR. H. V. HANDE: The hon. Member, Thiru V. Krishnamoorthy, has given a statement and the hon. Member Thiru S. Vadivel, a member of the Estimates Committee has given several facts stating that several facts were not given to the Committee. Now a number of things are coming. I therefore, suggest that it would be better if the whole thing is re-examined and the whole thing gone into by a Committee consisting of members of the Assembly.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலீவர் அவர்களே, நம்முடைய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைப் பொறுத்தமட்டில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் தன்னுடைய கருத்தை எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

"1½ கோடி ரூபாய் பெறுமான அரிசி ஊழல் சம்பந்தமாக 19 பேர் மேல் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு அதிகாரிகள் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பது மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மிகுந்த செல்வாக்குப் பெற்றவர்களால்தான் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக நம்முடைய போலீஸ் விசாரணை முடிவடையாமல் இருக்கிறது. தமிழக போலீசாரின் திறமை யின்மை இதற்குக் காரணம் என்று சொல்லமாட்டேன். சுதந்திரமாக புலன் ஆய்வு நடத்த முடியாமல் போலீசார் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட ஃபைல் அரசிடம் கூட கேட்டது. ஆனால் அரசு தரவில்லை என்பதை திரு. வி. கிருஷ்ணமூர்த்தி நேற்று திருபர்களிடம் ஒப்புக்கொண்டிருக்கிறார். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அரசுக்கு இந்த ஊழலில் சம்பந்தம் இல்லை என்று கூறுகிறார்கள். அரியலூர் விபத்தின்போது 'அரியலூர் அழுகேசா நீ ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?' என்று கி.மு.க. சுவரொட்டிகளை ஒட்டி ராஜினாமா செய் என்று சொன்னதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். கள்ள பர்மிட்டுகளை உபயோகித்தவர்கள் மீது வழக்குப் போடாததற்கும், முதலாளிகளை விட்டு விட்டு குமாஸ்தாக்கள் மீது வழக்குப்

1974 டிசம்பர் 18] [திரு. க. உரொ. எட்மண்ட்]

போட்டதற்கும், இந்த ஊழல்களுக்கு உடந்தையாக இருந்த உயர் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கும் யாரோ ஒரு சக்தி—அவர் யாரோ என்று சொல்லுகிறார்; எங்களுக்குப் புரியவில்லை—இடையூறாக இருந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்" என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. விசுவநாதன் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ஊழல் சம்பந்தமாக பல்வேறு நிகழ்ச்சிகளை மதிப்பீட்டுக் குழுத் தலைவரே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அறகண்டநல்லூர் நெல் ஊழல் சம்பந்தமாக ஏற்கனவே ஜனவரி மாதம் 22-ம் தேதி இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. 'அறகண்டநல்லூர் ஊழலில் சம்பந்தப்பட்டவர் திரு. அப்துல் சலாம் அவர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச.-வின் மைத்துனர் கண்ணன் என்பவருக்கும் இடையே வியாபாரத்திலே நட்பு இருக்கிறது என்று பரவலாகப் பேசப்படுகிறது; அதை நம்புவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன' என்று எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் அறகண்டநல்லூர் தி.மு.க. செயலாளருக்கு நெல்லைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு இவ்வளவு பெரிய ஊழலை நடத்தியிருக்கிறார்கள். பாண்டியன் பிளைவுட் கார்ப்பரேஷனில் அப்துல் சலாம் பாகஸ்தர். அதே போல் பாண்டியன் ரப்பர்காலியிலும் பாகஸ்தர். பாண்டியன் பிளைவுட் கார்ப்பரேஷன் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் கூட கண்ணன் என்ற பெயர் இருக்கிறது. அவருடைய தொலைபேசி எண் 45 என்று இருக்கிறது. அந்தத் துண்டுப் பிரசுரம் வேண்டுமென்றால் நானைக்குச் சமர்ப்பிக்கிறேன் . . .

திரு. கோவை செழியன்: அது இப்போதே என்னிடத்தில் இருக்கிறது . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர்களுக்கு அந்தச் சங்கடம் தேவையில்லை. நான் ஒத்துக் கொள்வதில் தவறு இல்லை. கண்ணன் என்னுடைய சொந்த அக்கான் பிள்ளை; என்னுடைய மருமகன். அப்படிச் சொல்லிக் கொள்வதிலே வெட்கம்

[திரு. ப. உ. சண்முகம்] [1974 டிசம்பர் 18

ஒன்றும் இல்லை. பெருமையோடு ஒத்துக்கொள்கிறேன். பெயர் ப. கண்ணன். என்னுடைய மகளைக் கொடுத்திருக்கிறேன். திருமணத்திற்கு பலர் வந்து வாழ்த்தியிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் கூட வந்திருக்கிறார்கள். கட்சித் தலைவர்கள் வந்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் கூட வந்து மணமக்களை வாழ்த்தினர். திரு. செழியன் அவர்கள் ஆதாரத்தைக் கொடுத்து அனுப்ப வேண்டியதில்லை. டெலிபோன் நம்பர் என்னுடைய நம்பர்தான். அது பொய் அல்ல. என் மருமகன் என் டெலிபோன் நம்பரைப் போடாமல் வேறு டெலிபோனையா போட முடியும்? என் வீட்டில் என் மருமகன் இல்லாமல் இன்னொருவனா இருப்பான்? வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மெத்த நன்றி. அந்த அப்துல் சலாம் எப்படிப்பட்டவர் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஊழல் 1972-ம் ஆண்டில் நடைபெற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எந்த ஊழல், என்று சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அப்துல் சலாமுக்கு 4,34,053 ரூபாய் மதிப்புள்ள நெல் அரைக்க கொடுக்கப்பட்டிருக்கிறது . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர் ரைஸ் மில் வைத்திருக்கிறார். நெல் அரைக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஊழல் என்றால் எப்படி? அது எப்படி ஊழலாகும்?

திரு. க. உரொ. எட்மண்ட்: அது எப்படி ஊழலாகும் என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். தான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல்லை ஒரு ரைஸ் மில் முதலாளியிடம் அரைக்கக் கொடுத்துவிட்டு இதுவரை ஒருமணி அரிசி கூடத் திரும்ப வரவில்லையே. இது ஊழல் இல்லையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர் எதைச் சொல்லுகிறார் என்று விவரமாகச் சொன்னால் நல்லது. நான்கு லட்சம் ரூபாய் அளவுக்கு நெல் கொடுக்கப்பட்டு திரும்பவில்லை என்று சொல்லுவது சரியல்ல. அவர் வெள்ளம் அடித்துக் கொண்டு போனதைப் பற்றிக் குறிப்பிடுகிறாரா?

1974 டிசம்பர் 18]

திரு. கோவை செழியன்: நான்கு லட்சம் ரூபாய் பெறுமான நெல்லை அரசாங்கம் அப்துல் சலாமுக்குக் கொடுத்திருக்கிறது . . .

திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இவற்றுக்கு இப்படிச் சப்பைக் கட்டு கட்டக் கூடாது . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கொஞ்சம் அவகாசம் வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. வரூல் ஆகவில்லை. நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டோமா? வியாபாரிக்கு கன்செஷன் கொடுத்து தள்ளிவிட்டோமா? அவுட்டர்லை குறைவாக ஒத்துக்கொண்டோமா? எதையும் செய்யவில்லை. ஸ்டாக் கொடுத்தோம். டெலிவரி கிடைக்கவில்லை. அவர் மீது வழக்குப் போடாமல் இருக்கிறோமோ? நான் உணவு இலாகாவில் இருந்தபோதே அவரிடம் பணம் பாக்கியாக இருந்திருக்கிறது. நான் பொதுப்பணித் துறை இலாகாவை ஏற்றுக் கொண்டபோது அவரும் ஒரு காண்ட்ராக்டராக இருந்திருக்கிறார். அதிலே அவருக்குச் சேரவேண்டிய பணத்தை நிறுத்தி வைத்து நோட்டீஸ் கொடுத்து அவர் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கிறார். இதிலே நான் செய்த தவறு என்ன?

திரு. கோவை செழியன்: அப்துல் சலாமுக்கு நாலு லட்சம் ரூபாய் அளவுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவரே பதில் சொல்லுவார். நீங்கள் குறுக்கே எழுந்து பேசுவது சரியல்ல. இது வாம்புமுறை இல்லாமல் போகிறது.

திரு. பெ. சீனிவாசன்: பாயிண்ட் ஆப் ஆர்டர். திரு. செழியன் அவர்கள் ஒலிபெருக்கியில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேதாசலம் அவர்கள் வாயிலே வரக்கூடாத வார்த்தைகளை உபயோகித்து திட்டிக் கொண்டிருக்கிறார். நேற்று சட்டசபையில் நான் ஆத்திரமடைந்ததற்கும் அவர்தான் காரணம். வெளியில் வா, வெளியில் வா என்று சொல்லுகிறார்கள். கோதாவுக்கு கூப்பிட்டால் வரத் தயார். சட்டசபை முடிந்தவுடன் கோதாவுக்கு வரத் தயார். ஆனால்

[திரு. பெ. சீனிவாசன்] [1974 டிசம்பர் 18

சட்டசபையில் நான் தவறுமல் அவர் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் அதைத் தாங்கள் அனுமதித்துக் கொண்டிருப்பீர்களா?

மாண்புமிகு போரவைத் துணைத் தலைவர்: தனித்தனியாக இப்படி உறுப்பினர்கள் பேசிக்கொள்ள வேண்டாம்.

திரு. பெ. சீனிவாசன்: இப்போது பேசியதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

திரு. மு. வேதாசலம்: நான் அப்படிப் பேசவில்லை.

மாண்புமிகு போரவைத் துணைத் தலைவர்: அவர் இல்லை என்று சொல்லுகிறார். இனி இப்படி யாரும் பேச வேண்டாம்.

திரு. எஸ். வடிவேல்: நம்முடைய அமைச்சரவர்கள்; எது சூழ்ச்சம் என்று கேட்கிறார்கள். எது ஊழல் என்று கேட்கிறார்கள். நான் எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் இருந்ததால் விவரங்கள் அறிந்திருக்கிறேன். ஐந்து லட்சம் ரூபாய் அளவுக்கு நெல் கொடுக்கப்பட்டு திரும்பிக் கொடுக்கப்படாத நிலையிலே மேலும் இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்குக் கொடுத்திருப்பது தவறு இல்லையா? ஊழல் இல்லையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நெல் கொடுப்பது வாங்குவதில் ஆண்டுக்கு ஆண்டு கணக்கு இல்லை.

திரு. எஸ். வடிவேல்: அவர்கள் பொன்னை வாங்கி அடுக்கி வைத்துவிட்டார்கள் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நீங்கள் கூட இருந்து வாங்கிக் கொடுத்திருக்கலாம். அது எனக்குத் தெரியாது. எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் என்ன நடந்தது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அப்துல் சலாமிடமிருந்து ரூபாய் 4 லட்சத்து 34 ஆயிரம் அளவுக்கு அரசுக்கு வசூலாக வேண்டியிருக்கிறது என்பதை திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஹைகோர்ட் ஸ்டே என்று போட்டிருக்கிறது. ஹைகோர்ட் ஸ்டேயை வைத்து அரசு என்ன செய்யமுடியும்? பிறகு ஏதாவது கொடுக்கப்பட்டதா? நாங்கள் யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஹைகோர்ட் ஸ்டே கொடுத்திருக்கிறது. அவர்களும் ஒரு வழக்கறிஞர். அவர்கள் . . .

1974 டிசம்பர் 18]

திரு. க. உசொ. எட்மண்ட்: ஹைகோர்ட் ஸ்டே கொடுத்திருக்கிறது என்று சொல்லியிருப்பதை நானும் படித்தேன். Was any attachment proceedings instituted against Abdul Salam by the Government? Have they initiated any step in that regard?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல. நான் பொதுப்பணித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்டவுடன், அப்துல் ஸலாமுக்கு சிவில் சப்ளையில் பாக்கியிருக்கிறது என்று சொல்லி சிவில் சப்ளைஸ் இலாகா செயலாளரைக் கூப்பிட்டு அப்துல் ஸலாமுக்கு பாக்கியிருக்கிறது, ஆகவே அவருடைய பணத்தை பொதுப்பணித் துறையில் கொடுக்கவேண்டாம் என்று சொன்னேன். கொடுக்கக் கூடாது என்று உத்தரவு போட்டு அந்த உத்தரவைக் கொண்டு பணத்தை நிறுத்தினேனும். அதற்கு மேல் ஸ்டேக்கு போனார்கள். இவ்வளவு விளக்கமும் கொடுத்த பிறகு நடவடிக்கை எடுக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என்ன நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் தவறி விட்டோம்?

(மணியடிக்கப்பட்டது.)

திரு. க. உசொ. எட்மண்ட்: நான் பதினைந்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். மற்றவை இன்டரப்ஷன்ஸ்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முக்கால்மணி நேரம் பேசியிருக்கிறீர்கள். இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. க. உசொ. எட்மண்ட்: என்னால் முடியாது. நாங்கள் என்ன நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஹைகோர்ட் ஸ்டே கொடுத்திருக்கிறது, நாங்கள் என்ன செய்வது என்றார்கள். நீங்கள் எப்போது நடவடிக்கை எடுத்தீர்கள்? ஹைகோர்ட் ஸ்டே கொடுக்கிற வரையில் கண்ணைப் பொத்திக் கொண்டிருக்கிறீர்கள், தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். எப்போது ஸ்டே கொடுக்கப்பட்டது? இந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறதா ... (சிரிப்பு) சிரிப்பதில் பிரயோஜனமில்லை. இந்த ரிப்போர்ட்டில் கூட தவறுகள் நடந்திருக்கின்றன. வேடிக்கை என்னவென்றால் நெல்லைக் கொடுத்து மாதக்கணக்கில் அரைத்து அரிசி கொடுக்காதவருக்கு மீண்டும் பல மாதங்கள் கழித்து நெல் கொடுத்திருக்கிறீர்கள். உயர் நீதிமன்றம் ஸ்டே

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

கொடுத்திருக்கிறது என்றால் அந்த வாதத்தை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஒருவனுக்கு ஆயிரம் மூட்டை அரைக்கக் கொடுக்கிறீர்கள். எட்டு மாதம் அவன் அரைக்காமல் அரிசி கொடுக்காமல் வைத்திருக்கிறான். மீண்டும் அவனுக்கு ஆயிரம் மூட்டை நெல் அரைக்கக் கொடுக்கிறீர்கள் என்றால் இதை ஏற்றுக் கொள்ள முடியுமா? ஆயிரம் மூட்டை நெல்லை அரைத்துக் கொடுத்த பிறகு அடுத்த கோட்டா நெல்லைக் கொடுக்க வேண்டும் அரைப்பதற்கு. ஆகவே தவறு உங்கள் பக்கம் முழுக்க முழுக்க இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நடவடிக்கை எடுத்து, ஸ்டே வாங்கிய பிறகு நெல் கொடுத்தோம் என்று சொல்கிறீர்களா?

திரு. க. உரொ. எட்மண்ட்: என் பாயின்டே வேறு. நீதிமன்றம் ஸ்டே கொடுத்திருக்கிறது, அதற்குப் பிறகு நெல் கொடுத்திருக்கிறோமா என்று கேட்கிறார். அதைச் சொல்லவில்லை. முதலில் ஒரு சைஸ் மில் முதலாளிக்கு இரண்டாயிரம் மூட்டை நெல் அரைக்கக் கொடுக்கிறீர்கள். நான்கு மாதங்கள்வரை அரைத்துத் தாவில்லை. நீங்கள் என்ன செய்திருக்கவேண்டும். அடுத்த இரண்டாயிரம் மூட்டை நெல் கொடுக்கும்போது முதலில் கொடுத்த இரண்டாயிரம் மூட்டை நெல்லை அரைத்துக் கொண்டு வா அதற்குப் பிறகு இரண்டாயிரம் மூட்டை நெல் தருகிறேன் என்றல்லவா சொல்லியிருக்கவேண்டும். ஆகவேதான் இவ்வளவு பெரிய தொகை வரக் காரணம். அரிசி பாக்கியிருக்கும்போது திரும்பத் திரும்ப அரைப்பதற்கு நீங்கள் நெல்லைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டுதான் எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆற்றில் அடித்துக்கொண்டு போனதாகச் சொன்னதற்கு என்ன சொல்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆற்றில் அடித்துக் கொண்டு போனதற்கு நான்தான் காரணம் என்று தெரிவிக்கிறார்களா? பொறுமையாக இருந்தால் நான் பதில் சொல்கிறேன். அவைக்கும், உலகிற்கும் விஷயம் தெரியவேண்டும். ஆற்றில் அடித்துக்கொண்டு போனதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறீர்களா?

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆற்றில் அடித்துக்கொண்டு போய்விட்டது என்று ஒருவன் சொல்கிறான். அதற்கு உங்களுக்கு பொறுப்பில்லை. நானே இன்னொருவன் சொல்வான், பெருச்சாளி

1974 டிசம்பர் 18] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நின்றுவிட்டது என்று. அதற்கு உங்களுக்கு பொறுப்பில்லை. இன்னொருவன் சொல்வான், யாரோ திடீரென்று திருடிக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொன்னால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை என்று சொல்லிக்கொண்டு போனால் இந்த நாட்டில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை கொள்ளைக்காரர்கள் எடுத்துச் செல்ல நீங்கள் வழி செய்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆத்திரத்தோடு பேசுவதால் உண்மையை மறைத்துவிட முடியாது. நான் சிறிது நேரம் எடுத்துக்கொண்டாலும் சில விளக்கங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆற்றில் அடித்துக்கொண்டு போனதை கைப்பற்றினீர்களா, அதற்கு உங்களுக்கு பொறுப்பில்லையா என்று கேட்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது 1972-ம் ஆண்டு டிஸம்பரில் நடந்தது என்று நினைக்கிறேன். 72 டிஸம்பரில்தான் வெள்ளம் வந்தது. அப்போது ஆற்றில் அடித்துக்கொண்டு போனதாக தகவல் வந்தது. ஆற்றில் அடித்துக்கொண்டு போனதாக சொன்னதை ஒத்துக்கொள்ளவில்லை, நடவடிக்கை எடுத்திருக்கிறோம். வெள்ளம் அடித்துக்கொண்டு போனதாக சொல்கிறபோது அப்போது நான் உணவு அமைச்சர் அல்ல. உங்கள் ஆத்திரம் முழுவதும் என்மீதுதான் பாய்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆத்திரம், கோபம் முழுவதும் என்மீதுதான் வருகிறது. இதற்கு அப்போதிருந்த உணவு அமைச்சர் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை, அப்படிச் சொல்லவும் விரும்பவில்லை. சில உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதால்தான் சொல்கிறேன். ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது என்று சொல்லப்பட்டவுடன் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதற்கு நீதான் பொறுப்பு, இதற்கு பணம் முழுவதும் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த டெப்டி தாசில்தார் டெலிவரி கொடுத்தார்களோ—கீழே இருக்கிற அதிகாரி டெலிவரி கொடுக்கிறார்—அவரை சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். இதெல்லாம் வழக்கில் இருந்துகொண்டிருக்கிறது. ஆக, இதற்கு மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் தவறி விட்டோம்? ஒருவன் கேட்கிறான், பத்தாயிரம் மூட்டை என்று கொடுத்திருக்கிறீர்கள், அதில் நாலாயிரம் மூட்டை குறைந்து விட்டது என்று கேட்கிறான். உண்மை இருக்கிறது, கேட்கிறான். அதை நாங்கள் ஒத்துக்

[திரு. ப. உ. சண்முகம்] [1974 டிசம்பர் 18

கொண்டோமா? ஒத்துக்கொள்ளாததை குற்றச்சாட்டு என்று சொல்வதில் என்ன அர்த்தம்? அதை விளக்கிஞல் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

(திரு. எஸ். வடிவேல் எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பிரச்னைகளைக் கிளப்பி பதில்களும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் பாயிண்ட் என்ன?

திரு. எஸ். வடிவேல்: அமைச்சர்கள் மாறி மாறி வந்து கொண்டிருக்கலாம். ஆனால் அந்த இலாகாவின் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஒரே இலாகாதானே. இதே அமைச்சரவை தானே? வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய் விட்டது என்று சொல்வதில் என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. நாங்கள் யாரும் தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை, எனக்காக அன்றையதினம் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அது தப்பித்துக்கொள்வதற்காக அல்ல. கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. நான் அவர்கள் மீது பழி போட்டு தப்பித்துக்கொள்ளவிரும்பவில்லை. உங்களது கோபம் முழுவதும் என் மீதுதான் விழுகிறது. சில உண்மைகள் உலகிற்குத் தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நடவடிக்கைகள் எடுப்பதில் நாங்கள் தவறி இருக்கிறோமா? நடவடிக்கை எடுக்காமல், ஆற்றில் அடித்துக்கொண்டுபோய் விட்டது என்று சொன்னது உண்மை என்று நாங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால், அப்படி ஏற்றுக்கொண்டு அதை சாட் ஆப் செய்யலாம் என்று உத்தரவு போட்டிருந்தால் நீங்கள் சொல்கிறபடி அரசாங்கம் உடந்தையாக இருந்தது என்று பொருள்படும். நாங்கள் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். உடந்தையாக இருந்த அதிகாரிகளை வேலைநீக்கம் செய்திருக்கிறோம். மேற்கொண்டு என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். அப்துல் ஸலாமிற்கு இரண்டு தடவை தெல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சருக்கு தெரியவே தெரியாதா? என் கவனத்திற்கு

1974 டிசம்பர் 18] [திரு. கே. என். குமாரசாமி]

வந்ததைச் சொல்கிறேன். அந்த அப்துல் ஸலாமிற்கு திரும்பக் கட்டாத காரணத்தால் டிப்பார்ட்மென்டிலிருந்து இரண்டு நோட்டீஸ் போகிறது. நெல்லை நிருப்பிக் கொடுக்கவேண்டும் என்று இரண்டு தேதிகளில் இரண்டு நோட்டீஸ்கள் போகின்றன. அந்த இரண்டு நோட்டீஸ்களில் எது சரி என்று கோர்ட்டுக்கு ஸ்டேக்கு போயிருக்கிறார்கள். அதற்காக ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். டிப்பார்ட்மென்டில் இருந்து இரண்டு தேதிகளில் நான்கு மாதம், ஐந்து மாதங்கள் கழித்து ஒரு நோட்டீஸ். அதற்கு முன்னால் ஒரு நோட்டீஸ். டிப்பார்ட்மென்டில் இருந்து இரண்டு தேதிகளில் இரண்டு நோட்டீஸ்கள் போனதால் எது சரி என்பதற்கு கோர்ட்டில் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள் அப்துல் ஸலாம். இதற்கு வழிவகுத்தது டிப்பார்ட்மென்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்று தெரியவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆற்றில் போய்விட்டது என்று சமாதானம் அல்லது எக்ஸ்யூஸ் சொல்லி அதை நீங்கள் ஏற்றுக் கொண்டிருப்பீர்களானால் என்ன நடக்கும்? இன்னொரு ரைஸ் மில் முதலாளி பெருச்சாளி சாப்பிட்டு விட்டது என்று சொல்லிக் கொண்டிருப்பான். இரண்டாயிரம் மூட்டை நெல் அரசாங்கத்திற்குக் கிடைக்காமல் தனிப்பட்ட மனிதன் கொள்ளை அடித்திருக்கிறான். அதற்கு வழி செய்தவர்கள் யார்? சர்க்கார். முதலில் அவர்களுக்கு ஒரு கோட்டா கொடுத்தார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் தரவில்லை. என் தரவில்லை என்று கேட்பதற்குப் பதிலாக மறுபடியும் அவர்களுக்கு நெல் கொடுத்திருக்கிறீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இப்படி பல தவறுகள் செய்யப்பட்டதன் காரணமாகத்தான் இன்று ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசியும் நெல்லும் இந்த நாட்டிலிருந்து ஒன்று வெளியே கடத்தப் பட்டிருக்கிறது அல்லது கள்ள மார்க்கட்டில் பதுக்கி வைத்துவிட்டு கறுப்புச் சந்தையில் வைத்து கொள்ளை அடித்து இன்று நாட்டு மக்களை பட்டினியில் போட்டு வைத்திருக்கிறார்கள்.

மணி அடிக்கப்பட்டது.

[1974 டிசம்பர் 18

(பிற்பகல் 12-30)

இன்னும் அரை மணி நேரமாவது எனக்கு கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது 12-30 ஆகிவிட்டது. 11-20-க்கு ஆரம்பித்தீர்கள். குறுக்கீடுகள் எல்லாம் சேர்ந்துதான் உறுப்பினருக்கு கொடுத்த நேரம். ஐந்து நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: முஸ்லிம் லீக் கட்சியில் 7 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு 55 நிமிடம் என்றால் எனக்கு 1 மணி நேரம் என்றால் போதாது. ஒன்றரை மணி நேரமாவது வேண்டும். கூட 10 நிமிடங்கள் தாருங்கள்.

தலைவர் அவர்களே, இந்த அளவு உணவு நிலை சீர்கேடாகி விட்டது. என்றால் அது உங்களுடைய தவறான உணவுக் கொள்கையால்தான். மழை இல்லை என்ற காரணம் எல்லாம் சும்மா.

அடுத்தாற்போல் நிருநெல்வேலியில் உள்ள அம்பாசமுத்திரத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம். அந்தப் பகுதியில் உள்ள ஒரு ஊரின் ஒன்றியச் செயலாளர் தி.மு.க.-வை சேர்ந்தவர் அவர்தான் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர். அந்தச் சங்கத்திலிருந்து மூன்று பேர் ஆளுக்கு 30 ஆயிரம் ரூபாய் எடுத்தார்கள். லட்சுமணன், நம்பிக் கோனார், புதியவன் என்று அந்த மூன்று பேர் ஆளுக்கு 30 ஆயிரம் ரூபாய் கூட்டுறவு சொசைட்டியிலிருந்து எடுத்து தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்ய நெல் வாங்கி விற்று லாபத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி நெல் வாங்கி வைத்துக்கொண்டார்கள். அங்கே இருக்கிற ஆர்.டி.ஓ -சப்-கலெக்டர் அந்த அம்மையார் தகவல் தெரிந்து அந்த நெல்லைக் கைப்பற்றினார்கள். கைப்பற்றியவுடன் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் சங்கத்தின் சார்பில் கொள்முதல் செய்து வைத்திருந்தோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அளவு தவறு செய்வதற்கு, ஊழல் செய்கிறவர்களுக்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி மறுபடியும் சொல்லுகிறீர்கள் முன்பே சொல்லியாகிவிட்டது. ஒரு உறுப்பினர் சொன்ன பிறகு அமைச்சரும் பதில் சொல்லி இருக்கிறார்கள்.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு தி. மன்னை. ப. நாராயணசாமி : அந்த சொஸைட்டியில் தீர்மானம் போட்டு கொள்முதல் செய்து இருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் தீர்மானம் போடடு இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் செய்த குற்றம் மூன்று இடத்தில் வைத்திருந்தது. அப்படி வைத்திருக்க சர்க்கார் லேசன்ஸ் வாங்கவில்லே. பறிமுதல் செய்யப்பட்டு இருக்கிறது. அந்த மூன்று இடங்களிலிருந்து 80 ரூபாய் 90 ரூபாய் கொடுத்து வாங்கி இருந்த நெல்லே 70 ரூபாய் கொடுத்து அரசு பறிமுதல் செய்திருக்கிறது. அதனல் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. இது ஏற்கனவே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு.

திரு. க. உரொ. எட்மண்ட்: அடுத்தாற்போல் ஒரு மாதத்திற்கு முன்னல் நாங்குநேரியில் நடைபெற்ற ஒரு சம்பவம். ஸ்தாபன காங்கிரஸ் தலேவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதைப் பற்றி தன் கருத்தை சொல்லியிருக்கிறார்கள். இதைப் போன்ற கொடுமை ஜனநாயக நாட்டில் நடக்குமா என்று ஆச்சரியமாக இருக்கிறது. நாளைக்கு இதுபோன்று யாருக்கும் ஏற்படலாம்.

* * * *

மாண்புமிகு பேரவைத் தலேவர் : இந்த நிகழ்ச்சி பற்றி வழக்கு மன்றத்தில் இருக்கும்போது அதைப் பற்றி இந்த அளவு குறிப்பிட்டுச் சொல்வது நல்லதல்ல. ஆகவே சட்டசபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்டு:

* * * *

மாண்புமிகு பேரவைத் தலேவர் மறுபடியும் வழக்கு மன்றத்தில் உள்ள வழக்கைப்பற்றி பேசுகிறீர்கள். ஆகவே இதை சட்டசபைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன். பத்திரிகையிலும் வெளியிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : அது வழக்குமன்றத்தில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு முதல்வர்தான் காவல் துறையின் அமைச்சர். அவர் இதுபற்றி உடனடியாக நீதிவிசாரணே செய்ய வேண்டும். இது இன்னும் அரசாங்க

---

* மாண்புமிகு பேரவைத் தலேவரின் ஆணேக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

ரிகார்டுகளில் தாக்கல் செய்யவில்லை. இட் ஈஸ் ஒன்லி இன் தி எப். ஐ.ஆர். ஸ்டேஜ். சார்ஜ் ஷீட்டே பதிவு செய்யவில்லை. தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னால் அரசாங்கம் நினைத்தால் எந்த வழக்கையும் வாபஸ் பெறலாம். அவ்வாறு வழக்கை வாபஸ் பெற முதலமைச்சர் ஏற்பாடு செய்தால் நடந்த உண்மை தெரியும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் நம்முடைய கல்வி இலாகாவைப்பற்றி மட்டும் ஒரு சில குற்றச்சாட்டுகளைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் கல்லூரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எல்லாக் கல்லூரிகளும் எங்கே மூடப்பட்டிருக்கின்றன என்று கேட்டார்கள். பல கல்லூரிகள் இன்னும் மூடிக்கிடக்கின்றன. சதகதுல்லா கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்லூரி பேராசிரியர்கள் ஓராண்டு காலமாக சம்பளம் வழங்கப் படாமல் இருக்கிறார்கள். இப்படி 12 மாதம் சம்பளம் இல்லாமல் அவர்கள் என்ன செய்வார்கள் ? இந்த விலைவாசி ஏற்றத்தில் வேறு வழியில்லாமல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

கல்வி இலாகாவிலே சில காரியங்கள் சட்டத்திற்குப் புறம்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 'மெட்ராஸ் எஜுகேஷன் ரூல்ஸ்' என்று சொல்லக்கூடிய 'எம்.இ.ஆர்.' இருக்கிறது. அதை அப்படியே தூக்கி சுட்டையிலே போட்டு விட்டார்கள். அதன்படி கல்வித் துறை நடக்கவேண்டுமென்ற விதிமுறை இல்லாமல் போய் விட்டது.

என்னுடைய திருச்செந்தூர் தொகுதியில் ஆறுமுகநேரி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு எலிமென்டரி பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியர் நித்தியானந்தம் என்பவர். அவர் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்தான். அவர்மீது சில குற்றச்சாட்டுக்கள் பள்ளி நிர்வாகத்தினரால் சாட்டப்பட்டிருக்கின்றன. மாவட்ட கல்வி அதிகாரிக்கு தெரிவித்தார்கள். மாவட்ட கல்வி அதிகாரி 'டிபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ்' மூலம் விசாரணை செய்ய உத்தரவிட்டார். அவர் கொடுத்த அறிக்கையின் பேரில் அந்தத் தலைமை ஆசிரியரை

1974 டிசம்பர் 18] [திரு. க. உரொ. எட்மண்ட்]

வேலையிலிருந்து நீக்க உத்தரவிட்டார். மானேஜ்மென்டார் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். உடனே அவர் தலைமை கல்வி அதிகாரிக்கு (சி.இ.ஓ.) மனு போட்டார். டி.இ.ஓ. போட்ட ஆர்டர் தவறு, அது செல்லாது என்று அந்த ஆர்டரை ரத்து செய்து, தலைமை ஆசிரியருக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார். உடனே பள்ளி நிர்வாகத்தினர் அரசாங்கத்திற்கு அந்த உத்தரவைக் கொண்டு வந்தார்கள், அப்பீல் கொடுத்தார்கள். அதை அரசாங்கம் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறது. 1½ வருஷம் ஆகிவிட்டது; இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அந்த தலைமை ஆசிரியர் வேலையில்லாமல் பட்டினி கிடக்கிறார்.

இந்த 'எம்.இ.ஆர்.' என்ன என்று நானும் அட்டைக்கு அட்டை திருப்பித் திருப்பி படித்தேன். அதனால் எனக்கு இப்போது எம்.இ.ஆர். நல்ல 'தரவு' ஆகிவிட்டது. சி.இ.ஓ. உத்தரவு போட்ட பிறகு, மேல் அப்பீல் கிடையாது என்று அதில் சொல்லியிருக்கிறது. ஆனால் மானேஜ்மென்டார் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்திருக்கிறார்கள்; அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்படி அரசாங்கம் சட்டத்திற்கு விரோதமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தலைமை கல்வி அதிகாரியால் தள்ளுபடி செய்யப்பட்டதை பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு 1½ வருஷமாகியும் இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை.

இப்படி, இங்கே இருக்கிற அத்தனை அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள துறைகளிலும் இருக்கின்ற பல்வேறு குற்றச்சாட்டுகளை பல்வேறு ஆதாரங்களுடன் எங்களால் நிரூபிக்க முடியும். எனக்கு ஒரு மணி நேரம் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் ஒரு மணி நேரம் கொடுத்தால் எல்லாவற்றையும் சொல்ல முடியும். இப்போது கொடுக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில் இவ்வளவு குற்றச்சாட்டுகளைத்தான் சொல்ல முடிந்திருக்கிறது.

இந்த அரசினுடைய உணவுக் கொள்கையால்தான் இன்றைய தினம் நாட்டிலே பட்டினி, பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதை ஒப்புக்கொள்ளாமல் இயற்கை மீது பழி போடுகிறார்கள். மழை பெய்யவில்லை. உற்பத்தி ஆகவில்லை என்ற வாதங்களை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. நாட்டு மக்களை பட்டினியிலே வாடவிட்ட குற்றத்திற்காக. இந்த நாட்டிலே

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 18

விலைவாசியை ஏற்றிவிட்ட குற்றத்திற்காக, இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று கூறி, இது ஒரு ஊழல் நிறைந்த ஆட்சி, இது ஊழலில் மூழ்கி இருக்கிற ஆட்சி, ஊழலில் மூழ்கி நீச்சல் அடிக்கிற ஆட்சி; ஆகவே நீங்கள் ஆட்சியிலிருந்து இறங்காதவரையில் எங்களுக்கு திருப்தி இல்லை; நாட்டு மக்களுக்கும் திருப்தி இல்லை என்று கூறி ஊழலிலே மூழ்கி நீச்சல் அடித்துக் கொண்டிருக்கும் இந்த ஆட்சி கீழே இறங்க வேண்டும், இறங்க வேண்டும், இறங்க வேண்டும் என்று சொல்லி, இந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணவி சி. கந்தசாமி: தலைவரவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். எட்மண்ட் அவர்கள் பேசும்போது எங்களுடைய கட்சியைப்பற்றியும் என்னைப் பற்றியும் பேசினார்கள். அவர்கள் பேசுகிறபோது, துணை போகிற கட்சி "துணை போகிற கட்சி" என்று சொன்னார்கள். இந்தியாவிலே இன்றைக்கு தனித்து இயங்கக்கூடிய கட்சி எது? என்னுடைய அரசியல் நிலை ஒன்று இருக்கிறது. அதற்குத் தக்க ஆளும் கட்சியை ஆதரிக்கிறேன். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு சிலர் துணையாக இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலையில் அவர்களும் தனியாக நிற்க முடியாது. டில்லியிலே இருக்கிற கட்சி துணை போகாமலா இருக்கிறது? அல்லது நீங்கள் துணை போகாமலா இருக்கிறீர்கள்? ஆகவே, இந்தமாதிரி குற்றஞ்சாட்டக் கூடாது; குத்தலாகப் பேசக்கூடாது. யார் துணை போகவில்லை? சுயேட்சையாக நிற்கும் நிலை எங்கே இருக்கிறது? ஆகவே, குத்தலாகப் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய பெரியார் மணலி அவர்களை அரசியல் ரீதியாக நான் இந்த மன்றத்தில் எதுவும் சொல்லவில்லை. இந்த தீர்மானத்தை எதிர்க்கின்ற வகையில் அவர்கள் ஆளும் கட்சிக்கு துணை போகிறார்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். நான் தவறுதலாக ஒன்றும் சொல்லவில்லை.

1974 டிசம்பர் 18]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எந்த முறையும் இல்லாத அளவுக்கு இந்த முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகிய இரண்டு தீர்மானங்களும் முன்மொழியப்படுவதற்கு முன்பாகவே மிகுந்த பரப்பரப்பு காட்டப்பட்டது.

கடந்த பல நேரங்களில் இந்த அவையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் அரசின்மீது கொண்டு வரப்பட்டிருந்தாலும் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பே இவ்வளவு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டதாக கிடையாது. இந்தத் தடவை ஏற்பட்டதற்குக் காரணம் மதிப்பீட்டுக் குழுவிலே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கோப்பு, ஒரு ஃபைல், இங்குள்ள எதிர்க்கட்சிகளுடைய உறுப்பினர்களுக்கு அல்லது தலைவர்களுக்குக் காட்டப்பட வேண்டுமென்ற வகையில் அந்தப் பரபரப்பு எழுந்தது.

இதைப்போன்ற ஒரு பரபரப்பு, ஒரு அறிக்கையை உறுப்பினர்களுக்கு அல்லது தலைவர்களுக்கு காட்ட வேண்டும் என்ற ரீதியில் டில்லி நாடாளுமன்றத்தில் எழுந்தது. அங்கே அந்த அறிக்கை புதுவை மாநில லீசென்ஸ் ஊழல் என்கின்ற தலைப்புள்ள நிலையில் தயாரிக்கப்பட்ட சி.பி.ஐ. அறிக்கையாகும். அந்த அறிக்கையை அனைவரும் பார்க்க வேண்டுமென்று வாதிட்டு, அதனை அவையிலே தருவதாக மத்திய அமைச்சர்கள் அவையிலே உறுதியளித்து, பிறகு உறுதிமொழிக்கேற்ப வைக்காத காரணத்தால், 5, 6 நாட்கள் நாடாளுமன்றத்திலே பெரிய அமளி ஏற்பட்டு, மொரார்ஜி தேசாய் அவர்கள்—இங்கே நம்முடைய செழியன் அவர்கள் சொன்னதைப் போல—சத்தியாக்கிரகம் செய்வேன் என்று அங்கே சொல்லி—அவரைப் பார்த்துதான் இவர் சொன்னாரோ அல்லது இவரைப் பார்த்து அவர் சொன்னாரோ (சிரிப்பு)—அதற்குப் பிறகு பிரதமரும், சபாநாயகரும், திரு. மொரார்ஜி தேசாயும், மற்றக் கட்சித் தலைவர்களும் 5, 6 முறை கூடிப் பேசி, பத்திரிகைகளில் 7, 8 நாட்களாக அந்தச் செய்திகள் பரபரப்போடு வந்து, கூடிப் பேசிய புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளில் வந்து, அதன் பின்னால் அந்த அறிக்கையைப் பார்க்கலாம், ஆனால் அதனை வெளியிலே சொல்லக்கூடாது என்ற பிரமாணம் எடுத்துக்கொண்டு பார்க்கலாம் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது, அதற்குப் பிறகும் அதைக் குறிப்பு எடுக்கக்கூடாது என்று சுட்டிச் காட்டப்பட்டு,

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

ஒருவாரமாக பல நாட்களுக்குப் பிறகு இப்போது அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி இன்று காலையிலே அரும்பியிருக்கிறது, ஆனால், அவ்வளவு சங்கடங்கள் எதுவும் இல்லாமல் இங்கு அரை மணி நேரம் அதுபற்றிய சர்ச்சை எழுந்து, உடனடியாக அதுபற்றிய ஃபைலை பார்க்கலாம் என்று அரசின் சார்பிலே ஒப்புக்கொள்ளப்பட்டு, தலைவர் அவர்களுடைய அறையில் அந்தக் கோப்பு பார்க்கப்பட்டிருக்கிறது.

இங்கு நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் இங்கே ஃபைலைப் பார்க்க காட்டிய இதே ஆர்வம், பலமான சர்ச்சை, பிரசித்திப் பெற்ற பாண்டிச்சேரி லீசென்ஸ் ஊழல் பற்றிய சி.பி.ஐ. தயாரித்த அறிக்கையைப் பார்ப்பதற்கு, டில்லியில் அவர்கள் காட்டினார்களா . என்றால் பத்திரிகையில் அப்படிச் செய்திகள் ஒன்றும் வரவில்லை. அதை வலியுறுத்தி, அதைக் காட்டித்தான் தீரவேண்டுமென்று அங்குள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட போராட்டங்களை அங்கே நடத்தியதாகவும் பத்திரிகைகளில் செய்தி கிடையாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : எதிர்க்கட்சியைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். பூபேஷ் குப்தா அவர்கள் சி.பி.ஐ. அறிக்கை வைக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். அந்த அறிக்கையைப் பரிசீலிப்பதற்குச் சென்றபோதும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் சென்றிருக்கிறார்கள். குறிப்பு எழுதக்கூடாது என்று சொன்னவுடன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும் ப்ரொடெஸ்ட் பண்ணி வெளியில் வந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் நாடாளுமன்றத்தைத்தான் குறிப்பிட்டேன். அவர்கள் மாநிலங்கள் அவை பற்றிச் சொன்னார்கள். அங்கேயாவது கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள் அந்த அளவுக்கு வேகமாக நடந்துகொண்டதற்காகப் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974 டிசம்பர் 18]

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் ராஜ்ய சபையில் நடந்த சம்பவத்தைத்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: லோக் சபாவை நாடாளு மன்றம் என்றும், ராஜ்ய சபாவை மாநில அவை என்றும் நாங்கள் குறிக்கும் பழக்கத்தில் நானும் ராஜ்ய சபாவைத்தான் மாநில அவை என்று கூறினேன். மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நாடாளுமன்றத்தில் அவர்கள் சொல்லவில்லை என்று குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு அல்ல. திரு. மொரார்ஜி தேசாய் இப்படி ஒரு சத்தியாக்கிரகம் செய்து ஒரு அறிக்கையைப் பெறுவது முறையா என்று தி.மு.கழகத்தைக் கேட்ட நேரத்தில் 'அது முறை அல்ல', என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். அது முறை அல்ல என்றுதான் அங்குள்ள அண்ணா தி.மு.க.வும் அங்கே அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இங்கே அந்த முறை அனுஷ்டிக்கப் படலாம் என்பதற்கு அவர்கள் முன்வந்தார்கள் என்றாலும் இங்கே அப்படிப்பட்ட சங்கடங்களுக்கு எல்லாம் இடம் இல்லாமல் உடனடியாக அந்த ஃபைல் உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப் பட்டு, அது வெளிப்படையாகக் காட்டப்பட்டு, எந்தவிதமான நிபந்தனைகளும் வைக்கப்படாமல்—பார்க்கலாம், ஆனால் வெளியில் சொல்லக்கூடாது; சிதம்பர ரகசியமாக இருக்க வேண்டுமென்று நிபந்தனை போடாமல் பார்த்தாலும் குறிப்பு எடுக்கக்கூடாது என்று கூறாமல்—இந்த அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய முறையீட்டை ஏற்றுக்கொண்டது. அதற்குப் பிறகு நம்பிக்கை யில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வந்திருக்கிறது. எங்கள் மீது நம்பிக்கையில்லை என்பதை தெரிவிக்கக்கூட இரண்டு நாட்கள் அவர் களுக்கே தயக்கம் ஏற்பட்டது. முதல் நாள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அழுத்தந்திருத்தமாக இருந்து. மறுநாளும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற்கிடையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுந்து இப்படி தயங்கிக்கொண்டே வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசிய சில கட்சித் தலைவர்கள் என்ன கருத்துக்களை மிக முக்கியமாகச் சொன்னார்கள் என்றால்—ஆளுங் காங்கிரசைச் சேர்ந்த திரு. மாரிமுத்து அவர்கள், தமிழ் நாடு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களும், திரு. கோவைச் செழியன் அவர்களும், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் லத்தீப் ஆகியோரும் பேசுகின்ற

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

நேரத்தில் இந்தக் கட்சியில் இன்றைக்கு அடிமட்டத்தில் இருக்கிற கட்சிக்காரர்கள், நாடாளுமன்ற சட்டப் போவை உறுப்பினர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் அத்தனை பேரும் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள வேண்டும். தங்களைத் திருத்திக்கொண்டு இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தை—ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து சொன்னார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் திரு. மாரிமுத்து உட்பட அத்தனை பேருக்கும் இந்த கட்சி அடிமட்டத்தில் இருக்கிற தொண்டர்கள் பொறுப்பில் இருப்பவர்கள் அனைவரும் திருத்திக் கொள்ள வேண்டும் என்கிற உணர்வு அவர்களுக்கு உள்ளூர இருப்பதாக உணர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: ஆட்சியிலிருக்கிறபோது தவறு நடக்காமல் இருக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, இந்த ஆட்சி நீடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. மாரிமுத்து அவர்கள், இந்த அவையில் யாரும் தெரிவிக்காத பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கட்சி கட்டுப்பாடு நிறைந்தது; கட்டுக்கோப்பாக இருக்கிற கட்சி, இதற்கு அடிமட்டம்வரை கிளைக் கழகங்கள் இருக்கின்றன—முறையாக தேர்தல்கள் நடை பெற்றிருக்கின்றன; அமைப்புகள் ஒழுங்காக இருக்கின்றன என்றெல்லாம் திரு. மாரிமுத்து அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். நாளை, கழகப் பொதுச் செயலாளரோ மேடையில் இதுவரை எடுத்துச் சொல்லாத அளவுக்கு நேற்றைய நிலைமை இந்தக் கட்சியின் அமைப்பு முறைகளை சிலாகித்து திரு. மாரிமுத்து அவர்கள் பேசின காரணத்தினால்தான், என்ன தான் அவர் இன்றைக்கு இந்த ஆட்சி நீடிக்கக் கூடாது என்று எடுத்துச் சொன்னாலும்கூட—உள்ளூர—தொலையட்டும்—இவர் களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடு இந்தப் பாராட்டுரைகளைச் சொன்னார்கள் என்றே நான் கருதுகிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் இங்கே சொன்ன கருத்துக்களுக்கு நான் எதுத்தாழ உடன்படுகிறேன். நாளை இந்தக் கழகப் பொதுச் செயலாளர் நாவலரோ—இந்தக் கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களோ இன்றைக்கு பெரியவர் மணலி எடுத்துச் சொன்ன

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

வேண்டுகோள்களைப் போன்று நாள் தவறாமல் இந்தக் கட்சியிலே இருக்கிற தொண்டர்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறேன். ஆனால் ஒரு இயக்கம் என்றால் அந்த இயக்கத்திலே அத்தனைபேரும் நூற்றுக்கு நூறு சரியாக இருப்பார்கள், எந்தக் குறைபாடும் இருக்காது என்று யாரும் நம்பிடவும் கூடாது. அப்படி எதிர் பார்க்கவும் இயலாது. அந்தக் குறைபாடுகளை எல்லாம் களைகிற, திருத்துகிற தலைமை இருந்திடவேண்டும். ஆகவேதான் தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களுடைய கருத்துக்களை நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்களும் அதே ரீதியில்தான் அறிவுரைகளைச் சொன்னார். நண்பர் செழியன் பேசுகிற நேரத்தில் கூட ஏதோ இந்த அரசின் மீது அவருக்குப் பொல்லாத ஆசை இருப்பது போலவும், அதை யாரோ கெடுக்கிறார்கள் என்பதைப்போலவும் சொன்னார்கள். நான் இதை எல்லாம் எடுத்துச் சொல்லக் காரணம் "நீங்கள் என்ன சொன்னாலும் திருந்திட மாட்டோம், நாங்கள் பிடித்தது தான் பிடி, நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்றெல்லாம் பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிற அரசு இது அல்ல என்பதை இந்த அரசின் கடந்த கால வரலாற்றை புரட்டிப் பார்த்தால் நன்கு தெரியும்.

ஆளுங்கட்சி சார்பில் சொல்லப்படுகிற கருத்துக்களானாலும், தோழமைக் கட்சிகளின் சார்பில் சொல்லப்பட்ட கருத்துக் களானாலும், எதிர்க்கட்சிகளின் சார்பில் சொல்லப்பட்டானாலும்— அவைகளில் இந்த அரசு ஏற்றுக் கொள்ளமுடிந்த கருத்துக்களை— இயன்ற அளவிற்கு ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்து கின்ற பணியை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

அருமை நண்பர் ஆலடி அருணா அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள்—இவர்கள் "அண்ணாவின் தம்பிகளா? அலிபாபா கூட்டமா" என்று கேட்டார். அவருடைய பேச்சில் நல்ல ஆற்றல் இருக்கும். விறுவிறுப்பு இருக்கும். இன்றைக்கு வேறிடத்தில் அவர் இருந்தாலும் அதை நான் மறந்துவிடுபவன் அல்ல. அவர் இந்த மன்றத்தில் என் பின்னால் இருந்து மாநில சுயாட்சி பற்றிப் பேசிய பேச்சு என் காதில் இன்றைக்கும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. நன்றாக சிந்தித்துப் பேசக் கூடிய அருணாவே நாட்டையாள்வது "அண்ணாவின் தம்பிகளா, அலிபாபா கூட்டமா" என்று—பேசிவிட்டாரே என்று தான் நான்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

வருத்தப்பட்டேன். அலிபாபா கூட்டமா என்ருல், அவர் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிற தலைவரே கூட நடித்து வெற்றி கரமாக ஓடிய படம். (சிரிப்பு) அதிலே அலிபாபா என்ற கதாநாயகன் வேடத்தையே அவருடைய தலைவர்தான் போட்டார். (சிரிப்பு) அவரது தலைவர் கெட்டவன் பாத்திரம் எதையும் ஏற்று நடிக்க மாட்டார். உங்களுக்கே தெரியும். கெட்டவனுகவே நடிக்க மாட்டார். நல்லவனுகவேத்தான் நடிப்பார் (ஆரவாரம்)

திரு. ஆலடி அருணு: நான் அலிபாபா கூட்டம் என்று சொன்னது அலிபாபா கதையில் வருகிற கூட்டம் என்ற பொருளில் ஆகும்—இந்தி ஒழிக என்ருல் இந்தி ஆதிக்கம் ஒழிக என்றுதான் பொருள். அதைப்போல அலிபாபா கதையில் உள்ள திருட்டுக் கூட்டம்—கொள்ளைக் கூட்டம் என்றுதான் பொருள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தி ஒழிக என்ருல் இந்தி ஆதிக்கம் ஒழிக என்று பொருள் என்ருல் அலிபாபா கூட்டம் என்ருல் அலிபாபா ஆதிக்கம் உள்ள கூட்டம் என்று அர்த்தம். அலிபாபா ஆதிக்கம் உள்ள கூட்டம் என்ருல் அங்கேயிருந்த 40 திருடர்களுக்கும் தலைமை வகித்ததாகப் பொருள். ஒரு வேளை தாம் தவறிவிடக்கூடாது என்பதற்காக நேற்று அரேபியன் நைட்ஸ் கதைகளை வாங்கி இரவெல்லாம் நான் படித்துவிட்டுத்தான் வந்தேன். கதையில் 40 திருடர்களைப் பிடித்தான் அலிபாபா என்றுதான் வருகிறது. (கைத்தட்டல்) ஆகவே அலிபாபா ஒரு வீரன். திருடர்களை, கொள்ளைக்காரர்களைப் பிடித்தவன். திருடர்கள் அலிபாபாவைக் கொல்வதற்காக வந்தபோது அலிபாபாகூட தன் காதலியோடு சேர்ந்துகொண்டு பீப்பாய் களிலேயே இருந்த திருடர்களை எல்லாம் பொசுக்கித் தீர்த்து விட்டான் என்றுதான் கதை முடிகிறது. ஆகவே அலிபாபா யார்? திருடர்கள் யார்? (கைத்தட்டல்) என்பதை நம்முடைய எதிர் காலம் உணர்த்தும்.

திரு. கோவை செழியன்: நீங்கள் சொல்கிற வாதத்தைப் பார்த்தால் அந்தத் தலைவன் நல்லவன், மற்றவர்கள் மோசம் என்று சொல்கிறபோது, நீங்கள் நல்லவர் என்பதையும், உங்களைப் பின்பற்றுகிறவர்கள் மோசம் என்பதையும் நீங்களே ஒத்துக் கொள்கிறீர்களா ?

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *அந்த அலிபாபாவின் எதிரிகள் திருடர்கள். (கைத்தட்டல்) அதுதான் கதை, படம் எடுக்கிற தயாரிப்பாளர் செழியனுக்கு கூடவா கதை தெரியவில்லை? (பலத்த கைத்தட்டல்) அலிபாபா என்கிறவன் நல்லவன், அவனுடைய எதிரிகள் திருடர்கள். இதுதான் கதை. (சிரிப்பு)*

பொதுவாக இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மான மானாலும், கண்டனத் தீர்மானமானாலும் இங்கு நடைபெற்ற நான்கைந்து நாட்கள் விவாதத்தில் மிக உயிர்ப்புள்ள பிரச்சினையாக இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற உணவுப் பிரச்சினை குறித்து எல்லாக் கட்சிகளின் தலைவர்களும்

(பிற்பகல் 1-00)

உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதிலே யாரும் அரசைக் குறை கூறவேண்டு மென்ற எண்ணத்தோடு, அவரவர்கள் கட்சியினுடைய அடிப் படையிலே பேசி இருந்தாலும், அனைத்துக் கருத்துக்களிலும் இழை ஓடிக் கொண்டிருக்கிற இன்றைய தமிழகத்தின் உணவு நிலவரம் குறித்தோ அல்லது நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பயங்கரமான மழையின்மை நிலவரம் குறித்தோ நாம் மாறுபாடான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. பேசியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போலவும், வானிலை அறிவிப்பின்படியும் நம்முடைய தமிழகத்தில் 100 ஆண்டுக் காலம் இல்லாத பயங்கரமான வறட்சி இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். 65 சதவிகிதம் மழை இந்த ஆண்டு குறைந்துவிட்டது. 35 சதவிகிதம் மழை தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த மழை பொய்த்து விட்ட சூழ்நிலையை, அதனால் ஏற்பட்டிருக்கிற விளைவுகளை நாம் சந்திக்க, சமாளிக்க வேண்டியவர்களாக, இருக்கின்றோம்.

எதிர்க்கட்சித் தரப்பிலே பேசிய சில பேர் இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டது, சென்ற ஆண்டு இவ்வளவு மோசம் இல்லை. இருந்தாலும் சென்ற சம்பா அறுவடையிலே ஏன் விலை ஏறியது? இவைகளுக்கு நீங்கள் தருகின்ற பதில் என்ன என்றெல்லாம் கேட்டார்கள். கேட்டுவிட்டு அவர்களே சொன்னார்கள், தஞ்சையில் தடையை எடுத்ததுதான் இதற்கெல்லாம் காரணம்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

நீங்கள் தஞ்சை மாவட்டத்தில் தடையை எடுத்தது பெரிய தவறு, அதிலே ஏதோ ஊழல் நடந்துவிட்டது, அந்த ஊழலை நடத்துவதற்காகவே நீங்கள் தடையை எடுத்தீர்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. தடையை எடுக்க வேண்டுமென்று நிலக்கிழார்கள் மாத்திரமல்ல, நம்முடைய பெரியவர் மணலி போன்றவர்கள் கூட அறிவுரை கூறினர்கள். அவர் நிலக்கிழார் அல்ல. அல்லது, அவரது வரலாற்றைப் புரிந்து கொண்டவர்களுக்கு அவர் நிலக்கிழார்கள் பக்கம் நிற்கக்கூடியவர் என்கின்ற எண்ணமும் நிச்சயமாக ஏற்படாது. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தஞ்சையில் தடையை எடுக்க வேண்டுமென்ற யோசனையை இந்த அரசுக்குச் சொன்னர்கள். தஞ்சையிலே உள்ள நிலக்கிழார்கள், வியாபாரிகள் மட்டுமல்ல, மற்ற மாவட்டத்திலேயுள்ள வியாபாரிகள், மற்ற மாவட்டத்திலே உள்ள வாங்கிப் புசிக்கிற மக்கள் அத்தனை பேரும் இந்தக் கோரிக்கையை எழுப்பினர்கள். என்ன காரணம்? மற்ற மாவட்டங்களில், தஞ்சை மாவட்டத்தை விட பல மடங்கு அரிசி விலை ஏறிவிட்டது. ஆகவே, இத்தத் தடையை எடுத்து, மற்ற இடங்களுக்கு உணவு தானியங்கள் புழக்கத்திற்கு வருமானால், விலை ஒரு சமநிலைக்கு வரும். ஆகவே, இந்தத் தடையை எடுத்துவிடுங்கள் என்று அரசுக்கு யோசனை கூறப்பட்டது. இப்படித் தடையை போடுவதோ, எடுப்பதோ என்பது சம்பா அறுவடையின்போது மாத்திரம் நடந்துவிட்ட சம்பவம் அல்ல.

1970 ஆம் ஆண்டு தஞ்சையில் போக்குவரத்துக் கட்டுப்பாடு 8—1—70 இல் விதிக்கப்பட்டது. பிறகு எட்டு மாதங்கள் கழித்து 15—9—70-ல் அந்தக் கட்டுப்பாடு எடுக்கப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு அங்கிருந்து உணவு தானியங்கள் செல்ல வழிவகை செய்யப்பட்டது என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போலவே 1—1—1971 இல் கட்டுப்பாடு போடப்பட்டு, பிறகு 9 மாதங்களுக்குப் பிறகு 5—10—1971 இல் அந்தத் தடை எடுக்கப்பட்டது. பிறகு 5—11—1971 இல் கட்டுப்பாடு போடப்பட்டு, 10 மாதத்திற்குப் பிறகு 14—9—1972 இல் மீண்டும் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. பிறகு 18—1—1973 இல் கட்டுப்பாடு போடப்பட்டு, 9 மாதத்திற்குப் பிறகு 6—10—1973 இல் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. அதைப் போலத்தான் 74 ஆம் ஆண்டு 15—12—1973 இல் தடை போடப்பட்டு 10—6—1974 இல் தடை எடுக்கப்பட்டது.

1974 டிசம்பர் 18]

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்களுடைய பிள்ளி விவரங்களிலேயிருந்து, குறுவை அறுவடை செய்த பிறகுதான் அப்பொழுதெல்லாம் தடை நீக்கப்பட்டது தெரிய வருகிறது. ஆனால், இந்த ஆண்டு, ஜூன் மாதத்திலேயே தடையை நீக்கியதற்குக் காரணம் என்ன? ஸ்பெஷல் ரீசன்ஸ் என்ன? குறுவை நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே அவ்வளவு சாப்பிட மாட்டார்கள், ஆகவே, அங்கேயே தேங்கக்கூடாது என்று தடை நீக்கப்படும். ஒவ்வொரு வருடமும் 9 ஆவது மாதம், 10 ஆவது மாதத்திலே தடையை எடுப்பவர்கள், இந்த ஆண்டு 6 ஆவது மாதத்திலே ஏன் தடை நீக்கப்பட்டது என்பதற்கு விளக்கம் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலிலேயே விளக்கத்தைக் கூறிவிட்டுத்தான் விவரத்தைத் தந்தேன். மற்ற மாவட்டங்களில் விலை ஏறிவிட்டது. அதைச் சமநிலைப்படுத்துவதற்காக, இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. தஞ்சை மாவட்ட அரிசி மற்ற மாவட்டங்களுக்கு செல்லுமானால் வேகமாக ஏறிவிட்ட விலை குறையக் கூடும் என்பதற்காகத்தான் அந்தத் தடை எடுக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 3, 4 வருஷங்களாகத் தடை எடுக்கப்பட்டதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அப்பொழுது தடை எடுக்கப்பட்ட நேரத்திலே விலை எந்த அளவு கூடியது? கூடியதா இல்லையா? இந்த அளவு, இந்த விலை கூடியதே இதற்கு என்ன காரணம்?

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, பெரியவர் மணலி அவர்கள், விவசாயிகளுக்கு ஓரளவு விலை கிடைக்கவில்லை, அவர்களுக்கு விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக நானே முதலமைச்சர் அவர்களிடம் தனியாக நேரில் சொன்னேன். அதன் பேரில்தான் அந்த உத்தரவு போடப்பட்டது என்று மூன்று சொன்னார். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் வேறு ஒரு கருத்தைச் சொன்னார். இதில் எது உண்மை என்று எங்களுக்குத் தெரிய வேண்டும்.

[1974 டிசம்பர் 18

திரு. எஸ். வடிவேல்: தஞ்சை மாவட்டத்திலே, மணலி போன்றவர்கள் சொன்னதன் காரணமாக, தடை நீக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், உண்மையிலே விவசாயிகளுக்கோ, விவசாயக் குத்தகைதாரர்களுக்கோ, சிறுநிலக்காரர்களுக்கோ, இந்த நெல் விலையிலே உயர்வு இல்லை. அறுவடை முடிந்து வருகிறார்கள். கையிலே நெல் போனபிறகு, இந்த விவசாயிகளை, இந்த ஏழைகளை, இது பாதிக்குமா, பாதிக்காதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவசாயிகள் கூறினார்கள். அதைப் போலவே மற்ற மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள், வாங்கிப் புசிக்கின்ற மக்கள் கூறினார்கள். பத்திரிகையிலே எழுதினார்கள், மற்ற மாவட்டங்களில் விலை ஏறிவிட்டது என்கின்ற புள்ளிவிவரங்கள் தினந்தோறும் வந்தன. அதை சமநிலைப்படுத்துவதற்கு அடிப்படையாக தடையை எடுக்கிறோம் என்று சொல்லி, நிருபர்களிடத்திலும் எடுத்துச் சொல்லி, அந்த அறிக்கை வெளியிடப்பட்டு, தஞ்சாவூரிலிருந்த தடை நீக்கப்பட்டது. ஆனால், அரசினுடைய நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல் சிலபேர் இடையிலே தவறு செய்ய முற்பட்டார்கள்.

நாம் தடையை எடுத்தவுடன் அரிசி விலை ஏறியதா, குறைந்ததா என்பதைப் பார்க்கவேண்டும். அதை கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். விலை குறைந்தது என்பதைப்பற்றி 13—6—1974 தினமணி பத்திரிகையிலும், 16—4—1974 இந்து பத்திரிகையிலும் செய்திகளைப் போட்டிருக்கிறார்கள். 'தமிழ் நாட்டில் அரிசி விலை குறைகிறது' என்று தலைப்பிட்டு தினமணி பத்திரிகையில் வந்துள்ள செய்தி: திருச்சி, ஜூன் 12—கட்டாய லெவி முறையும், தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி நடமாட்டத் தடுக்குள்ள கட்டுப்பாடு நீக்கம் ரத்து செய்யப்பட்டதை யடுத்து தமிழ் நாட்டில் அரிசி விலை குறைய ஆரம்பித்துள்ளது. திருச்சியில் அரிசி, நெல் மூட்டைகள் விலை ரூ. 8 முதல் ரூ. 10 வரை குறைந்துள்ளதாக திருச்சி வர்த்தக சபைத் தலைவர் கே. மாயாண்டி தெரிவித்துள்ளார். சர்க்கார் இதை முன்பே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். அவர் கொடுத்துள்ள அறிக்கையில் அரிசி சில்லறை விலையும் கிலோவுக்கு 15 பைசா குறைந்துள்ளதாக கூறியிருக்கிறார்.

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

அது மாத்திரமல்ல, சென்னையிலும் விலை குறைந்திருக்கிறது என்கின்ற விவரங்கள் தினமணியிலே வெளியாகியிருக்கின்றன. கோவையிலும் விலை குறைந்திருக்கின்றது என்கின்ற செய்தி வந்திருக்கிறது. இதுபற்றி, தினமணியில் தலையங்கம் எழுதப் பட்டிருந்தது. 'அண்மையில் அரிசி விலை தமிழ் நாடெங்கும் கணிசமாக உயர்ந்துள்ளது. அரிசி, நெல் மீதான லெவியும் போக்குவரத்துக் கட்டுப்பாடுதான் இதற்குக் காரணம் என்று வர்த்தகத் துறையினர் கூறினர். இதற்கு மதிப்புக் கொடுத்து, தமிழ்நாடு முழுதும் அரிசி, நெல் லெவியை அரசு ரத்து செய்துள்ளது. தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வெளியே அரிசி, நெல் கொண்டு போவதற்கு இருந்த கட்டுப்பாடுகளையும் அரசு விலக்கி விட்டது. எல்லைப்புறங்களில் மட்டுமே கள்ளக் கடத்தலைத் தவிர்க்கக் கட்டுப்பாடுகள் இருந்துவரும். மற்றப்படி தாராளப் போக்குவரத்து இருக்குமாகையால், மாநிலமெங்கும் விலை வீக்கம் ஓரளவு வடிந்து ஏறக்குறைய ஒரே சீரான விலை அமுலாவது சாத்தியமாகலாம்' என்று தினமணி போன்ற பத்திரிகைகள் எல்லாம் தலையங்கம் எழுதினார்கள். ஆனால், நாம் நினைத்ததற்கு மாறுக, கொள்ளை இலாபம் அடிக்கவேண்டுமென்று எண்ணிய வியாபாரிகள், இந்த நேரத்திலே உணவு தானியங்கள் அதிக விலைக்குப் போனால், பெருத்த இலாபம் கிடைக்கும் என்ற பேராசைக்கு ஆளான அந்த வியாபாரிகளுடைய நோக்கத்திற்குப் பலியான விவசாயப் பெருமக்கள் அரசின் இந்த நல்ல நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்ததால், அங்கங்கு கொண்டு போகப்பட்ட உணவு தானியங்கள் பதுக்கப்பட்டன. சில இடங்களில், கள்ளக் கடத்தலுக்கு வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. உடனடியாக, இந்த அபாயத்தை உணர்ந்த அரசு, 13-ந் தேதியே மீண்டும் சில நிபந்தனைகளை விதித்து, கலெக்டர் அவர்களுடைய அனுமதியில்லாமல் வெளி மாவட்டங்களுக்கு அரிசியோ, நெல்லோ எடுத்துச் செல்லக் கூடாது என்ற நிபந்தனையோடு தடை விதித்தது. அத்துடன், மற்ற மாவட்டங்களிலுள்ள அந்தந்த கலெக்டர்களுடைய மேற்பார்வையிலேதான் அங்கங்கு இங்கிருந்து எடுத்துச் செல்லப்படுகிற நெல்லோ, அரிசியோ விநியோகிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளும் போடப்பட்டு, ஏற்பட இருந்த அபாயம் தடுக்கப்பட்டது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

ஆனால், இங்கே பேசுகின்ற நேரத்திலே 9 இலட்சம் டன் அந்த மூன்று நாளிலே வெளியிலே போய்விட்டது என்று செழியன் அவர்கள் சொன்னார்கள். ஒன்பது இலட்சம் டன் என்பது ஏதோ பேசுவதற்கு அழகாக இருக்கலாம், கேட்பதற்குப் பீதியை உருவாக்கலாம். இந்த 9 இலட்சம் டன் போய் விட்டதனாலேதான் இப்பொழுது இவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டது என்று பொதுமக்கள் நம்பலாம். ஆனால், கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒன்பது இலட்சம் டன்னை எடுத்துச் செல்ல எத்தனை லாரிகள் வேண்டுமென்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு லாரியில் 5 டன் நெல்லோ அரிசியோதான் ஏற்றமுடியும் என்று கணக்கிடுகிறார்கள். நான், செழியனுக்காக, வேண்டுமானால் 9 டன் என்று கணக்கு வைத்துக் கொள்கிறேன். லாரிக்கு 9 டன் ஏற்றுவதாக இருந்தால் கூட, 1 இலட்சம் லாரி தேவைப் பட்டிருக்கும். தஞ்சை மாவட்டத்திலே ஒரு லட்சம் லாரிகளைக் கொண்டுபோய் நிறுத்துவதாக இருந்தால் ஒன்றன்மீது ஒன்றாக ஐந்து, ஆறு அடுக்குகளாக நிறுத்தி வைத்தால்தான் தஞ்சை மாவட்டம் முழுவதும் ஒரு லட்சம் லாரிகளை நிறுத்த முடியும். தமிழ்நாட்டிலே இருக்கிற மொத்த லாரிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால் 20 ஆயிரத்திற்கும் குறைவுதான். தமிழ்நாட்டிலே உள்ள லாரிகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்திற்கும் குறைவு. 9 இலட்சம் டன் ஏற்றிச் செல்வது என்றால் 1 இலட்சம் லாரிகளாவது வேண்டும் இது நம்பத்தகுந்ததா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பழையகாலத்தில் கோவில்களில் பூசாரிகள் பாடுவார்கள், 'பல்லுக்குப் பல் இருகாதம், பல்லிடுக்கு மூக்காதம்' என்று. பீமசேனனைப்பற்றி பாடுவார்கள். பக்கத்திலே இருக்கிற சிஷ்யன் ஆமாம், ஆமாம் என்று பம்பை அடித்துக் கொண்டிருப்பான். ஆனால் கேட்க வேண்டும். காதம் என்றால் பத்து மைல், பல்லுக்குப் பல் இருகாதம் என்றால் இருபது மைல், பல்லிடுக்கு மூக்காதம் என்றால் மொத்தம் 50 மைல், இப்படியே 32 பற்கள் ஒருவனுக்கு இருந்தால் அவன் வாய் எத்தனை ஆயிரம் மைல்கள் நீளமிருக்கும். கிட்டத்தட்ட பத்தாயிரம் மைல் இருக்கும். வாய் மாத்திரம் 10 ஆயிரம் மைல் நீளமுள்ள மனிதனுக்கு தலை எத்தனை மைல் நீளமிருக்கும்? ஐம்பதாயிரம் மைல் இருக்கும். அவன் உடம்பு எத்தனை மைல் சுற்றளவு கொண்டதாக இருக்கும்? இருபத்துமூன்று ஆயிரம் மைல் சுற்றளவுள்ள உலகத்திலே அந்த மனிதன் எங்கே நின்றுகொண்டிருந்தான் என்று அவன் கேட்காத

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

காரணத்தினால்தான், இப்படிப்பட்ட மூடநம்பிக்கையை பரப்புகின்ற பூசாரிகள் உற்பத்தியாகியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மேடையிலே பேசியிருக்கிறோம். (கைதட்டல்) புராணங்களைக் கண்டிக்கிற நேரத்தில் செழியன் உட்பட, பேசியிருக்கிறோம். ஆகவே இன்றைக்கு 9 இலட்சம் டன் வெளியே போய்விட்டது என்று பேசுவதும், அதற்கு எவ்வளவு லாரிகள் ஆகும் என்று கணக்கிடாமல் கூடப் பேசுவது அவ்வளவு நல்லதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தமிழ்நாட்டு அரிசி துபாய் என்ற இடத்திற்குப் போய்விட்டது, அங்கே தமிழ்நாடு அரிசி என்று போர்டு போட்டு விற்கிறார்கள் என்று சொன்னார்கள். அரங்கண்ணல் கூட என்னிடம் சொன்னார்கள், லால் எஞ்சல்லிலே போய் பார்த்தால் மெட்ராஸ் ஊறுகாய் என்று அங்கே போர்டு போட்டிருக்கிறார்கள் என்றார். மெட்ராஸ் ஊறுகாய் என்று போர்டு போட்ட காரணத்தாலேயே சென்னையில் இருந்து யாரோ கடத்திக் கொண்டு போய் விற்கிறார்கள் என்று அர்த்தமல்ல. மெட்ராஸ் அல்லது தமிழ்நாடு என்று போட்டு மக்களைக் கவர அப்படிப்பட்ட விளம்பரங்களைப்போட்டிருக்கலாம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நம்முடைய மாநில காவல் துறையினரும் கேரள அரசு காவல் துறையினரும் இப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் பற்றி சென்ற ஆண்டிலே கூடிப் பேசி முடிவு எடுத்தார்கள். அரிசி, மாவு போன்றவைகளை படகுகளிலே, கள்ளக் கடத்தல் தோணிகளிலே கடத்திச் செல்ல முடியாது. காரணம் கடலினுடைய அலைகள், அதிலே ஏற்படுகிற உப்பு காரணமாக இந்த உணவுப் பொருட்கள் கெட்டுவிடும் என்பதால் இந்தச் செய்திகள் தவறுனவை என்றும் இருந்தாலும் கண்காணிக்கவேண்டும் என்று முடிவு எடுத்தார்கள். நான் கேரள மாநில காவல்துறையினரோடு என்று சொன்னதற்குக் காரணம், திரு. கே. டி. கே. அவர்கள் அப்படிச் சொன்னால்தான் நம்புவார்—அதற்காகத்தான் சொல்கிறேன்—கேரள மாநில காவல் துறையினரோடு நம்முடைய காவல் துறை அதிகாரிகளும் கூடிப் பேசி இந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது முதலமைச்சர் அவர்களுடைய வாதம் தமிழ்நாட்டிலிருந்து அரிசி வேறு மாநிலங்களுக்குப் போகவில்லை என்பதுதானே? போகவில்லை என்று சொல்கிறார்களா? அப்படிப் பேசுவது பேச்சுக்கு நன்றாக இருக்கும். தமிழ்நாட்டு அரிசி என்று சொல்லி அங்கே இருக்கின்ற

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 18

ஜனங்களை ஏமாற்ற முடியாது. தமிழ்நாட்டு மக்களை விட குஜராத்காரர்களும், துபாய் மக்களும்தான் அதிகமாக அங்கே இருக்கிறார்கள். வேண்டுமானால் கேரள போலீஸைக் கேளுங்கள். போகக்கூடிய லாரிகள் நேராக கோடவுனுக்குப் போகாமல் வேறு இடங்களுக்குச் சென்றிருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய கள்ளக் கடத்தல்காரர்களுக்கும் இங்கே இருக்கக்கூடிய கள்ளக்கடத்தல் காரர்களுக்கும் தொடர்பு இருக்கலாம். நான் சொல்லியது தவறு என்று சொல்கிறார்களா? அரிசி வேறு மாநிலத்திற்குப் போகவே யில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் தெளிவாகக் கூறினேன். இரண்டு மாநிலக் காவல் துறை அதிகாரிகளும் கூடிப் பேசியிருக்கிறார்கள். இருந்தாலும் கவனிக்கலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இல்லவே இல்லை என்று நான் தட்டிக்கழிக்கவில்லை, தட்டிக்கழிக்கிறேன் என்ற கற்பனையை அவர்கள் கொண்டிருக்க வேண்டாம். திரு. கே. டி. கே. அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், வாதத்திற்காகச் சொல்கிறேன். அப்படியே போயிருந்தாலும் துபாய் என்ற இடத்திற்கே போயிருந்தாலும் இதற்குப் பொறுப்பு மாநில அரசா அல்லது மத்திய அரசா என்பதைக் கவனிக்கவேண்டும். மத்திய அரசுதான் அதற்குப் பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். துபாய்க்கு அரிசி போய்விட்டது என்று பாராளுமன்றத்திலே பிரச்னையை எழுப்பி மத்திய சர்க்கார் கவனிக்கவேண்டும். மாநில அரசுக்குப் பொறுப்பு இல்லையா என்றால் பொறுப்பு இருக்கிறது. ஆனால் எதற்கெடுத்தாலும் மாநில சர்க்கார்தான் கவனிக்கவேண்டு மென்று சொல்வதை நம்முடைய அனுபவமிக்க திரு. தங்கமணி போன்றவர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது.

யாசின் எங்கே போய்விட்டார் என்று திரு. தங்கமணி கேட்டார். ஏதோ தமிழ் நாடு சர்க்கார் அவரை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்ற உணர்வு தோன்றுகிற அளவில் அல்லது அவரைப் பிடிக்காமல் வைத்திருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படக்கூடிய அளவிற்கு அவரைப் போன்றவர்கள் பேசுவது வியப்பாக இருக்கிறது. யாசினை பிடிக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் அனுப்பிய முதல் பட்டியலிலே சொல்லவில்லை. அதிலே யாசினுடைய பெயரும் ராமானுடைய பெயரும் இல்லை. இன்ன இன்ன கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடிக்கவேண்டுமென்று மத்திய

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசு அனுப்பிய முதல் பட்டியலில் யாசின் பெயரும் இல்லை, ரகுமான் பெயரும் இல்லை. இரண்டாவது பட்டியல் வருவதற்கு முன்பு அவர்கள் போய்விட்டார்கள். அதற்கு யார் காரணம்? முதல் பட்டியலிலே இன்றைக்கு இவ்வளவு பிரசித்தி பெற்றவர்களாக இருக்கிற யாசினும் ரகுமானும் இணைக்கப் படாததற்குக் காரணம் என்ன என்று ஆராயவேண்டுமே யல்லாமல் ஏதோ யாசின் பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்ஸிலே ஏறி வெளிநாட்டிற்குப் போய்விட்டார் என்பது போல மாநில சர்க்கார்மீது குற்றஞ்சாட்டுவது சரியல்ல. அவர் எந்த விமானத்திலே போனார்? யார் அவருக்கு பாஸ்போர்ட் கொடுத்தார்கள்? பாஸ் போர்ட் கொடுக்கிற அதிகாரம் மாநில சர்க்காருக்கு இருக்கிறதா? மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. யார் யாசினுக்குத் தூண்போனார்கள் என்பதை எல்லாம் கண்டு பிடிக்கவேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறதே தவிர, மாநில சர்க்காருக்கு இல்லை. என் முதல் பட்டியலிலே சேர்க்கவில்லை என்ற கேள்விக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மாநில சர்க்காருக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரிசியைத் துபாய்க்கு அனுப்பியதற்குப் பொறுப்பு மத்திய சர்க்கார்தான், மாநில சர்க்கார் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திற்கு துபாய் என்ற இடத்திற்குக் கொண்டு போவதுபற்றி பொறுப்பு இருக்கிறது. ஆனால் அரிசியை கேரள மாநிலத்து எல்லை வரை கொண்டுபோய் கொடுத்ததைக் கவனிக்க வேண்டிய, கண்காணிக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசினுடையதுதானே, எல்லை வரை கொண்டு போனதற்கு முழுக்க முழுக்க மாநில சர்க்கார்தான் பொறுப்பு. எல்லைவரை கடத்திக் கொண்டுபோய் இருக்கிறார்கள் என்றால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு.

திரு. கே. டி. கே. தங்கமணி: யாசின்பற்றிக் கேட்டார்கள், பல கள்ளக் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்ட சமயத்தில் அவர் தமிழ்நாட்டிலே இருக்கிறார். அவர் கள்ளக்கடத்தல்காரர் என்று தமிழ்நாடு அரசுக்குத் தெரியாதா? தெரியாது என்று சொல்வது என்பதுதான்.

[1974 டிசம்பர் 18

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: யாசின் மாத்திரமல்ல, இன்னும் சில கறுப்புப்பணக்காரர்கள் தமிழ்நாட்டில் இருப்பதும் தமிழக அரசுக்குத் தெரியும். ஆனால் அவர்களைப் பிடிக்கக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இல்லையே.

திரு. கே. டி. கே. தங்கமணி: கள்ளக் கடத்தல்காரர்களை நீங்களாகவே பிடித்தால் அந்த நல்ல பெயரும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிடித்திருக்கலாம்' அந்த அதிகாரங்கள் நமக்கும் வேண்டுமென்றுதான் நாம் இன்றைக்கு மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் என்ன என்ன பெயர்களை பட்டியலில் அனுப்பி வைக்கிறார்களோ அவர்களைத்தான் பிடிக்க வேண்டுமென்று இருக்கிறது, நாமாக கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிக்கலாம் என்று சொன்னால் திரு. கே. டி. கே. அவர்கள் அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் நிறைவேற்றித் தர ஆளுங்கட்சியில் இருக்கிற அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதனுடைய விளைவாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் போதும் அவர்கள் எங்களோடு நிற்க வேண்டும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றித் தந்து அமல்படுத்துகிறபோதும் அவர்கள் எங்களோடு இருக்கத் தயார் என்றால் நாங்கள் அதை நிறைவேற்றித் தருவதில் தயக்கம் இல்லை. அவர்கள் அனுப்பிய முதல் பட்டியலில் சொல்லப்பட்ட பெயர்களிலே யாருடைய பெயரும் விடப்பட்டது கிடையாது. குறிப்பிட்ட யாசின் கூட வெளிநாட்டில் இருக்கிறார், இங்கு இல்லை என்று தெரிந்ததற்குப் பிறகு அவருடைய சொத்துக்களை யெல்லாம் காலக்கெடு கொடுத்து, இவ்வளவு நாட்களுக்குள் வராவிட்டால் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்று உயர் நீதிமன்றத்தின் சார்பாக இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லுகின்ற வார்த்தைகளை விட்டுவிட்டுப் பேசினால் என்ன அர்த்தம்?

1974 டிசம்பர் 18]

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆரம்பிக்கிறபொழுதே சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு என்று சொல்லி பிறகு தான் நீதிமன்றத்திற்கு வந்தார்களேயொழிய இந்தச் சர்க்கார், கள்ளக் கடத்தல்காரர்கள் என்று தெரிந்தவுடனேயே, உடனடியாக பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்தது மாதிரியாகச் சொல்கிறார்கள். அதிலே வேறு சில தவறுகள் நடந்திருக்கின்றன. கூலி மஸ்தான் கார் சேலத்திலே பறிமுதல் செய்யப்பட்டு யார் அதை உபயோகப்படுத்தினார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அவர்களைப் போல் சட்டமெல்லாம் படிக்கவில்லை. திரு. தங்கமணி அவர்கள் சட்டத்திலே மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள். வெளி நாட்டிற்குச் சென்று சட்டம் படித்தவர்கள். சர்க்கார் உத்தரவு போட்டுத்தான், நீதிமன்றம் அங்கீகரித்து சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அங்கீகாரம் செய்திருக்கிறது.

கள்ளக் கடத்தல்காரர்களை மட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று அல்ல, 1973 ஆம் ஆண்டிலிருந்து, மத்திய சர்க்காருடைய உத்தரவு கள்ளக் கடத்தல் மன்னர்களைப் பிடியுங்கள் என்று வருவதற்கு முன்பிருந்தே, தமிழகத்திலே உள்ள அரிசிக் கடத்தல் அரசர்களையெல்லாம் பிடிக்கிற அந்தப் பொறுப்பை நம்முடைய மாநில அரசு ஏற்று, 1973 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மிசா உத்தரவைப் பயன்படுத்தி 48 பேர்களை நாம் பிடித்திருக்கிறோம், இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி உணவு தானியம் பதுக்கல்காரர்கள், கடத்தல் காரர்கள், உணவு தானியங்களிலே இப்படிப்பட்ட கோர விளையாட்டை நடத்திக் கொண்டிருக்கிற கொடுமைக்காரர்கள் 522 பேரை கைது செய்து அவர்கள் மேல் வழக்கு தொடரப் பட்டிருக்கிறது. 48 பேர் மிசாவிலே பிடிக்கப்பட்டவர்கள், 522 பேர் இந்தியப் பாதுகாப்பு சட்டப்படி பிடிக்கப்பட்டவர்கள், இவர்களிடமிருந்து மொத்த மதிப்பு ? கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கான உணவு தானியங்கள் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

உண்மை இப்படியிருக்க, பதுக்கல்காரர்கள், கடத்தல் காரர்கள், பணக்காரர்கள், இப்படிப்பட்டவர்கள், செல்வச் சீமான்கள் இவர்களெல்லாம் இந்த அரசுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்று, நம்முடைய நண்பர் திரு. பெ. சீனிவாசன்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

அவர்கள் சொம்ப வேதனையோடு சொன்னார்கள். அடிக்கடி நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் வடபாதி மங்கலம் தியாகராச முதலியாரைப் பற்றிப் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய இளமைக் காலத்திலே யிருந்தே திருவாரூரில் அவரை எதிர்த்து வருபவர்களில் ஒருவன். திருவாரூர் நகரமன்ற சேர்மனாக அவர் வந்துவிடக் கூடாது என்பதற்காக, அவர் சார்பில் 20 பேர் கவுன்சிலர்களுக்கு நிறுத்தப்பட்ட நேரத்தில், இவர்களெல்லாம் ஜெயித்தாலும் பரவாயில்லை, ஆனால் அவர் சேர்மனாக வந்துவிடக் கூடாது என்று, நான் மாணவனாக இருந்த அந்தக் காலத்திலேயே எதிர்த்திருக்கிறேன். அவர் போட்டியிட்ட வார்டுகளிலே—அவர் இரண்டு வார்டுகளிலே போட்டியிட்டார்—வேலை செய்து ஒரு வார்டிலே 5 வோட்டுகளில் இராமானுஜ முதலியார் என்பவரிடம் அவர் தோற்றார். இன்னொரு வார்டிலே 12 ஓட்டுகள் வித்தியாசத்தில் துரைராஜ் என்ற கிறித்தவரிடம் தோற்றார். அவர் நிறுத்தியவர்கள் ஜெயித்தார்களே தவிர, இவர் தலைவராக வர முடியவில்லை. அப்பொழுது சென்னைக்கு வந்தவர்தான் திருவாரூரை விட்டு இந்த தியாகராச முதலியார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அன்றைக்கு அப்படியெல்லாம் எதிர்த்துவிட்டு இன்றைக்கு அவருக்கு ஆதரவாக இருக்கிறீர்களே என்பதைத் தான் நாங்கள் கேட்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை, நாங்கள் என்ன மன்றாடியாருக்கா உங்களைப்போல துணை போகிறோம் விவசாயப் போராட்டத்தில் நீங்கள் போனதைப் போல? (கை தட்டல்)

திரு. கே. டி. கே. தங்கமணி : தியாகராஜ முதலியார் போராட்டம் நடத்தி ஜெயிலுக்குப் போனால் நாங்களும் அவரோடு போகவும் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தத் தொடர்பு கூட எங்களுக்கு இல்லை. எந்த ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் உடனடியாக, கம்யூனிஸ்ட் கட்சியையே எடுத்துக் கொண்டாலும் கேரளத்திலே எல்லாத் தொழில்களையும் அழித்து விட்டார்களா? தொழிலதிபர்கள் இனிமேல் இருக்கக்

கூடாது என்று எல்லாத் தொழில்களையும் அழித்துவிட்டார்களா என்ருல் இல்லே. இன்றைக்கு இந்தியாவில் சோஷலிசம் பேசிக் கொண்டிருக்கின்ற நம்முடைய நாட்டில் இந்திரா காங்கிரஸ் ஆளும் மாநிலங்களும் இருக்கின்றன, இந்திரா காங்கிரசின் துணையோடு ஆட்சி நடத்தக் கூடிய கேரளம் போன்ற மாநிலங்களும் இருக்கின்றன, அங்கே கூட பிர்லாவிற்குத் தொழிற்சாலே வைக்க அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஆகவே, தொழில் அதிபர்கள் ஒரு கட்சி ஆட்சிக்கு வரும் நேரத்தில் அவர்களுடைய தொழில் வளர்வதற்கு ஏற்படும் சாதக பாதகங்களே எடுத்துச் சொல்ல ஒரு அரசோடு தொடர்பு கொள்வது தவறு அல்ல. அதனல் அவர்களுக்கு அரசு அடிமையாகி விடுகிறது என்ருல் அது தவறு. அப்படி நாங்கள் ஏதாவது தவறுகள் எந்த நேரத்திலேயாவது செய்திருந்தால், அதைச் சொன்னல் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தியாகராஜ முதலியாரின் மீதே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தியாகராஜ முதலியாரைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னர்கள், தியாகராஜ முதலியார் பெரிய பணக்காரர், பூர்ஷுவா என்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு இந்த அரசைக் குற்றஞ் சாட்டினர்கள். யார் அந்த தியாகராஜ முதலியார்? ஆவடி சோஷலிசம் என்று பேசப்படுகிறதே, அந்த ஆவடி காங்கிரஸ் மாநாட்டை முன்னின்று நடத்தியவர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அதே தியாகராஜ முதலியார் தங்களுக்கு பொன்னடை போர்த்தினரே, அதை மறந்து விட்டீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆவடி சோஷலிச மாநாட்டை நடத்தியவரே தியாகராஜ முதலியார்தான். (குறுக்கீடு) அவர் தான் உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தினர், அண்ணு இருந்த காலத்தில்தான். நான் சொல்ல வருவது, இந்த தியாகராஜ முதலியாருக்கு எந்தச் சலுகையையாவது அளித்தோமா? அவர் பொன்னடை போர்த்தினர் என்பதற்காக 5,000 ஏக்கர் நிலத்தை நீங்கள் விதிவிலக்கோடு அனுபவித்துக் கொள்ளுங்கள், கரும்பு பயிரிட்டுக் கொள்ளுங்கள், அதற்கு

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

உச்சவரம்பு கிடையாது என்று நாங்கள் சொல்லியிருந்தால் நாங்கள் அவருக்கு ஆட்பட்டுவிட்டோம், பொன்னுடையிலே மயங்கிவிட்டோம் என்று பொருள். பழகுவது வேறு, நண்பராக இருப்பது வேறு, ஆனால் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற நேரத்திலே அதற்குத் தலைவணங்க வேண்டும், வடபாதி மங்கலமாக இருந்தாலும், கபிஸ்தலமாக இருந்தாலும், பூண்டி வாண்டையாராக இருந்தாலும், மன்னடியாராக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் சாமானியர்களுக்குத் துணை போகுமே தவிர, சீமான்களுக்கு நிச்சயமாகத் துணை போகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் சீனிவாசன் அவர்கள் கூடப் பேசினார்கள், மாதவன் சுப்பராஜா வீட்டிற்கு போகிறார் என்று. என்ன செய்வது? எதற்காக முதன்முதலாகப் போனார் என்றால் சீனிவாசனுக்குப் பெண் கேட்பதற்காகத்தான் போனார். சீனிவாசன் தான் 'சுப்பராஜா வீட்டில் பெண் இருக்கிறது, பேசச் சொல்லுங்கள், மாதவனை அனுப்புங்கள்' என்று சொன்னார்.

திரு. பெ. சீனிவாசன்: முதலமைச்சரவர்கள் சீட்டு விளையாடிக் கூடப் பார்த்திருக்கிறேன், அவர்கள் பாயிண்ட் வீக்காகும்பொழுது துருப்புச் சீட்டைப் பயன்படுத்துவார்கள். இது துருப்புச் சீட்டு இல்லை. எனக்காக மாதவன் போனது இல்லை, யாரும் போனதும் இல்லை. தொலைபேசியில்தான் பேசினார்கள். இது ஒன்றும் பெரிய விவகாரம் இல்லை. அதனால் எந்தவிதமான பாதகமோ சாதகமோ எனக்கு இல்லை. இன்றைக்கு மூன்னாள் மாவட்டச் செயலாளர் தென்னரசு அவர்கள் ஜெயலலிதாவைச் சேர்ந்தவரின் காரை தன்னுடைய உபயோகத்தில் வைத்திருக்கிறார்கள். அம்பாசிடர் காரை இரண்டு மூன்று ஆண்டு காலமாக வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர் மாதவன் போனார் என்பதை மட்டும்தான் மறுக்கிறார். நான் பேசியதை மறுக்கவில்லை. ஆக, பெண் கேட்டது உண்மை. அவர்கள் பெண் தரமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். ஏனென்றால் சீனிவாசன் ரொம்ப சோஷலிசம் பேசுகிறவர், எங்கள் பெண்ணைக்

1974 டிசம்பர் 18]

கொடுத்தால் ஒழுங்காக வாழ முடியாது, அப்படிப்பட்ட சமதர்ம வாதிக்கு எங்கள் பெண்ணை கொடுக்க முடியாது என்று பாராட்டித்தான் அந்தச் சீமான் சொன்னார்கள். (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன்: ஆளுங்கட்சி நண்பர்கள் ரொம்ப ஆச்சரியமாக கை தட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது அதனுடைய சம்பவத்தைச் சொல்லியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். என்னைப் பற்றி வந்ததால் நான் சொல்ல விரும்புகிறேன். நானே ரொம்பக் கூச்சப்படுகிறேன் என்பதோடு இன்னும் சொல்லப்போனால் நேரடியாக முதலமைச்சரவர்கள் என்னை பலதடவை வற்புறுத்தினார்கள், "திருமணம் செய்து கொள், ஏன் திருமணம் செய்யவில்லை" என்று வற்புறுத்தினர்கள். துலுக்கப்பட்டியில் தொழிலாளர் போராட்டம் நடந்தபொழுது என்னைச் சந்திக்க வந்தார்கள். நான் அப்பொழுது கைது செய்யப்பட்டிருந்தேன். அது யாரால் என்பது முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். நான் அதற்காகப் பெருமைப்படுகிறேன். பெண் எடுக்கவில்லை என்பதற்காக வருத்தப்படவில்லை. நான் இன்னும் பச்சையாகச் சொல்கிறேன், நாங்கள் தொழில் ஸ்தாபனம் வைத்திருப்பவர்கள், சீனிவாசன் தொழிலாளர் பக்கமே சென்று கொண்டிருந்தால் எல்லாம் கெட்டுவிடும் என்று அவர்கள் சொன்னதாகக் கூட அறிகிறேன், அதற்காக நான் வருத்தப்படவில்லை, அதற்காகக் கவலைப்படவும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொன்னதைத்தான் நண்பர் சீனிவாசன் அவர்களும் திரும்பச் சொன்னார்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்த வரையில் ஏழைகளுக்கு எதுவும் செய்யவில்லை என்று கூற முடியுமா? குடிசை மாற்று வாரியம் செய்யும் திட்டங்களைப் பார்த்துவிட்ட பிறகும், குடிநீர் வாரியம் கிராமப்புறத்திலிருக்கின்ற ஏழை மக்களுக்காகத்தான் என்பதை உணர்ந்தபிறகும், அரிசன நல வீட்டு வசதி வாரியம் உருவாகி அதனால் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் பயனடைகிறார்கள் என்பதை அறிந்த பிறகும், கண்ணொளி வழங்கும் திட்டத்தினால் கனதனவான்கள் அல்ல, கதியற்ற ஏழை எளியவர்களுக்கு என்பதை அறிந்த பிறகும், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தினால் பயன் பெறுகின்றவர்கள் ஏழைகள்தான் என்பதை

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

அறிந்த பிறகும், ஊனமுற்றோருக்கான திட்டத்தினால் பயன் அடைகின்றவர்கள் ஏழை எளியவர்கள்தான் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும், கைர்க்ஷாக்கள் ஒழிப்புத் திட்டத்தினால் பயன் அடைந்தவர்கள் ஏழைத் தொழிலாளர்கள்தான் என்பதைத் தெரிந்த பிறகும், அரசாங்க ஊழியர்களுக்காவ குடும்பப் பாதுகாப்புத் திட்டம் ஏழை எளிய அரசு அலுவர்களுக்குத்தான் என்பதைத் தெரிந்த பிறகும், இது சீமான்கள் அரசு என்பது சரிதானு? கோவையிலே நடந்த ஆலைத் தொழிலாளர்கள் போராட்டத்தில் அவர்களுக்கு வேறு எந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரும் முன்வராத அளவிற்கு அவர்கள் கஷ்டப் பட்ட காலத்தில் 6 இலட்சம் ரூபாயை முதலமைச்சர் நிதியிலிருந்து தந்தது இந்த அரசுதான், வேறு எந்த மாநிலத்திலும் வேலையில்லாமல் அவதிப்பட்ட தொழிலாளர்களுக்கு அந்த அரசு இப்படிப்பட்ட நிவாரண உதவியை அளித்தது இல்லை என்பதையும் நாம் நன்றுக உணர்வோம். நாடும் உணரும்.

(பிற்பகல் 1.30)

அது மாத்திரமல்ல. சிம்ப்சன் தொழிலாளர்கள் போராட்டம் எந்த அளவிற்கு வளர்ந்தது என்பதெல்லாம் தெரியும். அதற்குப் பிறகும் கூட அவர்கள் யாரும் பழிவாங்கப்படக் கூடாது என்ற கோரிக்கையின் அடிப்படையில் கிட்டத்தட்ட 120-க்கு மேற்பட்ட சிம்ப்சன் தொழிலாளர்களைப் பழி வாங்காமல் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டு, சிம்ப்சன் நிர்வாகத்தில் இருப்பவர்களுடைய மனச் கசப்பை இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருப்பதும் இந்த அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்து விடக்கூடாது.

அண்மையில் கூட, நானும் தொழிலாளர் நல அமைச்சரும் கோவையில் அமர்ந்து, காலையிலிருந்து மாலை வரை அங்கிருக்கும் ஆலை அதிபர்கள், நிர்வாகிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் பேசி எடுத்த முடிவு, மத்திய சர்க்கார் சட்டத்தால் ஏற்பட்டிருக்கும் பாதகங்களையும் மீறி இன்றைக்கு எடுத்த முடிவு பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்காக எடுக்கப்பட்ட முடிவே தவிர, சீமான்களுக்காகவோ, பெரிய பணக்காரர்களுக்காகவோ எடுக்கப் பட்ட முடிவு அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1974 டிசம்பர் 18]

திரு. கே. டி. கே. தங்கமணி: கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக ஆறு லட்சம் ரூபாய் வரை கொடுத்ததை எல்லாத் தொழிற்சங்கவாதிகளும் பாராட்டினார்கள். அது இந்த முதலமைச்சர் அவர்கள் வருவதற்கு முன்னால் செய்ததாக ஞாபகம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. தங்கமணி அவர்கள் எனக்கு ஒரு பெருமை சேர ஒத்துக்கொள்ள மாட்டார்கள். எவ்வளவு பெரிய உள்ளம், பரந்த உள்ளம், அண்ணு முதலமைச்சராக இருந்தபோது ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார். நான் முதலமைச்சராக இருந்தபோது ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்தேன். தங்கமணி அவர்கள் காதில் விழவேண்டுமென்று உரக்கச் சொல்கிறேன். அண்ணு வழியில் நடக்கவில்லை என்று சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர், பெரிய தலைவர்கூட, "எங்களுக்கு என்ன கோபம்? கருணாநிதி மீது, நாவலர் மீது எல்லாம், அவர்கள் அண்ணு வழியில் நடக்கவில்லை" என்று பேசியதாகப் பத்திரிகைகளில் படித்தேன். அதுதான் உண்மை. 1967-ல் அண்ணு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகளைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டார். 1971-ல் அவர் வழியில் நான் நடக்காமல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டேன். அந்தத் தவறுக்கான தண்டனையை—அண்ணு—இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். 'எங்களை மன்னித்துவிடு, அண்ணு' என்று மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழி இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: அண்ணு வழியில் நீங்கள் நடக்கவில்லை என்று யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் அந்த மாதிரிச் சொல்லுவது கிடையாது. எங்களுக்கு ஒரு வழி உண்டு. நீங்கள் உங்கள் வழியில் செல்லுகிறீர்கள். நீங்கள் அண்ணு வழியில் நடக்கவில்லை என்று நாங்கள் குற்றம் சாட்டவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'நீங்கள் அண்ணு வழியில் நடக்கவில்லை' என்று குற்றம் சாட்டவில்லை என்று அவர் கூறினார்; ஆகவே அண்ணு வழியில் நாங்கள் நடக்கிறோம் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார் அதற்காக நன்றி.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

உரம் பற்றி இங்கு ஒரு விவாதம் நடைபெற்றது. அதிலே சில கருத்துக்கள் பரிமாறப்பட்டபோதே விவரங்களைப் பெற்று என்னுடைய பேச்சின்போது தெரிவிக்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

நண்பர் குருசாமி அவர்கள் பேசும்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம்வரவில்லை என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அப்போது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் எந்தெந்தச் சங்கங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அந்தச் சங்கங்களுக்கு உடனடியாக உரம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த விவரங்களை நான் பார்த்தபோது திரு. குருசாமி அவர்கள் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுப்பலாபுரம், ஆண்டிப்பட்டி, ரங்கசமுத்திரம் என்றெல்லாம் இருக்கிற 14 கூட்டுறவுச் சங்கங்களில் செப்டம்பர்-அக்டோபர் மாதங்கள் வரை உரம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு இருக்கிறது. எத்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உரம் வழங்கப்படவில்லை என்ற தகவல் இல்லை.

நண்பர் சீனிவாசன் அவர்கள் முக்கியமான கேள்வியை எழுப்பினார்கள். . .

திரு. நா. வெ. குருசாமி: கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம் வரவில்லை என்று கூறவில்லை. விவசாயிகளுக்கு ஏன் ஒழுங்காக விநியோகிக்கப்படவில்லை என்றுதான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது, விவசாயிகளுக்குத் தரவில்லை என்றால் புகார் செய்யுங்கள் என்று சொன்னார்கள்.

திரு. சீனிவாசன் அவர்கள் எவ்வளவு உரம் ஒதுக்கப்படுகிறது என்று கேட்டார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். எவ்வளவு என்று கேட்டதற்குத் தாராளமாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். நிலைமை என்ன? நமக்கென்று 1974-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உரம் மெட்ரிக் டன்களில் பார்த்தால் காரிப் பருவம், ராபி பருவம் இரண்டுக்கும் 2,92,029 டன். இது ஒதுக்கப்பட்டது. ஆனால் நமக்கு மத்திய

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

சர்க்காரிலிருந்து அளிக்கப்பட்டது 1,30,500 டன்தான். ஒரு ஏக்கருக்கு விவசாயிக்கு எவ்வளவு தேவை என்று நண்பர் சீனிவாசன் அவர்கள் கேட்டார்கள். கிட்டத்தட்ட 75 கிலோ முதல் 100 கிலோ வரை தேவை. நாம் இன்றைக்குத் தனியார் தொகுப்பு அதைப்போல் அரசாங்கத் தொகுப்பு இந்த இரண்டிலும் இருந்து உரத்தை வழங்குகிறோம். அது ஒழுங்காக விநியோகிக்கப்பட வேண்டுமென்பதற்காக ஒரு கார்டு முறையை நாம் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். கார்டுகளின் மூலம் கொடுக்கும் அளவு விவசாயிகளுக்குப் போதுமானதா என்றால் இல்லை. அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் அந்தந்த நிலைமைக்கேற்ற வகையில் 25 கிலோ 50 கிலோ என்ற வகையில் பிரித்துப் பருவங்களுக்கேற்றவாறு அதை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு உரம் கிடைக்கிறது என்று நாம் திட்டவட்டமாகக் கூற இயலாது.

திரு. பெ. சீனிவாசன்: இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக விருதுநகர், சாத்தூர் பகுதியில் வறட்சி ஏற்பட்டதன் காரணமாக வறட்சி நிவாரணத்திற்காகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். வறட்சி நிவாரணப் பணி நடைபெறுகிற இடத்தில் உரத்தைக் கொடுக்கக்கூடாது என்று விவசாய இலாகா உத்தரவிட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். ஸ்டாக் இருந்தும் கொடுக்கவில்லை. ஆங்காங்கு கிணற்றில் தண்ணீர் இருக்கும் அளவுக்கு விவசாயம் செய்வதற்கு உரம் கொடுக்கலாம் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவசாயத்தையே நடத்த முடியாத இடங்களில் உரத்தை விணைக்க முடியாது. அங்கும் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்குச் சாத்தியக்கூறுகள் இருந்தால் அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் உரத்தை வழங்க அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும்.

மேலும் நமக்கு 35,000 டன்தான் கிடைக்கும். இப்போது 25,000 டன் அளவுக்குத்தான் இருக்கிறது. விரைவில் அது சம்பந்தமாக டில்லியோடு தொடர்புகொண்டு வறட்சியான இந்த நேரத்தில் ஒதுக்க டில்லி அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவும் அரசு தயாராக இருக்கிறது என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

உணவுப் பிரச்சினையில் பல கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, தோழமைக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. 12-ம் தேதி முன்வைத்த அறிக்கையின் அடிப்படையில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகளை எல்லாம் வைத்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவற்றையும் வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு இந்த நிலை குறித்து ஒரு கொள்கை அறிவிப்பையும் இந்தப் பேச்சில் நான் வெளியிட விரும்புகிறேன்.

நடப்புக் குறுவையில் தஞ்சை மாவட்டத்தில் வெளிச் சந்தையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கிய நெல்லுக்கும் மற்ற மாவட்டங்களில் 'லெவி' முறையில் வாங்கிய நெல்லுக்கும் கீழ்க்கண்ட விலையை நாம் நிர்ணயித்திருந்தோம் :—

	குவிண்டால் ஒன்றுக்கு ரூ.
மோட்டா ரகம்	85 00
நடுத்தரம்	90 00
சன்ன ரகம்	95 00
மிகச் சன்ன ரகம்	98 00

ஆனால் மத்திய அரசு கீழ்க்கண்ட கொள்முதல் விலையை நிர்ணயித்தது :—

	குவிண்டால் ஒன்றுக்கு ரூ.
மோட்டா ரகம்	74 00
நடுத்தரம்	78 00
சன்ன ரகம்	83 00
மிகச் சன்ன ரகம்	86 00

நமது அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலை 1974 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இறுதிவரை தான் கிடைக்கும் என்றும் அதற்குப் பிறகு மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலை அமல்படுத்தப்படும் என்றும் அறிவித்திருந்தேன்.

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

அதைத் தொடர்ந்து நான் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் அவர்களை நேரிடையாகவும், கடிதம் மூலமாகவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நமது மாநில அரசு நிர்ணயித்த விலை டிசம்பர் 15-ந் தேதி வரை நீடிக்கப்பட்டது.

தஞ்சையில் வெளிச் சந்தையில் வாங்கிய நெல்லுக்கும், மற்ற மாவட்டங்களில் 'லெவி' முறையில் வாங்கிய நெல்லுக்கும் நமது மாநில அரசு நிர்ணயித்த விலை டிசம்பர் 15-ந் தேதி வரை கொடுக்கப்பட்டு வந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, ஓளவு நெல்லை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு விற்ற தஞ்சை விவசாயிகளையும் லெவி முறைக்குக் கொடுத்து உதவிய மற்ற மாவட்டங்களிலுள்ள விவசாயிகளையும் தான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இதுவரையில் குறுவையில் நமது மாநிலத்தில் 1,43,000 டன்கள் கொள்முதல் ஆகியுள்ளது. இவற்றில் தஞ்சையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்—1,07,500 டன்கள். தஞ்சையில் மட்டும் ஃபுட் கார்ப்பரேஷன்—8,000 டன்கள். மற்ற மாவட்டங்களில் 27,500 டன்கள்.

16—12—1974 முதல் மாநிலம் முழுவதற்கும் மத்திய அரசு நிர்ணயித்த லெவி விலையை நமது அரசு அமல்படுத்தும். இந்த விலையோடு போக்குவரத்து போன்ற இடைநிகழ் செலவுகளுக்கு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சிறு தொகை சேர்த்துக் கொடுக்கப்படும்.

இந்த மாதம் 12-ந் தேதி நான் சட்ட மன்றத்தில் உணவு தானியம் உபரியாக உள்ள பகுதிகளில் மொத்த வாணிபம் செய்ய தனிப்பட்ட வியாபாரிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் இந்தப் பகுதிகளில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்ட லெவியை வாங்கிய பின்பு, உபரியாக இருக்கும் நெல் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் வாங்கப்படும் என்றும், மாநிலம் முழுமைக்கும் நெல், அரிசி ஆகியவற்றுக்கு அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்படும் என்றும் கூறினேன்.

உற்பத்தியில் ஒரு பகுதியை மத்திய அரசு நிர்ணயித்த விலையில் லெவிமூலம் கொடுத்து விடுவதால் எங்கெங்கே லெவி அமலில் உள்ளதோ அங்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வெளிச் சந்தையில் நெல் வாங்கப்படும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

இந்த அதிகபட்ச விலைகள் பின்வருமாறு :—

	நெல் குவிண்டால் ஒன்றுக்கு, இனிமேல், ரூ.
மோட்டா ரகம்	95 00 எனவும்
நடுத்தரம்	100 00 எனவும்
சன்ன ரகம்	105 00 எனவும்
மிகச் சன்ன ரகம்	110 00 எனவும்

நிர்ணயிக்கப்படுகிறது.

கூட்டுறவு மூலமாக உபரிப் பகுதிகளில் வாங்கப்பட்ட நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசிக்கு அதிகபட்ச விலை பின்வருமாறு :—

அரிசி கிலோ ஒன்றுக்கு

	ரூ.
மோட்டா ரகம்	1.90
நடுத்தரம்	2.00
சன்ன ரகம்	2.10
மிகச் சன்ன ரகம்	2.20

என நிர்ணயிக்கப்படுகிறது.

தனியார் வாணிபம் செய்ய அனுமதிக்கப்படும் இடங்களில் மேற்கூறிய அதிகபட்ச விலைகள்தான் பொருந்தும். இந்த விலைக்கு மேல் வாங்குவதும் விற்பதும் சட்டப்படிக் குற்றமாகும். இந்த ஆணைகளை மீறுவோர்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

'லெவி' முறையில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில் இருந்து கிடைக்கின்ற அரிசிக்குக் கீழ்க்கண்ட உயர்ந்தபட்ச விலைகள் நிர்ணயிக்கப்படுகிறது :—

அரிசி கிலோ ஒன்றுக்கு

மோட்டா ரகம்	ரூ. 1.60
நடுத்தரம்	ரூ. 1.70
உயர்ந்த ரகம்	ரூ. 1.80
சன்ன ரகம்	ரூ. 1.90

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

'லெவி' மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கின்ற அரிசியைக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்குப் பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்கப்படும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் இருப்பை அறிவிப்பதற்குள்ள வரம்பு 40 குவிண்டால் நெல்லில் இருந்து 20 குவிண்டால் என்றும், 25 குவிண்டால் அரிசியிலிருந்து 13 குவிண்டால் என்றும் குறைத்து நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நெல், அரிசி (இருப்புக்களை அறிவித்தல்) ஆணையின் படி உற்பத்தியாளர்கள், மற்றும் வியாபாரிகள் தேவைக்கு மேல் பதுக்கி வைத்திருக்கும் இருப்பை அரசு கட்டாயமாக எடுத்துக்கொள்ளும்.

அவ்விதம் எடுக்கும்போது அரசு 'லெவிக்கு' நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைதான் அளிக்க முடியும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் இருப்புகளைப் பதுக்குவதாகத் தெரிந்தால் அரசு இந்த விதியின்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

'லெவி' முறையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் கிடைக்கின்ற இருப்பை பற்றாக்குறைப் பகுதிகளில் உள்ள பொது மக்களுக்குச் சமமாகப் பங்கீடு செய்வதை உறுதிப் படுத்துவதற்காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

வரும் ஆண்டில் பெரும் பற்றாக்குறை எதிர்பார்ப்பதால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள் கிடைக்கச் செய்வதற்காகவும், பற்றாக் குறையைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் இந்த முறை கையாளப்படுகிறது.

இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தக் கொள்கைகளை அமல் செய்வதற்கு எல்லோருடைய ஆதரவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறிவிப்புகளைத் தமிழ் நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனென்றால் அவர்கள் எல்லாம் இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டுள்ள பல்வேறு பிரச்னைகளைப்பற்றி அறிந்தவர்கள்தான். அவர்கள் நம்மோடு ஒத்துழைக்க வேண்டும். வியாபாரிகளுடைய கொள்ளை லாப

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

வேட்டைக் காட்டில் பலியாகிவிடாமல் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து—எண்ணிக்கையில் நிலக்கிழார்கள் குறைவு என்று கூற முடியாது—வாங்கிப் புசிக்கின்ற பொது மக்கள் அதிகம் என்ற அந்த நிலையை உணர்ந்து ஓரளவு தியாகம் செய்கிற அந்த சித்தத்தோடு இந்தப் பணியில் இந்த அரசோடு அவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு என்று கூட்டுறவு முறையில் வாங்குகிற நெல்லுக்கு நாம் நிர்ணயித்திருத்திருக்கிற விலை குறைவானதல்ல, அது ஓரளவிற்கு அவர்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய விலைதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

இங்கு பேசப்பட்டுள்ள பலதரப்பட்ட கருத்துக்களையும் திரு. மாரிமுத்து அவர்களும் மற்ற நண்பர்களும் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களை யெல்லாம் மனதில் வைத்துத் தான், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்கூட திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், அந்த விலைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் சோம்பலும் அதிகமாகிவிட்டால் வாங்கிப் புசிக்கின்ற மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். குறைந்துவிட்டால் உற்பத்தியாளர்களுக்குக் கஷ்டம் ஏற்படும், அவர்களுக்குச் சாகுபடிச் செலவிற்கே கட்டுபடியாகாமல் போய்விடும், இவைகளை எல்லாம் நடுநிலையில் யோசித்துத்தான் இந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதிலும் கள்ளச் சந்தையில், இதிலும் கருப்புச் சந்தையில் வாங்குவதற்கு, விற்க யாராவது வந்தால் தயவுதாட்சண்யம் இல்லாமல் அரசு சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு எத்தகைமான நிலையையும் உருவாக்கி விடாத அளவிற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசோடு ஒத்துழைப்பார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். அதோடு தொடர்பான, நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிற வறட்சியை எதிர்த்துப் போராட மாண்புமிகு . . .

திரு. எஸ். வடிவேல்: நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிற அந்த நல்ல ஆலோசனைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு சர்வ கட்சிக் குழு ஒன்று அமைக்கப்படுமா?

அதுதான் நடைமுறையில் சாத்தியப்படும். இல்லை என்றால் இந்தக் காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாத ஒரு நிலை ஏற்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இன்னொரு விளக்கத்தைக் கூட முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன். நேற்று மேலவையில் நம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள்

'The area under Kuruvai in Thanjavur district this year had come down to less than four lakh acres from five lakh acres last year'.

என்று, கிட்டத்தட்ட 3½ லட்சம் டன்தான் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஐந்து லட்சம் டன். இந்த ஆண்டு அதைவிடக் குறைவாக வந்திருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு விளக்கம்,

'The yield was only five lakh tonnes as against 15 lakh tonnes last year.'

—ஒரு லட்சம் எக்கர் சாகுபடி குறைந்தால் கிட்டத்தட்ட பத்து லட்சம் டன் குறைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அங்கே கூறியதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், 90 லட்சம் டன் பற்றாக்குறை அங்கு ஏற்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அவையில் கூற வேண்டும். அதன் நிலைமை என்ன? எப்படி ஒரு லட்சம் எக்கர் சாகுபடி குறைந்தால் பத்து லட்சம் டன் விளைவு குறையும்? உண்மை நிலை என்ன? மாவட்ட ரீதியாகச் சரியான தகவல்களைச் சேகரித்திருக்கிறீர்களா?

Has proper estimate been made about the deficit in the whole State?

என்ற விளக்கத்தை நான் முக்கியமாகக் கேட்க விரும்புகிறேன். எல்லாப் பிரச்னைகளையும் கிளப்பியிருக்கிறோம் இந்த மன்றத்தில். அந்த விவரங்களை எல்லாம் இந்த மன்றத்தில் உரை அமைச்சர் அவர்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, 3.74 லட்சம் இன்றையதினம் குறைவாகச் சாகுபடி செய்திருக்கிறார்கள். நாம் எதிர்பார்த்துத் திட்டமிட்டது

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 18

ஒரு ஏக்கருக்கு 27 மூட்டைகள் என்ற அளவில் முதலில் எதிர்பார்த்தோம். அது காலம் தாழ்ந்து நடவான காரணத்தால் 18 மூட்டைகள்தான் எதிர்பார்க்கிறோம். முதலில் ஐந்து லட்சம் ஏக்கர்களில் நடவு செய்ததால் 3,68,000 டன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் விளைவு குறைந்து விட்டது. பாப்பளவும் குறைந்துவிட்ட காரணத்தால் இப்போது 2.45 லட்சம் டன்தான் அதில் காணும் என்ற நிலையில் இருக்கிறோம். நேற்று திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் கொடுக்கிற கணக்கில்கூட தப்பு இருக்கிறது. 2½ லட்சம் ஏக்கர்தான் குறுவை சாகுபடியாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஐ.ஆர். 20 தவிர மற்றவை பற்றிச் சொன்னார்கள். ஐ.ஆர். 20-யையும் சேர்த்து 3.47 லட்சம் டன் என்று கணக்குப் போட்டுச் சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தஞ்சாவூரில் பத்து லட்சம் டன் குறைகிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஈல்ட் குறைந்து போய் விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புப்பற்றி ஒரு க்ளாரிபிகேஷன் கேட்கிறேன். உபரி மாவட்டங்கள், உபரியாக விளையக் கூடிய பகுதிகளில் அரசாங்க சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், உபரி நெல்லை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்று இப்போதுள்ள அறிவிப்பில் அறிவிக்கப் பட்டது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயம் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அங்கு வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்களுக்கு விநியோகிப்பதற்காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து அதிக விலை கொடுத்து வாங்குகின்றன. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லெவி குறைந்த விலையில் வாங்குகிறது. குறைந்த விலையில் வாங்குகிறதைப் பூராவும் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி அதிக விலையில் வாங்குவதை அங்கு கொடுக்கிறீர்களா? அங்கு சாதாரண மக்கள் வாங்கிச் சாப்பிட என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள்?

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருளாதார ரீதியில் இப்போது ஒரு வருமானத்தை வரையறுத்துக் குறிப்பிட்டு அப்படிப்பட்டவர்களுக்கு பற்றுக்குறைப் பிரதேசங்களில் வழங்குவதற்கு இது பயன்படுத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நகர்ப்புறத்தில் சாதாரணமாக ஒரு பாக்டரி லேபரர்கூட மாதம் ரூ. 500 சம்பாதித்துக் கொள்கிறார். அர்பன் ஏரியாவில் ரூ. 500, ரூ. 750, ரூ. 1,000 என்று உயர்த்துவதற்கு ஒரு தனிச் சட்டம் போடுவீர்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைகளை எல்லாம் போகப் போகத் கவனிக்கலாம்.

அடுத்தபடியாக, நான் மிக முக்கியமான பிரச்னையான வறட்சிப் பகுதிகளுக்கு, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயி களுக்காக சில சலுகைகளை அளிக்க விரும்புகிறேன். ஏனென்றால் விவசாயிகள் நம்மோடு ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நாம் பக்கத் துணையாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் சில சலுகைகளை இங்கே நான் அறிவிக்க விரும்புகிறேன். (1) வறட்சிப் பகுதிகளில் அரசு கடன்களை வசூலிப்பதை உடனடியாக தள்ளி வைக்கும் (கை தட்டல்), (2) வறட்சிப் பகுதிகளில் இந்த ஆண்டு நிலவரி வசூலிக்கப்படமாட்டாது. (3) கூட்டுறவு மூலமான கடன்கள் பெற்றவர்களுக்கு வசூல்கள் செய்யப்படுவது தள்ளி வைக்கப்படும். (4) வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு மேலும் நிவாரணம் அளிக்கும் பொருட்டு மேலும் பல தீவிரமான நடவடிக்கைகளை யோசித்து வருகிறது, அவை அவ்வப் போது அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

முதல் கட்டமாக நம் மாநில அரசின் சார்பாக ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று சொன்னேன். இரண்டு கோடி ரூபாய் திட்டங்கள் வருக்கப்பட்டு செலவழிக்க இன்றைக்கு அலுவலர்கள் எல்லாம் தொடங்கி விட்டார்கள். இந்த இரண்டு

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றுகின்ற நேரத்திலே நம் வருவாய்த் துறை வாரிய உறுப்பினர்கள் மாவட்டங்களுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து இரண்டொரு நாளில் அறிக்கை தர இருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி மத்திய அரசிடம் நாம் இந்தத் திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்க இருக்கிறோம். அது எவ்வளவு என்று ஆளுக்கு ஆள் சொல்லிப் பிரச்னையை குழப்பக் கூடாது என்பதற்காகத்தான் அதைத் திட்டவட்டமாக மத்திய அரசினிடத்தில் அறிவிக்க இருக்கிறோம். நான் டில்லிக்குப் போனபோதுகூட திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து இந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இதற்கிடையில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து கோடி ரூபாய் வேண்டும் என்று பிரதமரைக் கேட்டார்கள். அது எப்படிப் போதும் என்று நண்பர் முத்துச்சாமி குறைபட்டுக்கொண்டார். இந்தத் தடவை அதையாவது கேட்டார்களே என்று சந்தோஷப்பட வேண்டும். 69-ல் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட போது பிரதமர் தமிழகத்தை வந்து பார்க்க வேண்டும் என்றபோது இங்கே வறட்சி இல்லை, பசுமையாக இருக்கிறது என்று சொன்னவர்கள் இந்தத் தடவை ஐந்து கோடி ரூபாய் முந்திக்கொண்டு கேட்டதற்காகப் பரவாயில்லை என்று நன்றி தெரிவிக்கவேண்டுமே அல்லாமல் அதற்காக நாம் குறைபட்டுக்கொள்ளக் கூடாது என்பதையும். . .

திரு. கே. டி. கே. தங்கமணி: நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் போய்க் கேட்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் உங்கள் கட்சியின் சார்பாக ஏன் கேட்டார்கள் என்றுகூடச் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏன் கேட்டார்கள் என்று யாரும் கேட்கவில்லை. குறைவாகக் கேட்டார்கள் என்று தான் குறைபட்டுக்கொண்டார்கள்.

திரு. பெ. சீனிவாசன்: லோன் கொடுப்பதைவிட வாட்டர் போர்ட் மூலமாகப் புஞ்சைப் பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். இதை வாட்டர் போர்ட் பொறுப்புக்கே ஒப்படைத்தால் நல்லதாக இருக்கும்.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்களே இங்கு இருந்து இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள், செய்கிறோம்.

திரு. எஸ். வடிவேல்: மழை இல்லாத காரணத்தாலே தஞ்சாவூர் ஜில்லாவில் தாளடி சரியாக விளைச்சல் இருக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் குத்தகை விவசாயிகள் குத்தகை அளக்க முடியாத சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அப்படி குத்தகை அளக்கவில்லை என்றால் கோர்ட்டுக்குச் சென்று நிலத்தை விட்டு வெளியேற்றி விடுவார்கள். அதற்கும் உத்தரவாதம் வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் நம்பிக்கைக்கு உரிய நான் இவைகளை எல்லாம் ஆராய்ந்து செய்கிறேன்.

தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட ஏழு லட்சம் பம்பு செட்டுகள் இருக்கின்றன. 2 லட்சத்து 89 ஆயிரம் பம்பு செட்டுகள் இருந்ததை இன்றைக்கு ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் 7 லட்சம் பம்பு செட்டுகள் என்ற அளவுக்கு நாம் உயர்த்தி இருக்கிறோம். மேலும் வேண்டும் என்ற விண்ணப்பங்கள் 1 லட்சத்து 50 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. 74-75-ல் 32 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தரத் திட்டம் இடப்பட்டு அதில் இதுவரை 16 ஆயிரத்திற்குக் கொடுக்கப் பட்டு இருக்கிறது. 75 மார்ச் மாதத்திற்குள் மீதமுள்ள 16 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்புத் தரவேண்டும் என மின் வாரியத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டு வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இவை தவிர நான் ஆரம்பத்தில் அறிவித்தபடி 60 ஆயிரம் பம்பு செட்டுகள் அமைப்பதற்கான திட்டத்தை மேற் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

இப்போது தமிழ்நாட்டில் டீசல் பம்புகள் 91 ஆயிரம் என்ற அளவில் இருக்கின்றன. மேலும் உரை உற்பத்தி கருதி டீசல் என்ஜின் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று கூறி இருக்கிறேன். இது ஆறு மாதம் ஆகுமா என்று கேட்டார்கள், ஆணை பிறப்பித்து ஆறு நாள் ஆகிறது என்பதைத்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 18

தெரிவித்துக் கொள்கிறேன். டீசல் பம்பு செட்டு வாங்குவதற்கும் நில வளர்ச்சி வங்கியில் கடன் வழங்குவதற்கு ஆறு மாதம் ஆகுமோ என்று யாரும் சந்தேகிக்கத் தேவை இல்லை என்று எடுத்துச் சொல்லி இந்தச் சூழ்நிலையில் எல்லா எதிர்க்கட்சிகளும், தோழமைக் கட்சிகளும், பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த அறிவிப்புகளுக்குப் பிறகாவது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அண்ணா நாவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் கொண்டுவந்தபோது மற்ற எதிர்க் கட்சிகள் அனைத்தும் அதை ஆதரித்து இருக்கின்றன. கடந்த 2, 3 நாட்களாக இதைப் பற்றிய விவாதம் நல்ல முறையில் இங்கே நடைபெற்று இருக்கிறது. ஆனால் இப்போது கடைசியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது நம்முடைய குறைகளுக்கு எல்லாம் சரியான பதில் தருவார் என்று எதிர்பார்த்தோம். நம்முடைய குற்றச்சாட்டுக்களுக்குச் சரியான முறையில் பதில் சொல்லுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறு பதில் சொல்லுவதற்குப் பதிலாக வழக்கமாக அவருக்கே உரிய முறையில் தன் பேச்சுத் திறமையைக் காட்டுகின்ற முறையில் இங்கே பேசி, சொன்ன குற்றச்சாட்டுகள் எதற்கும் பதில் சொல்லாமல் அமர்ந்து விட்டார்கள். அவர் பேசுகின்றபோது அவருடைய பேச்சின் பெரும் பகுதியை கதை சொல்லுவதில் கழித்து விட்டாரே தவிர எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதில் சொல்லவில்லை.

இன்றைக்கு நாட்டில் உள்ள நிலைமை என்ன? ஆலடி அருணா சொன்னார்கள் அலிபாபாவும் 40 திருடர்களும் என்கிற மாதிரி நிலைமை இருக்கிறது என்று சொன்னபோது முதல்வர் அவர்கள், நான் அந்தக் கதையை இரு பூராவும் திருப்பித் திருப்பிப் படித்ததாகவும் அதில் வருகின்ற அலிபாபா நல்லவன்தான்

1974 டிசம்பர் 18] [திரு. கோவை செழியன்]

என்றும் சொல்லியிருக்கிறார்கள். நேற்று முழுவதும் பைல்களைப் படித்துப் பார்த்தேன் என்றால் நாம் பெருமைப் படலாம். ஆனால் பைலை படிப்பதற்குப் பதில் கதைப் புத்தகம் படித்து இருக்கிறார்கள். அவர் லாஜிக் படித்து இருப்பார் என்று கருதுகின்றேன். அவர் அலிபாபாவாகத் தன்னை மாற்றிக்கொண்டால் லாஜிக்படி பார்த்தால் மற்றவர்கள் அவர் சொன்ன பிற்பகுதியைத் தான் சாரும். இந்த விளக்கத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் சொல்லிவிட்டார் என்ற காரணத்திற்காக இதைச் சொல்லித் தீரத்தான் வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நாட்டில் ஒரு பரபரப்பு ஏற்பட்டு இருக்கிறது. அந்தப் பரபரப்பு ஏற்பட்டு இருப்பதற்குக் காரணம் வெறும் பைல்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அது வெறும் பைல்களினால் அல்ல. இன்றைக்குத் தமிழ்நாட்டில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்து இருக்கிறது என்று சொன்னால் நாட்டு மக்கள் பரபரப்போடு எதிர்பார்ப்பது இந்த மத்திரிசபையில் இருக்கிற அத்தனை பேரும் ராஜினாமா செய்து விடுவார்கள். அதைத் தான் எதிர்பார்த்தார்கள். அதனால் ஏற்பட்டதுதான் பரபரப்பு.

(பிற்பகல் 2.00)

இந்த விவாதம் வருவதற்குள்ளாக முதலமைச்சரவர்கள் தன்னுடைய அமைச்சரவையை அழைத்து வைத்து, நாம் நாட்டு மக்களுடைய நம்பிக்கையின்மையைப் பெற்றுவிட்டோம்; ஆகவே, அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குள்ளாக நாம் மெஜாரிட்டியாக இருந்தாலும் நம்பிக்கையை இழந்துவிட்ட காரணத்தால் இராஜினாமா செய்துவிட வேண்டுமென்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் அவர்களுக்கு இருக்கின்ற மெஜாரிட்டியை வைத்துக் கொண்டு அந்த நல்ல காரியத்தைச் செய்யாமல் விட்டு விட்டார்கள்.

இன்றைக்கு முதலமைச்சரவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லுகின்ற போது, எதிர்க்கட்சித் தரப்பிலே ஒன்று, இரண்டு என்று சொல்லப்பட்டதற்குச் சாட்டுகளுக்குப் பதில் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஒன்றுக்குக்கூட பதில் சொல்லாதது பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது.

[திரு. கோவை செழியன்] [1974 டிசம்பர் 18

நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது 9 லட்சம் டன் அரிசி தமிழ்நாட்டு எல்லைக்கப்பால் கடத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர்கள் கணக்குப் பார்த்து லட்சம் வாரிகள் தேவைப்படும் என்று சொன்னார்கள். நான் 9 லட்சம் டன் கடத்தப்பட்டது என்று சொன்னது ஒருசில நிமிடங்களில் அல்லது சில மணி நேரத்தில் அல்லது ஒரே நாளில் போய்விட்டது என்று பொருளல்ல. அத்தனையும் கேரளாவுக்கு ஒரே நாளில் போய்விட்டது என்ற பொருளில் நான் சொல்லவில்லை. பல ட்ரிப்புகளில் போயிருக்கிறது. அல்லது பார்டரில் கொண்டு குவித்து வைத்துவிட்டு, கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சென்றிருக்கலாம். எப்படியோ தமிழ்நாட்டிலிருந்து 9 லட்சம் டன் அரிசி வெளியே போயிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல முடியாமல் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வார்த்தை ஜாலத்தினால் மடக்கிவிடலாம் என்று நினைத்துக் கொண்டு வார்த்தைகளை வைத்து விளையாடியிருக்கிறார்கள். வார்த்தை ஜாலத்தினால் எதிர்க்கட்சிகளை மடக்கிவிட முடியாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய கணக்குப்படி 55 லட்சம் டன் உற்பத்தியாகி இருக்கிறது. அதிகமாக இருந்ததால் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்தோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். 55 லட்சம் டன் உற்பத்தியான பிறகு இன்றைக்குத் தமிழ்நாட்டில் பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்று கேட்கிறேன். அதற்குச் சரியான பதில் சொல்லவில்லை.

என்ன காரணத்தால் பற்றாக்குறை ஏற்பட்டது? தமிழ் நாட்டிலிருந்து கடத்தப்பட்டிருக்கிறது. தவறான பெர்மிட் மூலம் கடத்தப்பட்டிருக்கிறது என்று அடுக்கடுக்கான குற்றச் சாட்டுக்களை இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு வருகின்றது கோபம்.

இந்த அரசு இன்றைக்கு ஆலை முதலாளிகள் பக்கம் இருக்கிறது. பெரிய தரும்பாலை முதலாளிகளில் பக்கம் இருக்கிறது. கறுப்புப்பண மன்னர்கள் பக்கம் இருக்கிறது.

1974 டிசம்பர் 18] [திரு. கோவை செழியன்]

இப்படி நாங்கள் சொல்லும்போது கறுப்புப் பணத்தைக் கட்டுப் படுத்துகின்ற அதிகாரம் எங்களுக்கு இருந்தால் கறுப்புப் பணத்தை வைத்திருக்கிறவர்கள் வெளியே போவார்களா என்று சொன்னார்கள். அப்படியானால் உங்களிடம் இருப்பவர்கள் எல்லாம் கறுப்புப்பணம் வைத்திருப்பவர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? கறுப்புப்பணம் வைத்திருப்பவர்களைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் இருந்தால் அவர்கள் என்னிடம்தான் இருப் பார்கள் என்று நீங்கள் ஒப்புக்கொள்வதாக இருந்தால், உங்களிடம் இருப்பவர்கள் எல்லாம் கறுப்புப்பணம் வைத்திருக் கிறவர்கள்தானே என்று கேட்க விரும்புகிறேன்.

ஆலை அதிபர்களுக்கு உதவி செய்கிறீர்கள். கேட்டால் தொழிலாளர் நன்மைக்காகச் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். சக்தி பைப்ஸ் நிறுவனத்திற்கு எத்தனை லட்சம் ரூபாய் தந்தீர்கள்? ஏன் அந்த அவசியம் ஏற்பட்டது என்று கேட்டால் தொழிலாளர்கள் வாடுவார்கள் என்று சொல்கிறீர்கள். அப்படி யானால் அந்த சக்தி பைப்ஸ் நிறுவனத்தைத் தேசியமயமாக்கி விட்டு, 20 ஆண்டுகளில் அவர்களுக்கு உரிய தொகையைக் கொடுத்திருக்கலாமே.

அதேமாதிரி தூத்துக்குடியில் ஸ்பிக் நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் சிதம்பரம் செட்டியாரிடம் எப்படிப் போயிருக் கிறது. அதற்குத் தேவையான நிலத்தை எல்லாம் அரசாங்கம் விலைக்கு வாங்கப் பணத்தை அவர்களிடம் தந்தார்கள். ஆதை மூலதனமாகப் போட்டு, ஏறத்தாழ 86 கோடி ரூபாய்க்குமேல் மூலதனமுள்ள ஸ்பிக் நிறுவனம். இன்றைக்கு எம். ஏ. சிதம்பரம் செட்டியாரிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது. அவர் அதை வைத்து 'கௌத் இந்தியா கார்ப்பரேஷன்' போன்ற பல உப நிறுவனங்களை நிறுவி, அவைமூலம் இன்றைக்குக் கொள்ளை யடித்துக்கொண்டிருக்கிறார். இது பணக்காரர்களுக்கு நீங்கள் செய்கின்ற உபகாரமாகாதா? இப்படிப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

ஒரு சந்தர்ப்பத்தில் நியாகாஜ முதலியார்மீது நடவடிக்கை எடுக்கவில்லையா என்று சொன்னார்கள். அதைப்பற்றி சொல்ல . . . . .

[1974 டிசம்பர் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்திற்குப் பதில் சொல்லும் போது, ஏற்கெனவே எழுப்பப்பட்டுள்ள பிரச்னை களைப்பற்றித்தான் சொல்லலாம். புதிய பிரச்னைகளை எழுப்பி, மேலும் ஒரு விவாதத்தை உண்டுபண்ணக்கூடாது.

திரு. கோவை செழியன்: நான் புதிதாக ஒன்றும் சொல்ல வில்லை "தியாகராஜ முதலியார் எனக்கு விரோதி" என்று சொன்னார்கள். சொம்ப சந்தோஷம். டில்லி சுப்ரீம் கோர்ட்டில் நம்முடைய முன்னாள் தலைமைச் செயலாளர் கேஸ் போடும்போது, நீதிபதியிடம் ஒரு ஸ்டேட்மென்ட் தந்தார். தஞ்சாவூர் கூட்டுறவு சொசைட்டியில் தியாகராஜ முதலியார் 2 கோடி ரூபாய்க்கு ஊழல் செய்துவிட்டார். அதை போலீஸ் மூலம் விசாரிக்க வேண்டுமென்று நோட் அனுப்பினேன்; அப்போது விவசாய அமைச்சர் என்னிடம் வந்து, முதலமைச்சர் இதை விரும்பவில்லை; அதனால் நீங்கள் அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னார்; நான் முடியாது என்று சொன்னேன். இதுவும் ஒரு காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ராயப்பா கூற்று எதுவும் சரியல்ல என்பதால் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது.

திரு. கோவை செழியன்: கேஸ் தோற்றுவிட்டாலும் அந்த ஃபைல்களை நீதிபதி மறுக்கவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, தவறான தகவலைச் சொல்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டில், வி. எஸ். தியாகராஜ முதலியாருக்குச் சாதகமாகச் செய்யப்பட்டது என்று தலைமைச் செயலாளர் சொன்னது தவறு என்று நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் சொன்னது தவறு என்றால் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறீர்களா?

திரு. கோவை செழியன்: ஃபைல் வரட்டும்; அப்புறம் சொல்கிறேன்.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் புது கருத்துக்களைச் சொல்லி, இன்னொரு புதிய விவாதத்திற்கு இடம் கொடுக்க வழி ஏற்படுகின்றது. உங்கள் பதிலில் புதிய பிரச்சனைகளை எழுப்பக்கூடாது. ஏற்கெனவே சொன்னதைப்பற்றிமட்டும் குறிப்பிடுங்கள்.

திரு. கோவை செழியன்: நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், நாங்கள் இந்த அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த எங்களை ராஜிதாமா செய்ய வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எங்கள்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களா?

திரு. பெ. சீனிவாசன்: இந்த ஆட்சி பணக்காரர்கள் பக்கம் இருக்கிறது என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. இல்லை என்பது முதலமைச்சருடைய பதில். அந்தப் பதிலுக்குப் பதில் சொல்லும்போது ஒன்றிரண்டு தகவல்களைக் கூடுதலாகச் சொல்லித்தான் ஆகவேண்டும். அப்படி வரும்போது அது எப்படிப் புது பிரச்சனையாக வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுக்குப் பதில் என்ற முறையில் கூடுதலாகச் சொல்ல வேண்டுமென்றில்லை, நீங்கள் கூடுதலாகச் சொல்வதற்கு ஆளும் தரப்பிலிருந்து இன்னொரு பதில் சொல்ல வேண்டிவரும். நீங்கள் தியாகராஜ முதலியார் ஆனீர்கள். அதற்கு ஒரு பதில். இப்படி ஒவ்வொன்றாக வந்துகொண்டே இருக்கும். ஆகவே, புதிதாக ஒன்றும் சொல்லக் கூடாது என்று சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த விஷயத்தில் ஒரு தெளிவான முடிவை செய்துகொள்வது நல்லது. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில், நாங்கள் புதுக் கருத்து ஒன்றையும் சொல்லவில்லை. ஒரு

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 டிசம்பர் 18

விவாதத்தை எழுப்பினேம். அதற்குப் பதில் கொடுத்தார்கள். அவர்களுடைய பதில் தவறு என்பதற்கு பல ஆதாரங்களைத் தேடித் தருவதில் தவறில்லை. அதனால் புதுக் கருத்தைச் சொல்வதாகாது. ஆதாரமாக ஒன்றிரண்டைச் சொல்வது புதுக் கருத்து, அப்படிப்பட்ட புதுக்கருத்துக்களைச் சொல்லக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? இது என்ன ரூலிங்? லோக் சபையிலும் இந்தமாதிரி ரூலிங் இல்லை. எங்குமே இல்லாத ரூலிங்காக இருக்கிறது உங்களுடைய ரூலிங். பதிலுக்குப் பதிலாக ஒன்றைச் சொல்கிறோம். அதைத்தவிரப் புதிதாக ஒன்றும் சொல்லக்கூடாது. அவ்வளவுதான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் கேட்பது, வி. எஸ். தியாகராஜ முதலியார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ராயப்பா எழுதியதை நான் மறுத்து எழுதினேன் என்பது செழியன் அவர்களுடைய வாதம்.

திரு. கோவை செழியன்: நீங்கள் வாய் மூலமாக விவசாய அமைச்சரிடம் சொல்லி, அவர் முன்னாள் தலைமைச் செயலாளர் ராயப்பாவிடம் சென்று சொன்னார். அதைத்தான் நான் சொன்னேன். நீங்கள் எழுதி அனுப்பியதாக நான் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ராயப்பா சொன்ன பதில் தவறு என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்து இருக்கிறது. போதுமான ஆதாரங்களுடன் தீர்ப்பளித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய ரூல் 75-3-இல்

"A member when replying shall confine himself to matters raised during the debate and shall not introduce new debatable matter."

Dr. H. V. HANDE: Yes. I shall read:

'A member when replying shall confine himself to matters raised during the debate and shall not introduce new debatable matter.'. I am surprised and shocked on your interpretation.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராயப்பா பைல் டிபேடபிள் மாட்டர் இல்லையா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழாது என்று நீங்கள் சொல்ல முடியாது. வி. எஸ். தியாகராஜ முதலியாரைப்பற்றி மட்டும் முதலமைச்சர் சொன்னார் அதோடு திரு. கோவை செழியன் குறிப்பிட்டு விட்டுவிட வேண்டும்.

திரு. கோவை செழியன்: இப்படிக் குறுக்கிடுகிற நேரம் எனக்கு வீணாகிறது. இதையும் சேர்த்துத்தாவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கிடுகின்ற நேரத்தை எல்லாம் சேர்த்துத்தான் நேரம் ஒதுக்கப்படுகிறது. இன்னும் பதினைந்து நிமிடங்களுக்குள் முடித்துவிடுங்கள்.

திரு. கோவை செழியன்: முதலமைச்சர் பேசும்போது "பணக்காரர்களுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை" என்று சொன்னார்கள். அவர்களைச் சுற்றிக்கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் பணக்காரர்கள்தான். உங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். காரைக்குடியில் சா. கணேசனை எதிர்த்து தேர்தலில் முத்தையா செட்டியார் போட்டி போட்டார்கள். அப்போது அண்ணா அவர்கள் முத்தையா செட்டியாரை எதிர்த்தார். ஆனால் இவர்கள் முத்தையா செட்டியாரை வைத்து அவர் மகனுக்குத்தான் பட்டமளிப்பு விழா என்று வைக்கிறார்கள். திரு. ப. உ. சண்முகம் அவர்கள் 'எனக்கும் மற்றவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை' என்று இங்கே சொன்னார்கள். என்னிடம் அவர்களோடு இவருக்குள்ள தொடர்பை எடுத்துக் காட்ட நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. 14—9—1974-இல் அவருக்கு ஒரு விழா ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த விழாவில் திரு. கிருஷ்ணமூர்த்திக்கே தெரியும்—குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட பலபேர் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

[1974 டிசம்பர் 18

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : எல்லோரும் பேசி, ரிப்போ பண்ணின பிறகு புதிய குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டு போனால்?. . . . There is no end at all. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ரிப்போ பண்ணி மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே :. அவர் மறுத்ததை இவர் இல்லை யென்று வாதம் செய்கிறார். இதில் என்ன தகராறு இருக்கிறது? இப்படிச் சொன்னால் நடக்காது.

மாண்புமிகு போலவைத் தலைவர் : நடக்காது என்றெல்லாம் சொன்னால் அந்த தகராறுக்குப் பதில் அளிக்க வேண்டியிருக்கும்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, நான் சப்ஜெக்டுக்கு வெளியில் போகமாட்டேன். பேசிய பேச்சுகளுக்குத்தான் பதில் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு போலவைத் தலைவர் :. இன்னொரு தகராறைச் சொன்னால் அந்தத் தகராறுக்குப் பதில் அளிக்க வேண்டியிருக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : How to disprove it? இப்படி எங்கள் உரிமையைப் பறிக்கக் கூடாது.

திரு. கோவை செழியன் :. அவர்களுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சம்பந்தம் இருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன்.

எஜெண்டுகளிடம் இருந்து 3½ கோடி வசூல் செய்யவில்லை என்று உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார் அந்தப் பெரிய மனிதர்கள்? எதனால் அவர்களைக் கைது செய்யவில்லை. என் நடவடிக்கை எடுக்கவில்லையென்று கேட்டேன். அதற்குப் பதில் சொல்லவில்லை.

அடுத்து மாணவர்களது போராட்டங்களைப்பற்றி பேசினேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வில்லை. பூந்தமல்லி ரோடில் உள்ள கண் இழந்த மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள், அவர்களை அடித்து இருக்கிறார்கள் என்று சொன்னேன்.

1974 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அன்றைக்கு அதைச் சொல்லும்போதே நான் குறுக்கிட்டுச சொல்லியிருக்கிறேன், அவர்கள் 6 கோரிக்கைகளை வைத்தார்கள். 5 கோரிக்கைகள் நிறை வேற்றப்பட்டுவிட்டன, 6-வது கோரிக்கை ப்ரின்சிபாலே மாற்ற வேண்டுமென்பது. அவரே ஓய்வு பெற வேண்டிய நிலையில் இருப்பதால் அதைப் பார்த்துச் செய்யலாம் என்று சொன்னேன். அவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள் என்று அன்றைக்கே நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : கண் இழந்த மாணவர்களை உள்ளே அடைத்து அடித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி நடக்கவில்லை. அது வெறும் அரசியல் பிரச்சினை. அரசியல் பிரச்சாரம்.

திரு. கோவை செழியன் : நடக்கவில்லையென்று சொல்லும் போது நாட்டு மக்கள்தான் பார்த்துக்கொள்ளவேண்டும். எனக்கு ஒன்றும் தெரியாது.

முதலமைச்சர் அவர்கள் புதிய அறிவிப்புகளைச் சொன்னார்கள். விலை உயர்வுக்குக் காரணம் தமிழ்நாட்டில் இருக்கிற அரிசியை —நெல்லை எப்படி கொள்முதல் செய்கிறார்கள், விநியோகிக் கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். இவர்களுடைய தீர்வாகத் தோளாடுதான் இதற்குக் காரணம். தமிழ்நாட்டில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஏஜெண்டுகள் மூலமாகக் குறைந்த விலையில் வாங்குகிறார்கள். அவர்கள் லாபமாக விற்கிறார்கள். ஆனால் ஆந்திராவை எடுத்துக்கொண்டால் புட் கார்ப்பரேஷன் வாங்குகிறது. ஸ்டேட் கவர்ன்மென்டின் அனுமதி இல்லாமல் வெளியே போகாது. கோவாப்பரேடிவ் சொசைடிகள், ஏஜெண்டுகள் மூலமாக எல்லாம் இவர்கள் வாங்குவதுதான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணம்.

அதுமட்டுமல்ல. இன்றுள்ள லெவி முறையை எடுத்துக் கொள்ளுங்கள். குடியானவர்கள் கஷ்டப்படுகிறார்கள். விவரம் தெரியாதவர்கள் லெவி முறையைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். லெவி 36 மூட்டை ஒரு ஏக்கருக்கு வருகிறதென்று வைத்துக்கொண்டால் ஒரு ஏக்கர் உற்பத்தி செய்தால் ரூ. 946.55 பைசா வருகிறது. 3 ஏக்கர் வைத்தால் 913 ரூபாய் வருகிறது. 5 ஏக்கர் வைத்தால் 201

ரூபாய்தான் கிடைக்கும். ஏழரை ஏக்கருக்குமேல் என்றால் 158 ரூபாய் நஷ்டம் வருகிறது. இப்படி நஷ்டம் வருகிறது என்று சொன்னால் எந்தக் குடியானவன் நெல்லைப் போடுவான்? புல்லைப் போடலாமா, வெற்றிலையைப் போடலாமா என்றுதான் பார்ப்பான். தஞ்சாவூரை மனதில் வைத்துக்கொண்டு நீங்கள் போட்டுப் பிரயோசனமில்லை. எம்.ஏ.பி., பி.ஏ.பி., இரண்டு வருஷத்திற்கு ஒரு தண்ணீர் இடங்கள் எல்லாம் இருக்கின்றன. இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை நெல் போடுகிறவர்களை—அவர்கள், அவர்களைச் சுற்றியுள்ள ஆட்கள் சாப்பிட்டாகவேண்டும்—லெவி தஞ்சாவூர் அளவுக்குக் கொடுக்கச் சொன்னால் கோயம்புத்தூர் பக்கத்தில் உள்ளவர்கள் வாழ முடியாது. இதை என் பேச்சின் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். இந்த ஆட்சியில் இருப்பவர்கள் அத்தனைபேரும் ஊழல் செய்கிறார்கள். சுற்றி இருக்கிறவர்கள் எல்லாம் ஊழல் செய்கிறார்கள். இதற்குப் பல உதாரணங்களை என்னால் கொடுக்க முடியும். இங்கே இருக்கிற அமைச்சர்களுடைய பி.ஏ. க்களை எடுத்துக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அமைச்சர்களுடைய பி.ஏ.க்களைப்பற்றி சொன்ன வார்த்தைகளை அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

திரு. கோவை செழியன்: டீசல் ஆயில் என்ஜின்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்ட சில கம்பெனிகளிடம் இருந்துதான் வாங்கவேண்டும் என்கிறார்கள். அவர்கள் டீசல் என்ஜின் வெளியில் 3,000 என்றால் அவர்களது விலை 4,200 என்கிறார்கள். சர்க்கார் ஆயிரம் அவர்களுக்குத் தந்துவிடுகிறது. விவசாயிகளுக்கு ரூபாய் 200 நஷ்டமாகிறது. அதே என்ஜினை வெளியில் இவர்கள் ஆயிரம் கொடுத்தால் மூவாயிரத்திற்கு விவசாயிகளால் வாங்கிக்கொள்ள முடியும். ஆகவே எந்தக் கடையில் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்று இவர்கள் உத்தரவு போட்டிருந்தால் நான் அதைப் பாராட்டியிருப்பேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1974 டிசம்பர் 18] [திரு. கோவை செழியன்]

ஆகவே, இந்த நாட்டில் நாட்டு மக்கள் அத்தனைபேரும் இந்த ஆட்சி கீழே இறங்கவேண்டுமென்று ஒரே குரலில் சொல்கிறார்கள். நீங்கள் சிரிக்கலாம், உங்களுக்குப் பலம் இருக்கிறது, உங்களுக்குப் பின்னால் ஓட்டுப்போடப் போகிறார்கள், ஜெயிக்கப் போகிறீர்கள். இந்தத் தீர்மானத்திலே, என்று. ஆனால், நாட்டு மக்களுடைய குமுறல் உங்களுக்குக் கேட்கவில்லை, அவர்கள் பசியால் துடிக்கிறார்கள்.

கஞ்சித் தொட்டி வைக்க வேண்டுமென்று சொன்னேன், அதை நீங்கள் செய்யவேண்டும், விவசாயிகளுக்கு நிவாரணம் தர வேண்டும் என்று சொன்னேன், ஏழைகளுக்கு நிவாரணம் தர வேண்டும் என்று சொன்னேன்.

தாடு உங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டது, நாட்டு மக்கள் உங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள். நீங்கள் இந்த ஓட்டிலே வெற்றி பெற்றுவிட்டாலும், நாட்டு மக்களுடைய உள்ளத்திலே நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள். நாட்டு மக்களுடைய நம்பிக்கையை இழந்த விதத்திலே தோற்றுவிட்டீர்கள். ஆகவே நீங்கள் இராஜினமா செய்யுங்கள் என்று சொன்னேன். ஆனால் நீங்கள் இராஜினமா செய்யப் போவதில்லை. ஆகவே, நாங்கள் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்கிறோம்.

(அண்ணா தி.மு.க. முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : . . . . . பதில் சொல்லாத காரணத்தால், நாங்களும் வெளியேறுகிறோம்.

(ஸ்தாபனக் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவாதம் ஆரம்பமே ஒரு விஷயம் முக்கியமாகக் கொண்டு வரப்பட்டது, எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைப் பற்றி. அநேகமாக எல்லா உறுப்பினர்களும் பேசி இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட நேரம் பதில் சொன்னார். ஆனால், அதைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஆகவே, குற்றச்சாட்டுகளைப் பற்றி நேரடியாக அவர் சொல்லாமல், திசை திருப்பிச் சொன்னார். அவர் சொன்ன பதில் திருப்தியளிக்கவில்லையென்ற காரணத்தால் நாங்கள் வெளியேறுகிறோம்.

[1974 டிசம்பர் 18

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

திரு. வ. ஆர். மாரிமுத்து :. பல குற்றச்சாட்டுகளுக்கு ஒழுங்கான முறையிலே அரசுத் தரப்பிலே பதில் சொல்லாத காரணத்தால் நாங்களும் வெளியேறுகிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

திருமதி சத்தியவாணிமுத்து :. இந்த 4 தினங்களாகச் சட்ட மன்றத்தில் எழுப்பட்ட எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. எனவே ஊழல் இருக்கிறது என்பதைத்தான் அவர் ஒத்துக்கொள்கிறார். ஆகவே, இந்த ஊழல் ஆட்சியை எதிர்த்து நானும் கூட வெளியேறுகிறேன்.

(திருமதி சத்தியவாணிமுத்து வெளியேறினார்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் பேசி விட்டு விசைலில் சாப்பிடப் போவதற்கு எங்களுக்கும் நீங்கள் அனுமதி கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின், கண்டனத் தீர்மானத்தின் நிலை என்ன என்பதைப்பற்றி கூட கவலைப்படாமல் வேகமாக வெளியேறி இருக்கிறார்கள்.

எதற்கும் பதில் சொல்லவில்லையென்று சொன்னார்கள். கடந்த 4, 5 நாட்களாக கூறு கூறுக, அவ்வப்போது, அவர்கள் குற்றச் சாட்டுகளைச் சொன்ன நேரத்தில் எல்லாம் நானும், தொடர் புடைய அமைச்சர்களும், சட்ட அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்களும் அன்றைய உணவு அமைச்சர்—இன்றைய பொதுப் பணித் துறையமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் காட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் நல்ல பதில்களைத் தந்திருக்கிறோம். அவர்கள் பைலைக் கேட்டு, அதிலே ஒன்றும் இல்லையென்று தெரிந்த பிறகு, மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தால், ஏதோ குற்றமாக ஆகிவிடும், ஊழலை நிரூபித்துவிடலாம் என்கின்ற அந்தக் கருத்திலேதான் அவர்கள் அதையே ஒரு வாதத்திற்கு ஒரு சாதனமாகக் கொண்டார்கள். நான், அதைப்பற்றி விரிவாகச் சொல்லாததற்குக் காரணமே, இந்த மன்றத்திலே 4, 5 நாட்களாக

1974 டிசம்பர் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

விரிவாக பதில் சொல்லப்பட்டு, அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையென்று திரூபிக்கப்பட்டுவிட்டன. ஆகவே தான் தான் மீண்டும் என்னுடைய பதிலில் அதை ஒரு பொருளாக எடுத்துக்கொள்ளவில்லை மற்ற பொருள்களோடு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செழியன் அவர்கள் இந்த மன்றத்திலே பேசுவதை மறுநாள் மறுக்கிறார், நான் 3 நாட்களுக்குள் என்று சொல்லவில்லையென்று. 3 நாள் இடைக்காலத்திலே 9 இலட்சம் டன் வெளியேதியிருக்கிறது. 3 நாட்களுக்கிடையே அந்த உத்தரவைப்போட்ட, அந்த இடைக்காலத்திலே என்று சொல்லியிருக்கிறார். 'தஞ்சாவூரிலேயிருக்கிற அரிசி எல்லாம் வெளியே போகலாம் என்று அனுமதி தந்தார்கள். 3 நாட்களுக்குப் பின்னாலே அதை நிறுத்தி வைத்தார்கள். இந்த இடைக்காலத்திலே ஏறத்தாழ 9 இலட்சம் டன்கள் தமிழ் நாட்டிலேயிருந்து வெளியே போய்விட்டது' என்று இதே மன்றத்திலே பேசி குறிப்பிலே வந்திருக்கிறது. இப்பொழுது 5 நாள் என்று சொல்லவில்லை, பல நாட்கள், பல மாதங்கள் என்று சொன்னேன் என்று சொல்கிறார். இப்படிப்பட்ட அடிப்படையற்ற, ஆதாரமற்ற, அவதூறு சொல்ல வேண்டுமென்பதற்காக, ஊழல், ஊழல், ஊழல் என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசைக் கவிழ்க்கலாம், இந்த அரசு மீது நம்பிக்கையில்லையென்ற எண்ணத்தை உருவாக்கலாம் என்று முயற்சிக்கிறார்கள். மக்கள் அவ்வளவு ஏமாந்தவர்கள் அல்ல என்பதை நாடு திரூபித்து வருகிறது என்ற அளவோடு நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழித்த உறுப்பினரவர்களும், கண்டனத் தீர்மானத்தை முன்மொழித்த உறுப்பினரவர்களும் பேரவையில் இல்லாத காரணத்தால், அவை திரும்பப் பெறப்பட்டவனவாகக் கருதப்படுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.25 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.